# வெளிச்சம்

ஆடி-ஆவணி 2002
விலை 30/=



சங்கிலி மனையின்
எஞ்சிய எச்சம்



மந்திரி மனையின்
இன்றைய நிலை



தேசியத்தலைவர்
பிறந்த இல்லம்



வரலாற்றின் ஆதாரங்களும்
தொன்மையின் எச்சங்களும்
தொலைந்து போகின்றன
காப்பது எம் கடமை.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்.

## போரும் போராட்டமுமாகிய ஈழத்தமிழர் வாழ்வின் புலப்பாடுகளாக எமது வெளியீடுகள்

### வெளிச்சம் சிறுகதைகள்



ஈழத்தின் 15 படைப்பாளிகளின்
வெளிச்சத்தில் பிரசுரமாகிய
தேர்ந்த சிறுகதைகள்
விலை ரூபா 100.00

### செம்மணி



செம்மணி புதைகுழிகள்
தமிழரின் வாழ்விலும் வரலாற்றிலும்
ஏற்படுத்திய உணர்வுகளை
வெளிப்படுத்தும் 24 பேரின் கவிதைகள்.
விலை ரூபா 50.00

### வாசல் ஒவ்வொன்றும்



போராட்ட வாழ்வின்
மெய்ப்பகுதிகளாகவும் போர்
வாழ்வின் அனுபவ வெளிப்பாடகவும்
அமைந்த 19 படைப்பாளிகளின் சிறுகதைகள்
விலை ரூபா 175.00

### வெளிச்சம் பவழ இதழ்



போரும் போராட்ட வாழ்வுமாக
அமைந்த தமிழீழத்திலிருந்து பன்னிரண்டு
வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும்
வெளிச்சம் சஞ்சிகையின் 75 ஆவது
சிறப்பிதழ் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள்
முதல். தமிழினத்தினதும் தமிழகத்தினதும் பல
படைப்பாளிகள் பலரும் எழுதியுள்ள
படைப்புக்களை தாங்கி 300 பக்கங்களில்
விரிந்த சிறப்பிதழ் விலை ரூபா 300.00

### வெளிச்சம் கவிதைகள்




மூத்த கவிஞர்கள் முதல்
புதிய இளைய தலைமுறைக் கவிஞர்கள்
வரையான 55 பேரின் கவிதைகள்
விலை ரூபா 100.00

### ஆனையிறவு



தமிழீழ விடுதலைப்
போராட்டத்தின்
ஒரு முக்கிய நிகழ்வாகவும்
விடுலைப்புலிகளின் வீரம் செறிந்த
போராட்டத்தின் வெற்றிச்சின்னமாகவும்
அமைந்த ஆனையிறவு வெற்றியைப்பேசும்
கவிதைகள் விலை ரூபா 125. 00

### வாசல் ஒவ்வொன்றும்



தமிழகத்தில்
வெளியிடப்பட்டிருக்கும்
இரண்டாம் பதிப்பு இந்தியா
விலை ரூபா 60. 00

### முத்தமிழ் விழா மலர் 1991



விடுதலைப்புலிகள்
கலைபண்பாட்டுக்கழகம் நடாத்திய
முத்தமிழ் விழாவையொட்டி
வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஈழத்தின்
அறிஞர்கள், படைப்பாளிகள்
பலரும் தம் படைப்புக்களை
இம் மலரில் முன்வைத்துள்ளனர்.
விலை ரூபா 200.00

### முத்தமிழ் விழா மலர் 1992



ஆழகிய ஓவியங்களுடன்
ஈழத்தமிழர் வாழ்வினதும்
போராட்டத்தினதும் வெளிப்பாடுகளைப்
பேசும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள்
போர்க்காலப் பதிவுகள் எனப் பலவற்றையும்
ஒருங்கிணைத்து உருவாக்கிய மலர்
விலை ரூபா 300. 00

**தொடர்புகளுக்கு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நடுவப்பணியகம்**
**நாலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு,**




தமிழீழ தேசியத் தலைவரின்
கருத்துரையுடன்




சிறுகதைகள்


| | |
|---|---|
| தமிழ்க்கவி | 18 |
| ஆதித்தநிலா | 28 |
| முல்லை யேசுதாசன் | 31 |
| கருணைரவி | 38 |
| ஆதிலட்சுமி சிவகுமார் | 50 |

களவெளிப்பாடுகள்


| | |
|---|---|
| மலைமகள் | 05 |
| அ.இரவி | 21 |
| தூயவன் | 26 |

கட்டுரைகள்


| | |
|---|---|
| அ.அன்ரனி | 35 |
| ஞாபகன் | 48 |
| அன்ரன் அன்பழகன் | 54 |




கவிதைகள்



| | |
|---|---|
| மாலிகா | 03 |
| புதுவை இரத்தினதுரை | 08 |
| திருநகரூர் ஜெகா | 16 |
| நிலாந்தன் | 17 |
| ஆதவன் | 17 |
| நா.கானகன் | 20 |
| அலையிசை | 20 |
| தானா விஷ்ணு | 23 |
| தமிழ்மாறன் | 30 |
| அம்புலி | 37 |
| த.அகிலன் | 40 |
| ந.சத்தியபாலன் | 41 |
| இத்தாவில் க.சிவராசா | 41 |
| மா.பகீரதன் | 42 |
| வளநாடன் | 53 |
| தி.ரமணன் | 53 |


நேர்காணல்


| | |
|---|---|
| வ்ண்ணராமேஸ்வரன் | 10 |








| | |
|---|---|
| தூது | 24 |
| உயிர்ப்பினை நோக்கி | 56 |
| இன்னும் பிறவும் | |




தொகுப்பும்
அமைப்பும்
ஆசிரியர் குழு

அட்டைப்படம்
அமரதாஸ்

அட்டை வடிவமைப்பு
சசி
(கனடா)

புகைப்படங்கள்
விடுதலைப்புலிகளின்
புகைப்படப்பிரிவு - மகளிர்

அச்சமைப்பு
நிலா பதிப்பகம்
பிரதான சாலை
கிளிநொச்சி

வெளியீடு
விடுதலைப்புலிகள்
கலைபண்பாட்டுக்கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

கடிதங்கள், படைப்புக்கள்,
மற்றும் தொடர்புகட்கு
*வெளிச்சம்*
*விடுதலைப்புலிகள்*
*கலைபண்பாட்டுக்கழகம்*
*நடுவப்பணியகம்*
*புதுக்குடியிருப்பு-04*

*விடுதலைப்புலிகள்*
*கலைபண்பாட்டுக்கழகம்*
*யாழ் மாவட்டச்செயலகம்*
*பொற்பதிவீதி*
*கோண்டாவில்.*

# தலைவாசல்

இதழ் 78 ஆடி-ஆவணி, 2002

## மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002

### உரிமைக்கும் சமாதானத்திற்குமான புரிந்துணர்வின் வாசல்

இது அமைதிக்காலம்; சமாதானத்தீர்வை நோக்கி நகரும் காலம்; பேச்சுவார்த்தைக்காலம் எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாட்களை புரிந்துணர்வுக்காலம் எனலாம். புரிந்துணர்வை முழுமையாக அர்த்தப்படுத்துவதிலும் அதனை வளர்த்துச் செல்வதிலும் தான் முன் சொல்லப்பட்ட எல்லாமே சாத்தியப்படும்; வெற்றியையும் தரும்.

மக்களின் மனங்களிலும் தீர்வு, அமைதி, சமாதானம், பொருளாதார வளர்ச்சி, புதிய வாழ்க்கை என்ற நல்நோக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் இருக்கின்றன. உள்நாட்டு நெருக்கடியென்பது எவ்வளவு இலகுவில் சர்வதேச உள்நுளைவுக்கு வாய்ப்பளித்து விடும் என்ற அச்சமும் மக்களுக்கு உண்டு.

எல்லாவற்றையும் ஒரு நல்நிலைக்கு கொண்டுவருவதாயின் முதலில் புரிந்துணர்வு வேண்டும். அது வலுப்பெறவும் வேண்டும் என்பது முக்கியம்.

இந்த உண்மைக்கமைய புரிந்துணர்வினை வலுப்படுத்துவதற்கும் எமது தேசிய உரிமைப் போராட்டத்தைப் பேசுவதற்குமாக விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம், நிதர்சனம், தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் **"மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002"** என்னும் மாநாடொன்றை நடத்தவுள்ளது. "மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டமும். கலை இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்" என்ற மையப்பொருளில் நிகழவுள்ள இந்த ஒன்றுகூடல் பல்வேறுபட்ட விடயங்களைப் பற்றிய சிந்தனைகளையும் முன்வைத்து பேசவிருக்கிறது.

கடந்தகால வாழ்விலிருந்தும் அனுபவத்திலிருந்தும் பெற்ற பாடங்களுடன் ஒரு மகிழ்காலத்தினுள் நுளைவதற்கான வாசலே இந்த மாநாடு. நீண்டகாலமாக நிலவிவந்த இடைவெளிகளை இந்த ஒன்றுகூடல் நிரப்பும்.

நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் கலைஞர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்களுக்கிருக்கும் பொறுப்பை இந்த மாநாடு சுட்டி நிற்கும்.

எமது விடுதலைப்போராட்டத்தையும் அதன் உயரிய பெறுமானத்தையும் யுத்த நாட்களிலும் யுத்தகளத்தினதும் வாழ்வனுபத்தையும் வெளிப்படுத்தும்.

தமிழ், முஸ்லிம், சிங்கள கலைஞர்களும் அறிஞர்கள், ஊடகவியலாளர்களும் தமது சிந்தனைகளை இந்த மாநாட்டில் காலத்தின் நிலையுணர்ந்தும் தேவையுணர்ந்தும் பேசுகிறார்கள்.

இவையனைத்தும் நமக்கு முன்னாலுள்ள காலப்பணி, சமூகப்பொறுப்பு என்ற உண்மையுணர்ந்து தமது பங்களிப்புகளை நல்கவேண்டும். பங்கேற்புச் செய்யவேண்டும்.


எல்லோர் நெஞ்சிலும் புதிய வாழ்வை நோக்கிய புரிந்துணர்வு ஏற்படும் விதமாக இந்த மாநாட்டை நிறைவாக்கவேண்டும்.

ஒரு காலத்தினதும் தேசத்தினதும் அவசியமான தேவையின்பாற்பட்ட புரிந்துணர்வை வளர்த்தெடுப்பதே நோக்கமென கொள்ளும்போது பெரும் வெற்றி சகலருக்கும் கிட்டும்.


நூற்றுக்கணக்கான அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களுடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்களும் கலந்துகொள்ளும் இந்த ஒன்றுகூடல் தேசமெங்கும் மெய்மைச்செய்திகளையும் புதிய சேதிகளையும் எடுத்துச்செல்ல வாய்ப்பளிக்கிறது.

நல்நோக்குடன் மலரும் இந்த வாய்ப்பை வரவேற்று அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

என்விதி எனக்கென்றாயிற்று
நீயேன் அழுகின்றாய் அதற்கு?
கடலிழுத்துச் செல்லும் எனக்காகக் கலங்காதே.
துயரேதுமின்றி நதிநீரிறங்கி நீராடு நீ.
மற்றவரின் துயருக்கெல்லாம்
அழுவதே வழக்கென்றிருந்தால்
கண்ணீரில் முக்குளித்திருக்குமே உலகு.
எனக்காக நீயும்
உனக்காக நானும் அழுவதெனில்
சந்தோஷ மெங்கே தலைவிரிக்கப்போகிறது
அழுவதை நிறுத்தி
துயரிற்றிருக்கத் துணிக.
நான் கடல்மீண்டு வருவனெனும் கனவிலிருக்காதே.
என்னைத் துடைத்தெறிந்து விட்டு
எழுது புதுப் பாடல்.
இந்தா மூச்சுத் திணறத் தொடங்கிறது.
வாழ்வின் இறுதிக் கணத்தின் வதை சூழ்கிறது
எனினும் வாழ்ந்த உலகெண்ணிச் சிரிப்பு வருகிறது.
பொய்பூசிய மனிதருள்ளும்
நீயிருந்தாய் மெய்யாடை தரித்து.
வசந்தம் தொலைத்த ஒற்றைமரமாய்
இருந்த என்னில் படர்ந்தாய் கொடியாய்.
எத்தனை பசிய மரங்களிருந்தன பக்கத்தில்
அத்தனையையும் எறிந்துவிட்டு
பற்றிப் படர என்ன கண்டாய் என்னில்?
அடி பைத்தியக்காரி
இப்போதும் பின்தொடர்ந்து வந்து
ஏன் கையசைக்கிறாய் கரையில் நின்று?
அலையழிக்கும் மணல் எழுத்தாய்
என்னை அழித்துவிட்டுப் போ.
ஊருக்குள் புகுந்துகொள்.
உலகறியா எம் உறவை எரித்துவிட்டு
மனதில் என் நினைவு அகற்றி
நிர்மலியாக இருப்பாய் நீ
என்மீது வைத்த அன்பு உண்மையானால்.



- மாலிகா



## சந்தர்ப்பங்கள் வரும் போது நாம் சமாதான வழியைக் கடைப்பிடிக்க பின்நின்றதில்லை

"

எமது போராட்டம் சமாதான
வழியிலேயே ஆரம்பித்தது.
எங்களுக்கு முந்திய தலைவர்கள் கூட
சமாதான வழியிலேயே
தீர்வைக்காணபோராட்டத்தை
மேற்கொண்டார்கள். முயற்சிகளை
ஏற்படுத்தினார்கள்.
ஆனால் அவர்களின் சமாதான
முயற்சிகளுக்கு பலன் கிட்டவில்லை.
தமிழ் மக்களின் உரிமைகள்
மறுக்கப்பட்டு இனவாதம்
கட்டவிழ்த்து
விடப்பட்டதனையடுத்தே
ஆயுதப்போராட்டத்தில் இறங்கினோம்.
சந்தர்ப்பங்கள் வரும்போது நாம்
சமாதான வழியை கடைப்பிடிக்க
பின்னின்றதில்லை.
நல்நோக்குடன் மலரும் இந்த
வாய்ப்பை வரவேற்று அனைவரும்
ஒத்துழைக்க வேண்டும்.

"

தமிழீழ தேசிய தலைவர்
**மேதகு.வே.பிரபாகரன்** அவர்கள்
(10.04.2002 அன்று வன்னியில் நடந்த
ஊடகவியலாளர் மாநாட்டில்)

# புதிய கதைகள் புதிய நிஜங்கள்

## 1

யாரிடமும் அச்சமில்லை. போர் அனுபவம் அதிகமில்லை. எனினும் விடுதலை முனைப்பு அதிகமாக இருந்ததால்; இதைப்பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. கோப்பாய் கிரேசரடியில் அவர்கள் எதிரிக்கான வலையை விரித்தார்கள்.

(இதைத்தொடர்ந்து தாயகமெங்கும் இழுத்து விரிக்கப்பட்ட வலைகளில் சிக்கிய அசோகச்சக்கரம் சீராக உருளமுடியாமல் திணறியது தனிக்கதை.)

(Operation Bavan) பவான் நடவடிக்கையைத் தொடங்கிய இந்திய அமைதி காக்கும்(?) படையினர் யாழ்ப்பாண நகரப்பகுதியிலிருந்து நகரத்தொடங்கி விட்டிருந்தனர். இதைச்சற்றும் எதிர்பார்த்திராத மக்கள் நம்ப முடியாத அதிர்ச்சியுடன் வாசல்களைப் பூட்டிக் கொண்டு வீடுகளுக்குள் அடைந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஒரு அணி - 2ம் லெப் மாலதி, கஸ்தூரி, தியா விஜி இன்னும் சிலர் - கோப்பாய் வெளியில் எதிர் நடவடிக்கைக்குத் தயாராகித் கொண்டனர்.

ஐப்பசி மாதம் மழை காலம், எனினும் அன்று வானத்து நட்சத்திரங்கள் இருட்டடிப்புச் செய்யப்படவில்லை. நிலவு, தலைக்கு மேலேயே மிதந்து கொண்டு இருந்தது. கண்களைக் கூசச் செய்யும் ஒளியுடன் கோப்பாய் - கைதடி வீதியில் திரும்பின. காவற் கடமையில் நின்றவர் யாருடைய ஊர்தியென்று அறிவதற்காக எழுந்து நின்றார். வந்த ஊர்திகள் சடுதியில் நின்றன. அதில் வந்த இந்திய இராணுவத்தினர் குதித்தனர். நூறு நரிகள் சேர்ந்து ஊழையிடுவது போன்றதொரு ஒலியை எழுப்பியவாறு இவர்களை நோக்கி ஓடிவந்த படையினரை இவர்களின் துப்பாக்கிகள் வரவேற்றன.

இரவின் அமைதியைக் குலைத்தவாறு அந்த வெளியில் சண்டை நடந்தது. இந்திய இராணுவம் தன் வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு பெண்கள் படையோடு மோதியது. பெண்கள் பற்றி அவர்களிடமிருந்த கற்பனைத் தத்துவங்கள் உடைந்து விழுகின்ற அளவுக்கு அந்தச் சண்டை நடந்தது.

தனது தொடையில் ஏற்பட்ட காயத்தின் நிலைமையைப் புரிந்துகொண்ட மாலதி தன் கையிலிருந்த சுடுகலனை வீரவேங்கை விஜியிடம் கொடுத்தார்.

"இதைக் கொண்டுபோய் அண்ணையிட்டைக் குடு. நான் குப்பி கடிக்கப்போறன்"

மாலதியை விட்டுவிட்டுப் போக விஜி தயாராக இல்லை.

" நான் உன்னை விடமாட்டன் மாலதி"

விஜி மாலதியை இழுத்துப்போக முயற்சித்தார். ஆனால் மாலதியின் உறுதியே வென்றது.

"இதைக் கொண்டு போய் அண்ணையிட்டைக் குடு"

அந்த நேரம் மிகவும் அரிதாகவும், எல்லோரது நேசிப்புக்கும் உரியதாக இருந்த M16ஐ தங்களெல்லோருக்கும் தருவதற்காக தலைவர் எடுத்த முயற்சிகளைப் புரிந்து கொண்டதனால், அன்றைய சூழலில் உலகின் நான்காவது வல்லரசுடனான போரில் அந்த ஆயுதம் ஆற்ற வேண்டிய பங்களிப்பைப் புரிந்து கொண்டதனால் வந்த வார்த்தைகள்.

"நான் உன்னை
விடமாட்டன் மாலதி"
- விஜி

" இதைக் கொண்டுபோய்
அண்ணையிட்டைக் குடு"
- மாலதி



**மலைமகள்**
24,25-08-02

## 2

திண்ணை மாநாட்டில் ஒன்று கூடியவர்களுக்கு இதை நம்பச் சற்றுச் (சற்று என்ன சற்று? முற்றுமுழுதாகவே) சிரமமாகவே இருந்தது.

"உந்தப் பெரிய இந்தியன்காரன் நடுச்சாமத்தில முன்னாலை வந்து நிக்கேக்கை உந்தப் பொடிச்சியள் அவங்களைச் சுட்டிருக்குங்களோ? "

சீக்கியப் படைப்பிரிவினரின் அரைப் பனை உயரமும் எங்கள் பெண்களின் ஐந்தடி உயரமும் அவரைக் கேள்வி கேட்க வைத்தன.

ஏற்கனவே லெப். கேணல் விக்ரர் அவர்கள் வீரச்சாவடைந்த மன்னார் - அடம்பன் சண்டையில் மகளிர் படையணி பங்கேற்றிருந்ததான கதைகளை அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்த போதும், அவர்களது ஐயங்கள் தெளியவில்லை. கேள்விகளோடு மாநாடு தொடர்ந்தது.

புதிய கதைகள்
புதிய நிஜங்கள்

3

அங்கம் - பருத்தித்துறை துறைமுகத்தடி
காலம் - 1993 நடுப்பகுதி
பார்வையாளர்கள் - துறைமுகத்தடியில் நின்ற திண்ணை மாநாட்டாளர்கள்
நடிகர்கள் - கடலில் கைகளை வீசிக் கால்களை அடித்தவாறிருந்த சிலதலைகள்.

காட்சி புள்ளிகளோ, கோடுகளோ விழாமல் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. கடலில் கொஞ்ச மனிதர்கள் நீந்துகின்றார்கள்....... அது தெரிகிறது. யார் அவர்கள்?அரைக்காற் சட்டைகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். "ஆம்பிளையளோ?' தலையிலே முடி கொண்டையிட்டிருப்பது போலவும் தெரிகின்றது.

"பொம்பிளையளோ?"

"என்ன பொம்பிளையளோ?"

"அதுவும் காற்சட்டையளோடையே?"

"கடல் பொங்கி ஊரை அழிக்கிறதுக்குத்தான் உந்தக் கூத்தெல்லாம் நடக்குது"

"அப்படியெண்டா வெள்ளைக்காரனின்ரை கடலுமெல்லே பொங்கவேணும்.அங்கை எல்லாரும்தானே குளிக்கினம்?"

இது ஒருவர்

"அது ரோசமில்லாத கடல். பேசாமக் கிடக்கும். எங்கட கடல் அப்பிடியே"

இது மற்றவர்.

திண்ணை மாநாட்டாளர்களின் அனல் பறந்த கருத்துப் பரிமாற்றல்களுக்குகிடையில் கடற் புலிகள் மகளிர் படையணி ஐந்து மைல் நீச்சலை நிறைவு செய்து, தனது கடல் நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டிருந்தது. மாநாடு முடிவுறவில்லை.

> அவர்களின் படகுகள் காற்றைக் கிழித்தவாறு நீர் மட்டத்தை விட்டு மேலெழும்பியவாறு எதிரிப்படகுகளை மிரட்டிக் கொண்டிருந்தன.



கிளாலிக் கடல் நீரேரியில் பயணம் செய்த மக்களைத் தாம் விரும்பிய நேரங்களிலெல்லாம் கொன்று குவித்துக் கொண்டிருந்த சிறீலங்காக் கடற்படைக்குச் சவால் விட்டவாறு கடற்புலிகளின் படகுகள் விரைந்து கொண்டிருந்தன.

மக்களுக்கான பாதுகாப்புப் பணியில் லெப். கேணல் பாமா தலைமையிலான படகுத் தொகுதி ஒன்றும் ஈடுபட்டவாறிருந்தது. அவர்களின் படகுகள் காற்றைக் கிழித்தவாறு நீர் மட்டத்தை விட்டு மேலெழும்பியவாறு எதிரிப்படகுகளை மிரட்டிக் கொண்டிருந்தன. மக்களை நெருங்கமுடியாத சிறிலங்காப் படகுகள் தள்ளியே நின்று கொண்டன.

இருளில் கரும்புள்ளிகளாக விரைந்து சாகசம் காட்டுகின்ற இவர்களின் படகுகளில் போகின்றவர்களை உற்றுஉற்றுப் பார்த்தவாறு சாவு அச்சமற்ற நிம்மதியுடன் திண்ணை மாநாட்டாளர்கள்.ஒரு தொடுகையில் (இயந்திரப் படகொன்றுடன் கயிற்றால் பிணைக்கப்பட்டு கட்டி இழுக்கப்படும் ஏனைய பயணிகள் படகுகள்) பயணம் செய்வதை கண்டுகொண்ட கிளாலிக் கடல் நீரேரிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. தனது அலைக் கரங்களை அடித்தவாறு அது உருண்டு உருண்டு சிரித்தது. நடந்த புதினத்தை கேள்வியுற்ற மீனினங்களும் திண்ணை மாநாட்டாளர்களின் முகங்களைப் பார்ப்பதற்காக நீர் மட்டத்துக்கு மேலே துள்ளித் துள்ளிக் குதித்தன.

4

தென்மராட்சியில் முக்கிய நகர்களில் ஒன்றான சாவகச்சேரி எங்களிடம். இழந்த நகரை மீளப் பிடிப்பதற்கான கடும் முயற்சியில் சிறிலங்காப் படையினர். மட்டுப்படுத்தப்பட்டளவில் நின்ற எம்மவர்களுக்கும் மலையான பலத்துடன் நின்ற படையினருக்குமிடையே அன்று கடும் மோதல் தொடங்கியது.



கட்டிடக் காட்டிடையே பக்கம் பக்கமாக இருதரப்பும் நின்று மோதிக் கொண்டன. ஒவ்வொரு காப்பரணும் தமது நிலைமையைச் சொல்லிச் சொல்லிச் சண்டைப் பிடித்தது.

'எங்களில் ஒரு ஆள் காயம்'
'ரெண்டு பேர் வீரச்சாவு'
'நானும் காயம்'
'.............................................'
'.............................................'

பெரும்பாலான எமது காப்பரண்கள் விழுந்துவிட்டன. விழுகின்ற கடைசி நிமிடத்திலும் எதிரிகளை விழுத்தின. அந்த ஒரு காப்பரண் மட்டும் விழவேயில்லை. அங்கிருந்து படையினரை நோக்கி எதிர்தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்குள் நின்றது மேஜர் கயல்விழி

கயல்விழி இன்னமும் முழுமையாகப் படையினரால் சுற்றிவளைக்கப்படவில்லை. எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவர்கள் வருவதற்கு ஒரு பாதை இன்னமும் பாதுகாப்பாகவே இருந்தது.அந்த ஒரு பாதையால் வெளியேறி வருமாறும், உதவி அணிகளை அழைத்து, அணிகளை மீளமைத்துக் கொண்டு போய் அடித்து இடங்களைப் பிடிக்கலாம் என்றும்

வழங்கப்பட்ட கட்டளையை கயல்விழி ஏற்றுக்கொள்ளவில்லை.

"கடைசி வரைக்கும் சாவகச்சேரியை விடவேண்டாம்" என்ற தனதுஅணியினரின் கடைசி வேண்டுகோளையே அவர் ஏற்றுக்கொண்டார்.

"நான் பின்னுக்கு வரமாட்டேன். அந்தப் பாதையால ரீமை உள்ளுக்கு அனுப்புங்கோ. நான் நிக்கிற இடத்திலிருந்து அடிச்சுக்கொண்டு போய்ப் பிடிப்பம். விட்டா, திரும்பிப் பிடிக்கிறது கஸ்ரம்" - இது கயல்விழி.

உதவியணிகள் அரியாலையிலிருந்தும், வாதரவத்தையிலிருந்தும் கொழும்புத் துறையிலிருந்தும் வந்து சேரத் தாமதமாகும் என்பது கயல்விழிக்குத் தெரியாததல்ல. எவ்வளவு நேரமானாலும் அவர்கள் வந்து சேரும்வரை தமது நிலையைத் தக்கவைத்திருப்பதென கயல்விழியும் கயல்விழியோடு நின்றவர்களும் முடிவெடுத்தனர்.

இப்போது இவர்களைச் சூழவும் படையினர்தான்.

"ரவுண்ட் - அப்புக்குள்ள நிக்கிறம். நாங்கள் சமாளிப்பம். நீங்க ஆக்களைத் தாங்கோ."

இவர்கள் நின்ற வீட்டின் மதிலோடு படையினரின் தலைகள் தெரிந்தன.

"மதிலோடை வந்து நிக்கிறவங்களைச் சுட்டுக்கொண்டிருக்கிறம். ஆக்களை அனுப்புங்கோ."

மதிலைக் கடந்து உள்ளே குதித்த படையினர் மதிலுக்கும் இவர்கள் நின்ற காப்பரணுக்குமிடையே வெட்டப்பட்டிருந்த நகர்வகழிக்குள்ளே இறங்கினார்கள்.

"பக்கத்தில வந்திட்டாங்கள். நாங்கள் சுட்டுக்கொண்டிருக்கிறம்."



படையினரின் PK LMG அடி இவர்களின் காப்பரண் சுவரை அதிர வைப்பது கயல்விழியின் தொலைத்தொடர்புக் கருவியூடே எல்லோருக்குமே கேட்டது.

மிக நெருங்கிய படைவீரன் ஒருவன் இவர்கள் வீசிய குண்டு வெடித்து சிங்களத்தில் அலறியதும் கேட்டது. அவர்களின் நிலைமை எல்லோருக்குமே விளங்கியது.

சாவகச்சேரி நகரை இழக்கக்கூடாது என்ற முடிவில் உறுதியோடு கடைசி வரை முயன்ற கயல்விழியின் குரல் கடைசியாக ஒலித்தது.

"எங்களுக்குக் கிட்ட அவன் வந்திட்டான். இனி எங்கடை தொடர்பு உங்களுக்கு இருக்காது"

காற்று தனது வீரவணக்கத்தைச் செலுத்தியது.

## 5

அந்தத் தந்தையால் நம்பவேமுடியவில்லை.

எனது மகள் வீரச்சாவா? அதற்குள்ளாகவா? இப்போதுதானே போனாள்? அதற்குள் எப்பிடி அவள் ஒரு மேஜராக...?

அவர் தனது கேள்விகளைக் கேட்டு, அழுது ஆறுவதற்கு அவரது மகளின் வித்துடல் அங்கே வரவில்லை. அவரின் மகளை அறிந்தவர்கள் வந்தார்கள். அந்தச் சண்டையில் அவரது மகள் வெளிக்காட்டிய ஆற்றலைச் சொன்னார்கள்.

என் மகளா? என் மகளா?

கேள்வி அவரிடம் மட்டுமல்ல அவரருகிலிருந்த திண்ணை மாநாட்டாளர்களிடமும் தான். அவர்களுக்கு எல்லாமே புரிந்ததுபோலவும் இருந்தது. ஒன்றுமே புரியாதது போலவும் இருந்தது. கொஞ்சக் காலமாவே நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் கேள்விகளுக்கும் ஆச்சரியங்களுக்கும் அப்பாற்பட்டதாகவே இருப்பதை அவர்களும் உணர்ந்து தான் இருந்தார்கள்.

எப்போது இந்த அனைத்துக்கும் அப்பாற்பட்டவைகள் நிகழத் தொடங்கின? அங்கயற்கண்ணி காலத்திலிருந்தா?

புதிய கதைகள்
புதிய நிஜங்கள்

## 6

கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் அம்மா அழுது ஓய்ந்தபின் மகளை நினைத்து ஆச்சரியப்படத்தொடங்கினார்.

"நாப்பத்தைஞ்சு அடி ஆழக் கடலிலை தனியப் போனவளோ? அவ்வளவு ஆழத்தில நிலம் இருட்டா இருக்குமே? என்னெண்டு போனவள்? என்னோடை இருக்கும்மட்டும் இரவில வீட்டுக்கு வெளியாலை போறதுக்கு நான் வேணும் அவளுக்கு. அவள்... என்னெண்டு...?"

அப்போதும் அருகிருந்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்த திண்ணை மாநாட்டாளர்கள் இப்போது எல்லாவற்றையும் கடந்த நிலைக்கு, இயல்புநிலைக்கு வந்துவிட்டிருந்தனர்.




திண்ணையில் கூடியிருந்து கதைத்துக்கொண்டிருந்தவர்களின் கவனம் வீட்டுக்குள் கேட்ட சத்தங்களால் கலைந்தது. நிலத்தில் தடியால் அடிக்கும் ஒலி.

அவர் திடுக்கிட்டு எழும்பினார். ஏதேனும் பூச்சி பொட்டோ? இவன் சின்னவன் கண்டுவிட்டு அடிக்கிறானோ? பெரிய பிள்ளை மூலை மேசையில் இருந்து படிக்கிறாள். பயந்துவிடப் போகிறாள்.

பாய்ந்தடித்து வீட்டினுள் ஓடியவர் திடுக்கிட்டு அலறினார். குறை உயிரில் கிடந்த பாம்பைத் தடியில் தூக்கியப்படி மகள் வந்து கொண்டிருந்தாள்.

"மண்ணெண்ணையை எடுத்து வாங்கோ. கொழுத்துவம்"

என்றாள்.




## திருவிழா முடிந்த மூன்றாம் நாள்

ஆரவாரமும்
அரோகராச் சத்தமும்
கூவியழைத்த வியாபாரக் குரல்களும்
ஓய்ந்துபோக
வேலவன் வீதி வெறிச்சோடிக் கிடக்கிறது.
சனநரல் வடிந்த நல்லூர்த் தெருக்களில்
மீண்டும் சுகம்வரத் தொடங்கிவிட்டது.
காற்றில் எழுவதும், குந்துவதுமாக
கடலை சுற்றிய கடதாசிகள் சில.
ஒருவரற்று உறைந்திருக்கும் வீதிகள்
எத்தனை அழகு.
இன்னும் அகற்றப்படாமல்
"இங்கே துப்புங்கள்" வாளிகள்.
மனிதவெட்கையற்ற வெளிகளே
ரம்யமானவை.
எவரும் வரமாட்டார்களா என்னிடம் என்பதாய்
தேர்முட்டிப்படிகள் பெருமூச்செறிகின்றன.
தினமும் வெளிவீதியுலாவிய அசதியில்
வள்ளி வலிதாளாமல் பள்ளியறையில்.
தந்தையைக் காணாதிருந்த தவிப்படங்க
தெய்வானை இந்திரலோகம் போய்விட்டாள்.
முருகன் இன்னும் விளையாட்டுப் பிள்ளைதான்
மயிலேறிப் போனான் காலையில்
கோயில் திரும்பவில்லை இன்னும்.
ஆலயக் கதவில் பூட்டு.

குருக்கள் வீட்டில் அன்ரனா திருப்பப்படுகிறது
பொதிகைக்காக.
மேற்கு வீதியில் முத்துவிநாயகரும்
ஈசானமூலையில் மனோன்மணியம்மனும்தான் பாவம்
இனி எவர் வந்து தேடுவர் இவர்களை.
பாதாளக்கிணற்றில் சாகஜம் புரிந்தோர்
பலகைகளைக் கழற்றிக்கொண்டு
போயிருப்பர் வல்லிபுரக் கோயிலுக்கு.
பாம்புக்காரன் எங்கு போயிருப்பான்?
திருவிழா என்றாலே களியாட்டம் என்றாயிற்று
எல்லோரும் ஊமையராகி
உண்டியலிலேயே கவனமாயிருக்கின்றனர்.
பிரசங்கக்காரர்களுக்கு பொன்னாடை கிடைத்திருக்கும்
தடவியபடியிருப்பர் சந்தோஷத்தில்.
பூனூல் மார்பில் துலங்க
ஒரு பிராமணன் கொத்துரொட்டி கொத்தினானே
அவன் புரட்சிக்காரன்.
தலைவணங்கலாம் அந்தத் தகுதிக்கு.
உடல் வருத்தி உழைத்த பணம் நிலைக்கும்.
பூஜை செய்வதிலும் இது பெரிய தொழில்.
திலீபனின் நினைவுத்தூபியிருந்த இடத்தில்
சிதிலமாகிய கற்கள் மீதாயினும்
யாரேனும் பூக்கள் வைத்திருப்பார்களா?
இடித்தவனை விடுங்கள்
தூபித்துண்டங்கள்மீது ஏறியிருந்தவர்களை
என்ன செய்யலாம்?
இம்முறை நல்லபடியாக நடந்து முடிந்ததாம்
நல்லூர்த் திருவிழா.
கிழடொன்று கூறிச் சென்றதைக் கேட்க
சிரிப்பு வந்தது.

புதுவை இரத்தினதுரை



## நேர்காணல்
# வர்ணராமேஸ்வரன்

கேட்பவரைத் தம்வசமிழுத்து மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும் மந்திரக் குரலுக்குரியவர் வர்ணராமேஸ்வரன்.ஈழத்து இசைக்கு ஒரு புதியவரவாக வந்திருக்கும் இவர் சாஸ்திரியஇசையிலும், மெல்லி சையிலும் நிறையப் பாடிவருகிறார். யாழ்ப் பாணம் இராமநாதன்நுண்கலைப்பீடத்தில் இசைக் கலைமாணிப்பட்டத்தைப் பெற்றவர். இவரின் தந்தையார் சங்கீதவித்துவான் வர்ணகுலசிங்கம் அவர்கள் இராமநாதன் இசைக்கல்லூரியில் மகாராஜபுரம் சந்தானம் அவர்களிடம் கற்றவர். இளமையிலேயே இசைப்பரிச்சயமும் பின்புலமுமுடைய ராம், நல்லை முருகன் பாடல்கள், திசையெங்கும்இசைவெள்ளம், என இரண்டு பாடல் ஒலிநாடாக்களைத் தந்து புகழ் பெற்றவர். உலகமெங்குமுள்ள தமிழர் நன்கறிந்த மாவீரர் துயிலுமில்லப் பாடலான "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே....." என்ற பாடலைப் பாடி தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர். அத்துடன் வேறு பல தாயகப்பாடல்களையும் பாடி இருக்கிறார்.



இசைப்பாடல்களைப் பாடுவதுடன் மட்டுமல்லாது மிருதங்கம், வாய்ப்பாட்டு, கீபோட், ஒலிப்பதிவு என எல்லாவற்றிலும் தன் ஆற்றலையும் திறனையும் வெளிப்படுத்தி கவனத்தை ஈர்த்துள்ளார். இப்பொழுது புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் ராமேஸ்வரன் அங்கே 'வர்ணம்' எனும் இசைக் கல்லூரியையும் ஒரு ஒலிப்பதிவுக் கூடத்தையும் கனடா வாழ்தமிழ் மக்களின் இசை ஆர்வத்துக்காக நடத்தி வருகிறார். புலம்பெயர்ந்து போனாலும் தமிழ்த்தேசியத்தின் மீதும் விடுதலையின் மீதும் தணியாத தாகத்துடன் செயற்பட்டு வருகிறார்.

> "இன்றைய ஈழத்தமிழிசை ஏனைய மொழிகளைப் புறந்தள்ளி விட்டு தமிழ் மணத்துடன் ஒலிக்கிறது"

**இடம் பெயர்ந்து தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் தாங்கள் பெருமை சேர்க்கும் தங்களது குடும்பம், இளமைக்காலம், தங்கள் இசை நதி மூலம் என இதுவரை அறியப்படாத பக்கங்களை அறியத் தாருங்கள்.**

*என்னுடைய பிறந்த ஊர் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த ஈழத்தமிழர் கலை வரலாற்றின் முக்கிய இடமாக கருதக்கூடிய அளவெட்டி அல்லது அளவையூர் எனும் கிராமத்தின் எல்லையை தொட்டிருந்த சிறுவிளான் எனும் சிற்றூர் ஆகும். இந்தப் பகுதியில் ஈழத்தின் பிரபல நாதஸ்வர தவில் விற்பன்னர்கள், பிரபல இசைக்கலைஞர்கள், கவிஞர்கள், பாரம்பரியக்கூத்து, கரகம், காவடி, இசைநாடகக்கலைஞர்கள் என அனைத்து கலைகளையும் வளர்த்து வந்தவர்கள் பிறந்து வாழ்ந்த மண்ணிலே நானும் பிறந்தேன் என்பது இப்போது பெருமை கொள்ளக்கூடியதாக இருக்கிறது.*

*எனது தந்தையார் கலாபூஷணம் சங்கீதரத்தினம் மு.வர்ணகுலசிங்கம அவர்கள் ஓர் சிறந்த இசைப் பாரம்பரியத்தில் தோன்றியவர். இவர் சிறந்த இசை வித்துவான் என்பதோடு, ஹார்மோனியம். வயலின், வீணை, உடுக்கை போன்ற வாத்தியங்களையும் சிறப்பாக இசைக்கக்கூடியவர். இசையின் சாஸ்திரீய சங்கீதத்திலும் மிகவும் நுட்பமான அறிவு கொண்டவர். இத்துடன் தமிழ் அறிவும் ச்மய அறிவும் மிகுந்தவர். மறைந்த இசை உலக மாமேதை மகாராஜபுரம் சந்தானம், மகாராஜபுரம் விஸ்வநாதையா அவர்களின் பிரதம சீடர். இதனை விட சித்தூர்சுப்பிரமணியம்பிள்ளை, புத்துவாட்டிசோமு, கல்யாண கிருஸ்ண பாகவதர், போன்றோரிடமும் இசையைக் கற்கும் வாய்ப்பு பெற்றவர். இது போலவே எனது தாயார் மகேஸ்வரி அவர்களும் சிறந்த இசை, நாடக பின்னணி கொண்ட இசைப் பரம்பரையில் வந்தவர். சிறந்த இசைஞானம் உடையவர். நன்றாக பாடும் ஆற்றல் கொண்டவர்.*

*இப்படியான எனது குடும்பத்திலும் ஊரிலும் கலைகளுக்கு நடுவே நான் வளர்ந்தேன். எனது வீட்டிலே எனது தந்தையாரின் தகப்பனார் முருகேசு அவர்கள் சிறந்த பாரம்பரிய நாடக கலைஞர். அவர் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் உடுக்கையை வாசித்து கொண்டு ஏதாவது இசை, நாடக கூத்து பாடல்களை பாடிக்கொண்டே இருப்பார். எனது தாயாரின் தகப்பனார் செல்லையா அவர்கள் சிறந்த தமிழ் அறிஞர். சமஸ்கிருதம் போன்றவற்றில் வல்லவர். இசை நாடகங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அயல் கிராமங்களுக் கெல்லாம் கால் நடையாக சென்று அங்குள்ளவர்களுக்கெல்லாம் தமிழ், சமயம், பண்ணிசை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இவரும் மறுபுறத்தில் இருந்து தனது பாடல்களைப் பாடிக்கொண்டு இருப்பார். இவ்வாறான சூழ்நிலையில்தான் நான் வளர்ந்து வந்தேன். அந்த சிறுவயதில் இவை எல்லாம் எனக்கு எவ்வளவு முக்கியமான விடயங்கள் என்று புரியாத வயது. எவ்வளவு விடயங்கள் என் வீட்டுக்குள்ளே இருந்திருக்கின்றது. நான் விசயம் விளங்கியிருந்தால் இவற்றை எல்லாம் கற்றிருந்திருக்கலாம். இப்போ நினைக்கும் போது நெஞ்செல்லாம் வலிக்கிறது. அட கற்றுக்கொள்ளாவிட்டாலும் ஒலிப்பதிவு என்றாலும் செய்து வைத்திருக்கலாமே என என்தலையில் நானே குட்டிக்கொள்கிறேன். இப்படியான அரிய பொக்கிசங்களை எல்லாம் ஆவணப்படுத்தாது போனவர்கள் எவ்வளவு பேர்? எத்தனையோஅரிய விடையங்களையெல்லாம் நாம் ஆவணப்படுத்தாது அழிய விட்டுவிட்டோம். எவ்வளவோ நவீன தொழிநுட்ப சாதனங்களுடன் இப்போ நாங்கள் என் செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றோம்.*


இறந்து போன கலைஞர்களும், ஆவணப்படுத்த முடியாமல் போன கலைப்பொக்கிஷங்களும் மீண்டும் ஒருமுறை ஒலிப்பதிவிற்காக உயிர் பெற்று வருமா........! எமது நாட்டின் அரிய கலைப் பொக்கிஷங்களை பாதுகாக்க தவறியவர்களில் நானும் ஒருவன் என்பதால் எமது பாரம்பரிய கலைகளை பாதுகாப்பதற்கோ அன்றில் கற்பதற்கோ பேரவா கொண்டு நிற்பவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

எனக்கு ஏதாவது கலையைக் கற்பிக்க வேண்டுமென்ற கரிசனையினால், எனது தந்தையார் தெல்லிப்பழை திரு.க. வரதராஜசர்மா அவர்களிடம் மிருதங்கத்தைப் பயில ஆரம்பித்து வைத்தார். எமது வீட்டிலேயே சகலவாத்தியங்களும் இருந்தமையால், வீட்டில் ஒருவரும் இல்லாத வேளைகளில் அவ்வாத்தியங்களை எனது விருப்பப்படி வாசித்து மகிழ்வேன். இந்த நாட்களில் எமது வீட்டிற்கு அருகாமையில் இருந்த கிறிஸ்தவ ஆசிரியை மேரிநாயகி அவர்களிடம் பியானோ பயில ஆரம்பித்தேன்.

இப்படியாக எனது ஆரம்ப இசைப்பயணம் தொடர்ந்தது. எனக்கு இசையுடன், எலக்ரோனிக் தொழில்நுட்பத்திலும் ஆர்வம் இருந்தது. வானொலி, தொலைக்காட்சி, வீடியோ டெக் என்பவற்றின் தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டதோடு, அவற்றிலேற்படும் பிழைகளைத் திருத்தும் திறமையையும் வளர்த்துக் கொண்டேன். இதனால் ஒலித் தொழில்நுட்பத்திலும் ஒலிப்பதிவுத் துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டேன். இத்துடன் எனது இசைப் பயணத்தில் மிருதங்கம், பியானோ, பண்ணிசை என்பவற்றோடு பாடசாலையில் எனது சிறிய தாயார்களான மல்லிகாதேவி, கமலாதேவி அவர்களிடமும் இசையைப் பயிலத் தொடங்கினேன். வீட்டிலும், எனது தந்தையார், தாயார், சகோதரி ஆகியோரிடம் அவ்வப்போது இசையை முறைப்படி பயின்று வந்தேன். இத்துடன் பல சிறிய இசை, நடன நிகழ்ச்சிகளுக்கும் 11 வயதிலேயே மிருதங்கம் வாசிக்கத் தொடங்கி விட்டேன். எனது ஆற்றலைக் கண்ட எனது மைத்துனியார் பார்வதி அவர்களும், மிருதங்கம், தவில் வித்துவான் திரு சிவபாதம அவர்களும் என்னை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் தமது இசைக் கச்சேரிகளுக்கு என்னையும் அழைத்துச் செல்லத் தொடங்கினார்கள். திரு.சிவபாதம் அவர்களுடன் சேர்ந்து சில இசைநிகழ்ச்சிகளுக்கு மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்றவற்றை இசைக்கும் வாய்ப்பும் பெற்றேன்.

எனது பாடசாலையிலும் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) மிகவும் சிறந்த இசை ஆசியர்களான செல்வி நாகம்மா கதிர்காமர், திரு.ஏ. திலகேஸ்வரன் ஆகியோரிடம் இசையைக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டதால் மிகவும் நுணுக்கமாக இசைநுட்பங்களை கற்று வந்தேன். அவ்வேளைகளில் மிருதங்க வாத்தியம் வாசிப்பதில் மிகவும் சிறந்து விளங்கியதோடு, பெரிய இசைக்கச்சேரிகளுக்கும் வாசிக்கத் தொடங்கினேன். அளவையூர் விநாசித்தம்பிப் புலவர் அவர்களின் கதாப்பிரசங்கத்திற்கும் மிருதங்கம் வாசித்து வந்தேன். அவரே பின்னொரு சமயம்."ராமேஸ்வரன்" என்ற எனது பெயரை, எனது தந்தையரின் பெயரின் முற்பகுதியையும் சேர்த்து "வர்ண ராமேஸ்வரன்" என்று ஆசீர்வதித்ததை என்னால் என்றும் மறக்க முடியாது.

இத்துடன் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்பட்ட இசைத் தேர்விலும் ஆசிரியர் தரம் வரை வாய்ப்பாட்டிலும், மிருதங்கத்திலும் பயின்று சித்தியெய்தினேன். இத்துடன் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இசை பயில ஆரம்பித்தேன். நுண்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் போது வெளியிலும் சில இசை நிகழ்ச்சிகளில் மிருதங்கம் வாசித்ததோடு, பாடவும் ஆரம்பித்தேன். வாய்ப்பாட்டில் மிகுந்த கவனம் செலுத்தி குறுகிய காலத்திற்குள் எனது தந்தையாரிடம் மிகுந்த கடினமான பயிற்சிகளை மேற்கொண்டதோடு, எனது ஒலிப்பதிவுக் கூடத்தின் உதவியோடு, தென்னிந்திய சிறந்த வித்துவான்களின் ஒலிப்பதிவுகளையும், இசை நிகழ்ச்சிகளையும் கேட்கத் தொடங்கினேன். இதனால் மேலும் எனது இசை வளர்ச்சி அதிகரித்தது. 1988ஆம் ஆண்டு எனது மிருதங்க அரங்கேற்றம் நல்லூர் ஆதீனத்தில் சிறப்பாக



"இன்றைய ஈழத்தமிழர் இசை ஏனைய மொழிகளைப் புறம் தள்ளிவிட்டு தமிழ்ப்பாடல்கள், பண்ணிசை, எழுச்சிப் பாடல்கள், கிராமிய இசைவடிவங்கள் எனபுதியபுறநானூற்று வடிவமாக சகல கலைகளும் பூத்துக் குலுங்கி மணம் வீசுகிறது."

நடைபெற்றது. எனது இசைப்பயணத்தில் பல தடைக்கற்களையும் தாண்ட வேண்டியேற்பட்டது. எனது ஆற்றுகைத்திறனைக் கண்ட எமது மூத்த சில இசைக் கலைஞர்கள் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு என்னை இசைத் துறையிலிருந்தே ஓரம்கட்டத் துணிந்தார்கள். சபாக்களிலும், கோவில் திருவிழாக்களிலும் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி எனக்குக் கச்சேரி வாய்ப்புக்களை இழக்கச் செய்தார்கள். பரீட்சைகளில் கைங்கரியங்களையும் காட்டினார்கள். இவ்வேளைகளில் ஜெயசங்கர், கோபி, கண்ணதாசன்,நிலாந்தன், அருணா, அகிலன்,சனாதனன், ஸ்ரீகணேசன்,நந்தன், முரளி, ஆதவன் போன்றோர் நண்பர்களானோம். ஜெயசங்கர் வீட்டில் அடிக்கடி பல கலந்துரையாடல்களையும், விமர்சனங்களையும் நடாத்தினோம். எல்லோரும் ஒருவருக்கொருவர் மிகவும் அனுசரணையாக பலவற்றையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டு, எம்மையும் வளர்த்துக் கொண்டோம். இவர்களுடைய ஊக்கமும், விமர்சனங்களுந்தான் என்னை இசைத்துறையில் மற்றவர்கள் போலில்லாமல் ஏதாவது சாதிக்க வேண்டுமென்னும் ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன் பலவிதமான தேடல்களிலும் இறங்க வைத்தது. அத்துடன்.நாடகம், கவிதை, ஓவியம் போன்றவற்றில் மேலும் ஈடுபாட்டையும் வளர்த்துக் கொண்டது.

இந்நேரம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்த மண் எங்களின் சொந்த மண் ஒலிப்பதிவு செய்யப்பட்ட காலம், நிதர்சனப் பொறுப்பாளர் பரதன் அவர்கள் என்னை அழைத்து சில பாடல்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். நானும் அதற்குச் சம்மதித்து பாடல்களை வாங்கிச் சென்றேன். கவிஞர் புதுவை இரத்தினதுரை அண்ணாவை எனக்குத் தெரியாதகாலம். புதுவை அண்ணாவின் இரண்டு பாடல்கள், ஒன்று பூபாளம் பாடும் நேரம். மற்றது பூ மலர்ந்தது கொடியினில். இப்படியாக பாடல்களை எல்லாம் மிகவும் சிறப்பாக இசையமைத்து, ஒலிப்பதிவுக்கு ஆயத்தமான வேளையில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த ஒலிப்பதிவு நடைபெற முடியவில்லை.

நான் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்தேன். ஒருமுறை புதுவை அண்ணா என்னை அழைத்து பாடல்கள் சில ஒலிப்பதிவு செய்ய வேண்டுமென்றும். நீர்தான் பாட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதன்

பயனாக மாவீரர் துயிலும் இல்லப்பாடல, விழித்தெழுவோம ஒலிப்பதிவு நாடாவில் (புறமொன்று தினம் பாடும் பெண் புலிகள் கூட்டம்) கரும்புலிகள் ஒலிப்பதிவு நாடாவில் (தாயக மண்ணின் காற்றே என்னில் வீசம்மா, எதிரியின் குருதியில் குளிப்போம்) பூநகரி வெற்றியின் போது (அப்புகாமி பெற்றெடுத்த லொக்குபண்டா மல்லி) போன்ற பல பாடல்களைப் பாடினேன். இதன் பின்னர் வெளிவந்த நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா மிகவும் பிரபல்யமானது. இதன் தொடர்ச்சியாக, தாயகத்திலிருந்து இடம் பெயர்ந்து பின் திசையெங்கும் இசை வெள்ளம் எனும் ஒலிப்பதிவு நாடா மிகவும் அண்மையில் வெளியிடப்பட்டது. அடுத்த முயற்சியாக ஊர்போரும் மேகங்கள் எனும் ஒலிப்பதிவு நாடா மிக விரைவில் வெளிவரக் காத்திருக்கிறது.

**இசை ஞானம் தங்களது குடும்பத்துடனேயே கூடப்பிறந்தது. தங்களின் தந்தையார் சங்கீதரத்தினம் கலாபூஷணம் வர்ணகுலசிங்கம் அவர்கள் பெரும் இசை விற்பன்னர். இவ்வாறான சூழலில் உங்களிடம் இசை இவ்வளவ விஸ்தாரம் பெற தூண்டல் பொருளான காரணம் என்ன? காரண கர்த்தாக்கள் யார்?**

மேலும் எனது கலைப்பயணம் பாடசாலைக்காலத்தில் பண்ணிசைப் போட்டியின் காரணமாகவே ஆரம்பமானது. எனது தந்தையார் இசைப் போட்டிக்காக என்னை வலுக்கட்டாயமாக இருத்தி இசையைக் கற்றுக்கொடுப்பார். ஒன்றும் செய்ய முடியாமல் கற்றுக்கொள்வேன். போட்டிக்குச் சென்றால் அங்கே நிறைய முறைப்படி இசை பயின்ற மாணவர்கள் எல்லோரும் நிற்பார்கள். அவர்களைப் பார்க்கும் போது எனக்குப் பயமாக இருக்கும். நான் எனது தந்தையாரிடம் நான் போட்டிக்குப் போகவில்லை வீட்டுக்குப் போகப் போகிறேன் என்பேன். இப்படி அடம் பிடித்து அடிவாங்கியதும் உண்டு. தவிர்க்க முடியாமல் போட்டிக்குப் போய்ப் பாடுவேன். ஆனால் எனக்குத்தான் முதற்பரிசு கிடைக்கும். எல்லோரும் என்னை நன்றாகப் பாராட்டுவார்கள். எனக்கு மிக சந்தோசமாக இருக்கும். நான் இனிமேலும் இசையை முறைப்படி கற்கவேண்டுமென்று எண்ணி வீடு திரும்பியதும் நானாகவே சுருதிப் பெட்டியை தூக்கிவைத்துப் பாடுவேன். எனது தந்தையார், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரின் சிறந்த வழிகாட்டல்கள், நான் முன்பு கூறியதுபோல எனது வீட்டுச் சூழல், வெளியே எமது ஊர் வாசனை, நல்ல நண்பர்கள், பல்துறை நிபுணர்களின் தொடர்புகள், அவர்களின் ஆக்கபூர்வமான உற்சாகம், விமர்சனம், ஏனைய பெரும் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் கேட்பதனால் ஏற்பட்ட உற்சாகம். இதற்கான காரணகர்த்தாக்களாக எனது தந்தையார் திரு வர்ண குலசிங்கம், தாயார் மகேஸ்வரி, மிருதங்கக் குரு திரு.சு.வரதராஜசர்மா, எனது உறவினர்களான மிருதங்க வித்துவான் ஐ.சிவபாதம், பிரபல பாடகி பார்வதி சிவபாதம், ஆசிரியைகள் மல்லிகாதேவி, கமலாதேவி, பாடசாலை ஆசிரியை திருமதி நாகம்மா கதிர்காமர், திரு ஏ.திலகேஸ்வரன், அளவையூர் திரு.சீ.விநாசித்தம்பிப் புலவர், ஆசிரியை தர்மபூபதி சிதம்பரநாதன், மிருதங்க வித்துவான் திரு.ப.சின்னராசா. எனது அருமை நண்பர் பிரபல வர்த்தகர் கற்பகம் என்றழைக்கப்படும் சுன்னாகம் சிவபாதம் என்போர் எனது ஆரம்பகால இசை வளர்ச்சிக்கு மிகவும் ஊக்கம் தந்தவர்கள்.


அடுத்தபடியாக என்னை வெளி உலகிற்குக் கொண்டுவரும் முயற்சியில் ஆலோசனைகளும் ஆதரவும் தந்தவர்கள் என்ற வரிசையில் எனது மதிப்பிற்குரியவர்களான இணுவில் மகாதேவக் குருக்கள், வீரமணிஐயர், நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி, பிரபல நாடக ஆசிரியர் சிதம்பரநாதன், திரு.என்.வீ.எம். நவரட்ணம், கலாநிதி சபாஜெயராஜா, பேராசிரியா சண்முகதாஸ், பேராசிரியர் சிவத்தம்பி, குழந்தை சண்முகலிங்கம், கம்பன் கழகம் இ.ஜெயராஜ் இவர்களுடன் இன்னும் பலர் உள்ளனர். எனது நண்பர்கள் வரிசையில் ஜெயசங்கர், கோபி, கண்ணதாசன, தாணுநாதசர்மா, சுந்தரேஸ்வரசர்மா, கேசவமூர்த்தி, சதாவேல்மாறன், ஜெயராமன், வயலின் கண்ணன், துரைராஜா, அருள்மோகன, செல்வரட்ணம ஆகியோருடன் அகிலன், நிலாந்தன், சனாதனன, ஸ்ரீகணேஸ், நந்தன், "வெளிச்சம்" கருணாகரன ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

எல்லாவற்றிக்கும் மேலாக என்னை உலகத் தமிழர் அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டி, தமிழர் வரலாற்றில் என்றும் இடம் பெறக்கூடியதாக எனது திறமைகளை வெளிக்கொணர்ந்த, மிகப் பெரிய கர்த்தாக்கள் என்றால், நான் என்றும் மதிக்கும் தேசியத் தலைவா திரு.வே.பிரபாகரன அவர்களும், மற்றும் அண்ணர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுமாவர்.

**தமிழ் ஈழத்திற்கு இசைப் பக்கமான வரலாறும், தொடர் வளர்ச்சியும் உண்டு. இவ்வளர்ச்சிக்கு எத்தனையோ இசை வல்லுனர்களின் பங்களிப்பு உண்டு. இவ்வாறனவர்களில் தாங்கள் தொடர்ந்து இன்றுவரை பங்களித்துக் கொண்டிருப்பவர். எனவே முடிந்த அளவு ஈழத்தின் இசை வரலாற்றை நேற்று, இன்று, நாளை என கூறுகட்டிச் சுருக்கமாகத் தருவீர்களா?**

நேற்றைய ஈழத் தமிழரது வரலாறு என்றால், இசை நாடகப் பாடல்கள், மற்றும் தென்னிந்திய கர்நாடக இசையிலான சமஸ்கிருத, தெலுங்கு, கன்னடப் பாடல்கள், சில தமிழ்க் கீர்த்தனைகள், பண்ணிசை என்பவற்றோடு கிராமிய மட்டத்தில் இருந்த சில இசை வடிவங்களும் சில தென்னிந்திய சினிமாவில் வந்த பாடல்களும் அடங்கும்.

ஆனால் இன்றைய ஈழத் தமிழர் இசையை உற்று நோக்கினால் தமிழருக்கான தனித்துவத்தைப் பேணும் இசைத் தேடலாகவும், சமுதாயத்தின் சமகால பிரதிபலிப்புக்களைக் கொண்ட இசை வடிவமாகவும் சமகாலத்தின் மக்களினால் மக்களுக்காக, மக்களினால் உருவாக்கப்படுகின்ற ஒரு ஜனநாயகத்தை இசையிலும் காணக்கூடிதாய் இருக்கிறது. இது இசைக்கு மட்டுமல்ல சம காலத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொருந்தும். பொதுவாகக் கலைகளை காலத்தின் கண்ணாடி என்பார்கள். அவ்வாறே நேற்றைய இசை இன்று எவ்வளவுக்குப் பயன்படுமோ அவற்றை அதிலிருந்து பெற்று இன்று எமக்குத் தேவையான விடயங்களையும் பதிவுசெய்து கொள்ள இசை எமக்கு இன்றியமையாததாகிவிட்டது.



"நாளைய இசை என்பது
பட்டைதீட்டப்படாமல் இருக்கின்ற
இன்றைய இசை வடிவங்களைப்
பட்டை தீட்டி
உலகிற்குக் காட்டுவதாகவிருக்கும்."



போராட்டம் தொடங்கிய கால கட்டத்தில் சுருதிப் பெட்டியை எடுத்துக்கொண்டு அல்லது ஒரு வாத்தியத்தை எடுத்துக்கொண்டு வெளியே செல்ல வெட்கப்பட்டவர்கள் பலரை நான் அறிவேன். அவ்வாறு செல்பவர்களை கேலி செய்பவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். போராட்டம் வலுவடைய, உரம் போடுவதுபோல் இசையும், ஏனைய கலைகளும் போராட்ட வளர்ச்சியில் பங்குகொண்டன. எப்பிடி மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கி இன்று முழுமையாக மாறி நிமிர்ந்து நிற்கிறார்களோ அதேபோல அனைத்துக் கலைகளுமே தமது பங்கிற்கு வளர்ந்து விழுதெறிந்து, மக்களுடன் மக்களாக மண்ணுடன் மண்ணாக, காற்றோடு காற்றாக ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாத அளவிற்கு வளர்ந்து மணம் பரப்புகிறது என்றால் எல்லாவற்றிலும் தமிழன் இனம், மொழி, பண்பாடு என்பவற்றில் தனக்கென ஓர் உன்னத அடையாளத்துடன் வாழ வேண்டும் என்ற தலைவரின் முன்கூட்டிய தூரப் பார்வையும், வழிநடாத்துதலும்தான்.

இன்றைய ஈழத் தமிழர் இசை ஏனைய மொழிகளைப் புறம் தள்ளிவிட்டு தமிழ்ப் பாடல்கள், பண்ணிசை எழுச்சிப் பாடல்கள், கிராமிய இசை வடிவங்கள் என புதிய புறநானூற்று வடிவமாக சகல கலைகளும் பூத்துக் குலுங்கி மணம் வீசுகிறது.நாளைய இசை என்பது பட்டை தீட்டப்படாமல் இருக்கின்ற இன்றைய இசை வடிவங்களைப் பட்டை தீட்டி உலகிற்குக் காட்டுவதாகவிருக்கும். புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்கின்ற தமிழர்கள் அங்கு தாம் தேடிய அனுபவத்துடன் தாயகம் திரும்பி, தாயகத்தில் இருக்கக்கூடிய சிறந்த அரிய இசை, கலைவடிவங்களை எல்லாம் மிகவும் உருவேற்றி, மெருகேற்றி உலகிலேயே உன்னதமான ஓர் இசை, கலை வடிவங்களைத் தாயகத்தில் வாழும் கலைஞர்களுடன் இணைந்து உலகம் வியக்கும் ஓர் அதிசயப் பூங்காவாக அருங்காட்சியகமாக ஈழத்தை விளங்க வைப்பார்கள் என்பதை நினைக்கும் போது மனதிற்கு சந்தோஷமாக இருக்கிறது.

**நீங்கள் பல விடுதலைப்பாடல்களைப் பாடியும் இசை அமைத்தும் உள்ளீர்கள் .உங்கள் பாடல்களை கேட்கும்போது மிகவும் உணர்வுபூர்வமாக இருக்கிறது. இதற்கான காரணங்கள் ஏதும் உண்டா? விடுதலைப்பாடல்களைப் பாடமுன்பும்,பாடிய பின்பும் ஏற்பட்ட உங்களின் உணர்வுகள்பற்றி சிறிது கூறமுடியுமா?**

ஈழ விடுதலைப் போராட்டம் துளிர்க்கத் தொடங்கிய கால கட்டங்களில் எமது வீட்டாரும் எமது உறவினர்களும் கூட்டணியின் மிகுந்த ஆதரவாளர்கள். எல்லாக் கூட்டங்களுக்கும் வீட்டார் எல்லோருமே செல்வோம். இப்படியாகவே எனக்கு விடுதலை உணர்வும் வளரத் தொடங்கியது. காலம் நகர்கிறது. 83 ஆம் ஆண்டு எமது பகுதிகளில் பல விடுதலை இயக்கங்களும் விதை போடத் தொடங்கின. எமது அயலவரும், உறவினரும் பலர் பல இயக்கங்களிலும் இணையத் தொடங்கினர். எனது சகோதரர் மிகுந்த தீவிர விடுதலை ஆதரவாளர். அவ்வேளைகளில் அயல் உறவினர்களும், விடுதலைப்புலிகளின் தொடர்பாளர்களுமாகிய ஜீவன் அண்ணா(அருள் மாஸ்டர்), பாலன் அண்ணா ஆகியவர்களின் தொடர்பு கிடைத்தது. அப்போது விடுதலைப் புலிகள் எடுத்த எடுப்பில் ஒருவரையும் இணைத்துக்கொள்ளவும் மாட்டார்கள்,இனங்காட்டிக்கொள்ளவும் மாட்டார்கள். அவ்வேளைகளில் அவர்கள் தரும் துண்டுபிரசுரம் தலைவர் பிரபாகரன் அவர்களின் படத்துடன் வந்த இந்திய ஆங்கில சஞ்சிகைகள் போன்றவற்றை மிகவும் கவனமாக வீட்டிற்கும், வெளியாருக்கும் தெரியாமல் விடுதலை உணர்வுகளை மட்டும் இனம்கண்டு சுழற்சி முறையில் அவற்றை வாசிக்கக் கொடுப்பதோடு மிகவும் அவதானமாகப் பாதுகாத்துக் கொடுத்தும் வந்தேன். அவ்வேளையில் என்னையும் வேறு சில என் போன்றவர்களையும் இனம்கண்டு இந்தியாவிற்கு இரண்டு மூன்று கிழமைக்குள் பயிற்சிக்காக அனுப்ப என்று இருந்த வேளையில் யாரோ ஒரு எட்டப்பனால் காட்டிக்கொடுக்கப்பட்டு ஜீவன் அண்ணா (அருள் மாஸ்டர்) பாலன் போன்றோர் ஒரே இரவில் ராணுவ கவச வாகனங்களில் வந்த சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். இதனால் நானும் சில நண்பர்களும் மனவிரக்தியுற்று, மேலதிகத் தொடர்புகொள்ள ஒருவரும் கிடைக்காதமையால் எமக்குள்ளேயே சுருங்கிக் கொண்டோம். சில நண்பர்கள் வேறு இயக்கங்களில் இணைந்து கொண்டார்கள். நான் எல்லா இயக்கங்களுக்கும் அவ்வப்போது தேவையான உதவிகளைச் செய்துவந்தேன். ஆனால் வேறு இயக்கங்களில் இணைய மனம் இசைவு கொள்ளவில்லை. பின்பு ஒருநாள் எனது சகோதரரின் (அமரர் கலைஞானசிங்கம்) மிக நெருங்கிய நண்பரான ஈழப் புரட்சி அமைப்பைச் சேர்ந்த அன்னலிங்கம் ஐயா அவர்கள் தமிழகத்திலிருந்து நாடு திரும்பி எமது வீட்டிற்கு வந்திருந்தார். அவர்களின் செயல்பாடும், அடக்கமும் விடுதலை உணர்வும் எனக்கு மிகவும் பிடித்திருந்தமையால் நான் ஈழப் புரட்சி அமைப்பில் இணைந்து செயல்படத் தொடங்கினேன். விடுதலைப் பயணத்துடன் எனது இசைப் பயணமும் இணைந்து கொண்டது. இந்திய இராணுவ வருகைக்கு பின் விடுதலைப் பயணம் சற்று தடைப்படவே, தொடர்ந்து இசைப் பயணத்தில் கூடுதலான நாட்டம் ஏற்பட்டது. மேற்கண்டவாறு நீண்ட காலமாக சிறுவயதிலிருந்தே எனக்கு விடுதலை உணர்வு உள்ளமையால், விடுதலைப் பாடல்களைப் பாடும்போது எதனையுமே உள்வாங்கி பாடக்கூடிதாக இருந்தது. பாடியபின்பு ஏதோ என்னால் முடிந்ததை நாட்டுக்கு செய்திருக்கின்றேன் என்ற சிறிய திருப்தி ஏற்பட்டதோடு இன்னும் நிறைய விடுதலைப் பணி செய்ய வேண்டும் என்ற உத்வேகமும் அதிகமானது.

**ஆயிரம் பாடல்களைப்பாடியும் காலத்தால் நிலைக்காதவரும் உண்டு. ஒரு சில பாடல்களைப் பாடி வரலாற்றில் நிலைத்து நின்றவரும் உண்டு. தாங்கள் பாடிய மாவீரர் துயிலும் இல்லப்பாடல் மூலமாக உலகம் எங்கும் அழியாத தடம்பதித்து விட்டீர்கள். அந்தப்பாடல் உருவாக்கம் பற்றியும், பாடல் உருவாக்கத்தில் பெற்ற அனுபவம் பற்றியும் அறியத்தருவீர்களா?**

முதலில் பாடல் பாடப்போகும் போது புதுவை அண்ணா ஒரு முக்கியமான பாடல் நீதான் பாடவேண்டுமென்றார். சரி என்று சொன்னேன். என்ன பாடல் என்று எனக்கு அப்போது புரியவில்லை. வீட்டிற்கு அழைத்தார். ஓர் இரவு அவரது வீட்டிற்குச் சென்றேன். பாடலைத் தந்து உடனேயே பாடிக் காட்டும்படி கேட்டார். நானும் உடனே வந்த ஒரு மெட்டில் பாடிக் காட்டினேன். மிகவும் நன்றாக இருந்தன அந்த வரிகள்.

"எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்"

என்பதனைப் பாடும்போது தேகம் புல்லரித்தது. புதுவை அண்ணா சாய்மனைக் கட்டிலில் சாய்ந்தபடி இன்னும் ஒருக்கா பாடும் என்று இரண்டு மூன்று தடவைகள் திருப்பித் திருப்பிக் கேட்டுவிட்டு கொஞ்சநேரம் ஒரு சத்தமுமில்லாமல் 10 நிமிடங்களுக்கு மேல் அமைதியாக இருந்தார். எனக்குப் பாட்டைப் பாடியதால் ஏற்பட்ட தாக்கத்தோடு நான் ஏதோ பிழையாகப் பாடிவிட்டேனோ என்ற பயம். புதுவை அண்ணாவுடன் பழகும் ஆரம்ப நாட்கள் என்பதால் ஒன்றுமே புரியவில்லை. இறுதியில் ஒரு பெருமூச்சுடன் எழுந்து நாளைக்கு ஐந்தரை மணியளவில் ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வரும்படி சொல்லி வழியனுப்பி வைத்தார். அதேபோல் மறுதினம் ஒலிப்பதிவுக் கூடத்தை அடைந்தேன். கண்ணன் மாஸ்டர் ஆர்மோனியத்தோடு இருந்தார். அருகில் சதா வேல்மாறன் தபேலாவுடன்,ஜெயராமன் அவர்கள் வயலினுடன். இவர்களுடன் நானும் இணைந்துக் கொண்டேன். துயிலும் இல்லப் பாடலுக்கு இசை அமைக்கத் தொடங்கினோம். மிகவும் அற்புதமான இசைப் பிரசவமாக அந்தப் பாடல் வெளிவந்தது. அந்தப் பாடலைப் பார்த்துக்கொண்டிருந்த மாவீரர் மேஜர்சிட்டு, ராதிகா, மணிமொழி மற்றும் கலைஞர்களும் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். உடனே புதுவை அண்ணா "எங்கே எங்கே" என்ற வரிகளை எல்லோரும் சேர்ந்து பாடினால் நன்றாக இருக்கும் என்ற அபிப்பிராயம் கூற அது எல்லோருக்கும் உற்சாகத்தைத் தந்தது. அவ்வாறே பாடலுக்கு முழு அலங்காரங்களும் செய்யப்பட்டு ஒலிப்பதிவுக்குத் தயாராகி ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்த ஒலிப் பதிவு முடியும்போது நேரம் காலை மூன்று மணியிருக்கும். பாடல் மிகவும் நன்றாக அமைந்தது. ஆனால் இது எப்படிச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறப்போகிறது என்பதனை ஒருவரும் அறிந்துகொள்ளவில்லை.

1992 மாவீரர் தினத்தின் இறுதி நாள் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்வதற்காக புதுவை அண்ணாவிடம் சென்றிருந்தேன். தலைவர் இந்தப் பாடலைக்கேட்டு மிகவும் பாராட்டியதாக அவர் என்னிடம் கூறினார். சற்று நேரத்தில் இன்னுமொரு போராளி வந்தார். எனக்கு அப்போது அவரைத் தெரியாது. புதுவை அண்ணாவிடம் வந்து கட்டித் தழுவி கண் கலங்கக் கூறினார். "அண்ணா அருமையான பாடல்" என்று மிகவும் உணர்ச்சிவயப்பட, இவர்தான் இதனைப் பாடியவர் என்று புதுவை அண்ணா என்னை அறிமுகம் செய்தார். அப்போதுதான் அந்தப் போராளியின் பெயர் தலைவருக்கு மிகவும் விசுவாசமான காக்கா அண்ணர் என்பதை அறிந்து கொண்டேன். அவரும் என்னை மிகவும் பாராட்டினார். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருக்கும்போது 11.30 அளவில் தமிழ்ச்செல்வன் அண்ணா வந்தார். அவரும் புதுவை அண்ணாவையும் மிகவும் பாராட்டி, என்னையும் பாராட்டி, அவரின் மொழியில் "அந்த மாதிரி இருக்குது" என்றும் தலைவர் கேட்டு மிகவும் பாராட்டினார் என்றும் கூறினார்.

எம்மையும் அழைத்துக்கொண்டு வாகனம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் நோக்கி விரைந்தது. வீதியெங்கும் மக்கள் மாவீரருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வேகமுடன் அலைமோதினார்கள். நாங்களும் சற்றுத் தூரத்தில் இறங்கி விறுவிறென நடைபோட்டு துயிலும் இல்லத்தின் நடுப்பகுதியை அடைந்தோம். அதற்குள் பிரவேசித்ததில் இருந்து வீடு திரும்பியதுவரை, நான் அடைந்து எனது வாழ்வில் இன்னொருமுறை கிடைத்தற்கரிய அபூர்வமான அனுபவமும், உணர்வுமாகும். இது தனிப்பட்ட எனது அனுபவம் மட்டுமல்ல அங்கு சென்று இதனை அனுபவித்த அனைவரது அனுபவமும் இதுதான். இதற்கு வார்த்தைகளாலோ எந்த வடிவத்தாலுமோ விளக்கம் தர முடியாது. அனுபவித்தால் மட்டுமே புரியும். 12 மணியானதும், கோவில் மணிகள் எல்லாம் ஒருமித்து ஒலிக்கத் தொடங்கிற்று. அப்போது மாவீரர் துயிலும் இல்லப் பாடல் புலிகளின் குரல வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. புதுவை அண்ணா என்னைப் பாடும்படி கேட்கவே நானும் சேர்ந்து அந்தப் பாடலைப் பாடினேன். மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர், நண்பர்கள், சக போராளிகள அனைவருமே கதறி அழுதார்கள். மாவீரர்களுக்காக ஏற்றப்பட்ட நெய் விளக்குகளிலிருந்து வந்த நெய் வாசனைகளும், நறுமலர்களின் வாசனைகளும் சேர்ந்த புகை மண்டலத்தினுள் இந்தப் பாடல் தவழ்ந்து வந்து எல்லோர் மனங்களிலும் எல்லாவித உணர்வுகளையும் தட்டி எழுப்பி மனதை உலுக்கியது. ஒருவாறு மனதை அமைதிப்படுத்தித் திரும்பினோம். ஒருவரோடு ஒருவர் பேசவேயில்லை. நாவெல்லாம் வறண்டு போனது. போகும்போதுதான் நினைத்தேன் பன்றியின் 16 குட்டிகளில் ஒன்றாய் இருப்பதை விட, யானைக்கு ஒரு குட்டியாக இருப்பது மேல் என்று.

**தாங்கள் அற்புதமான பல தாயகப் பாடல்களைப் பாடி உள்ளீர்கள். மரபு வழியான சங்கீத நிகழ்வுகளை தொடர்ந்து நடாத்தி வருகிறீர்கள். மெல்லிசை சார்ந்த பக்திப் பாடல்களையும் பாடுகிறீர்கள் இவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை பற்றியும் மக்களை சென்றடைவதில் இவை பெறும் வெற்றி பற்றியும் குறிப்பிட முடியுமா?**

தமிழர்களின் மரபு இசை வடிவம் என்பது தற்போது கர்நாடக இசை எனும் பெயருடன் கூடிய இசை வடிவமே. விஜய நகர மன்னர்கள் தமிழகத்தை ஆட்சி செய்த காலகட்டத்தில் தெலுங்கு மொழியும், தெலுங்கிலான பாடல்களும் தமிழகத்தில் வெகுவாகப் பரவ ஆரம்பித்தன. இந்த நிலை கி.பி 14 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.20ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை நீடித்ததாகவும், தெலுங்கு மொழியின் செல்வாக்கினால் முற்றிலும் தமிழில் நிகழ்ந்த இசைக் கச்சேரிகளில் தெலுங்குப் பாடல்களின் ஆதிக்கம் அதிகரித்து தமிழ் இசை வடிவத்திற்குள் தெலுங்கு மொழி புகுந்துகொண்டு, கச்சேரிகளில் இறுதியில் ஒன்று இரண்டு தமிழ் பாடல்கள் மட்டுமே (துக்கடா) பாடும் நிலை ஏற்பட்டது. இந்நிலையை மாற்ற எண்ணி செட்டிநாட்டரசர் அண்ணாமலை அவர்கள் தமிழ் நாட்டில் பாடப்படும் பாடல்கள் தாய் மொழியாகிய தமிழிலும் இருப்பது சிறந்தது என்றும் பாடுவோரும் கேட்போரும் பாடல்களின் பொருளை உணரவேண்டுமென்னும் நல்நோக்குடன் தமிழ் இசை இயக்கத்தை ஆரம்பித்தார். பல சிதைந்துபோன பாடல்களைத் திரட்டி நூல்களாக வெளியிட்டார். இந்தப் பாடல்களைப் பயிற்றுவிப்பதற்கான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் என்னும் பட்டப்படிப்பைத் தொடங்கினார். தமிழிசைச் சங்கத்தை உருவாக்கினார். இப்படியாக தமிழ் இசையை வளர்க்க தமிழ் நாட்டில் இன்றுவரை பெரும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது விடுதலைப் போராட்டத்தின் பின் ஈழத்தில் தமிழர்களுக்கான இசை வடிவம் புத்துயிர் பெற்று நிமிர்ந்து நிற்கிறது என்றால் மிகையாகாது.

சம காலத்தைப் பிரதிப்பலிக்கக்கூடிய தமிழ் இசைப் பாடல்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம், நல்லூர் உற்சவத்தின் போது எம்மவர்கள் பாடிக்கொண்டிருந்த வேற்றுமொழிப் பாடல்களைக் கேட்கும் போது தியாகி திலீபன் அண்ணா உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு மிகமிக அருகில் மனோன்மணி அம்மன் கோவிலுக்கு முன்னால் கச்சேரி கேட்டுக்கொண்டிருந்த புதுவை இரத்தினதுரை அண்ணாவுக்கும் எனக்கும் ஏற்பட்டது. அதன் விளைவே புதுவை அண்ணாவினால் எழுதப்பட்ட

நல்லை முருகன் பாடல்கள. ஒருசிலர் மறைமுகமாக அதிருப்தியைத் தெரிவித்தாலும், பலர் போற்றினார்கள். போராட்டத்தின் வெற்றிப் பாதையில் தமிழிசை வளர்ச்சியும் வெற்றி பெற்றது. எம்மவர்களின் மாயை சற்று நீங்கியது. மக்களுக்குப் புரிகின்ற மொழியில் சமகால வாழ்வுடன் சம்மந்தப்பட்ட, காலத்தின் கண்ணாடியாக இந்த பாடல்கள் அமைந்ததனால் அனைவருமே பரவசப்பட்டு ஏற்றுக்கொண்டார்கள். உலக நாடுகளிலும் மிக வரவேற்புக் கிடைத்தது. இன்றுவரை இந்தப் பாடல்களின் CD இசைத்தட்டுக்கள் விற்பனையாகிக்கொண்டே செல்கிறது. இந்த முயற்சியின் அடுத்த வெளியீடுதான் அண்மையில் வெளிவந்த திசைஎங்கும் இசைவெள்ளம் ஆகும்.

வன்னியில் இருந்து கனடா செல்வதற்கு இடைப்பட்ட பகுதியில் உங்களது இசை முயற்சிகள் அனுபவங்கள் பற்றி குறிப்பிட முடியுமா?

வன்னியிலிருந்து வெளியேறி சிறிது காலம் கொழும்பில் இருந்தேன். அவ்வேளைகளில் கொழும்பிலும், ஏனைய தமிழர் பகுதிகளிலும் இசைக் கச்சேரிகள் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக திருகோணமலை,மட்டக்களப்பு, கண்டி போன்ற இடங்களில் சில கச்சேரிகள் நடைபெற்றன. அவ்வேளைகளில் என்னைக் கண்ட சில அபிமானிகள் நல்லைமுருகன் பாடல்களில் சிலவற்றைப் பாடும்படி கேட்டார்கள். சந்தர்ப்ப சூழ்நிலையால், நான் மோதகம் போன்ற நல்லைமுருகன் பாடல்களின் வடிவத்தை மாற்றி கொழுக்கட்டையாக சில பாடல்களை ஒரே உணர்வுடன் பாடி அவற்றை அவர்களது தாகத்தைத் தீர்த்து வைத்தேன்.

தொடந்து தமிழகம் சென்று சென்னையில் மேற்படிப்பை மேற்கொண்டபோது சில இசை நிகழ்ச்சிகள் நடாத்தி பலரினதும் பாராட்டுக்களையும் பெற்றேன். பின்பு எமக்கான சில வேலைகளினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு 13 மாதங்கள் வேலூர் சிறப்புச் சிறையில் அடைக்கப்பட்டேன். இதனால் நாட்டுப் பற்றும் விடுதலை உணர்வும் மேலும் அதிகமானது.

தாங்கள் முன்பு யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக பணி புரிந்தவ ர். பின்னர் சிறந்த இசையாளராக மிளிர்கிறீர்கள். இன்று கனடாவில் "வர்ணம் நுண் கலைப் பயிலகம்" நிறுவி நிர்வகித்து வருகிறீர்கள். இப்படியாக வளர்ந்து வரும் தாங்கள் இந்த இசை சமுகத்தில் நின்று நிலைப்பதற்கு ஆதாரமான காரணங்களை விரிவாக கூறுவீர்களா?

பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த வேளைகளில் எதையுமே வெளிப்படையாகக் கதைத்து விமர்சித்து உள்வாங்கி புதிய விடயங்களைச் செய்ய வேண்டுமென்ற புத்துணர்வு இருந்தது. இந்த வேளைகளில் எனது நண்பர்கள், விரிவுரையாளர்கள் அனைவருமே என்னை மிகவும் உற்சாகப்படுத்தி, பக்கபலமாக இருந்தார்கள். எமது தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்து உரையாடிய வேளைகளில் அவரது பல்பரிமாணம் கொண்ட தூரப் பார்வை , ஒவ்வொன்றையும் மிகவும் நுட்பமாக அறிந்து வைத்திருந்து, எம்முடன் துறைசார்ந்த விடயங்களை உரையாடியது என்பன என்னை அதிசயிக்க வைத்ததுடன் புது உத்வேகத்தையும் தந்தது. நிறைய விடயங்களை நாம் எமது வருங்கால சந்ததிக்குச் செய்ய வேண்டுமென்று பல தேடல்களில் இறங்கிய வேளை, எதிர்பாராத விதமாக மாபெரும் இடப்பெயர்வு இடம்பெற்றது. இதனால் எமது முயற்சிகள் எல்லாம் தடைப்பட்டு நாம் நாற்றிசையும் சிதற நேர்ந்தது. இதனால் எதிர்பாராத விதமாக நான் கனடா வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ எனது மனைவி மகனுடன் கனடாவில் வாழ்ந்து வருகிறேன்.

இங்கிருந்தாவது எமது தாயகத்திற்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்வோம் என்பதோடு, இங்குள்ள தமிழ் சிறார்களை எமது பண்பாட்டுக்குள் வளர்வதற்கு உறுதுணையாக ஏதாவது பயனுள்ளதாகச் செயல்பட எண்ணியே "வர்ணம் நுண்கலை பயிலகம்" எனும் ஓர் இசை நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்தி வருவதோடு, எமது நாட்டுக்குத் தேவையான பல புதிய பரீட்சார்த்த விடயங்களை ஆற்றுகைத் துறையிலும், கற்பித்தல் துறையிலும் நான் செயற்படுத்துவதாலும் தாய் மண்ணின் மீதும், தமிழ் சமூகத்தின் மீதும், அடுத்துள்ள தலைமுறை பற்றியும் அக்கறை கொண்டுள்ளதாலும் இங்குள்ள விஷயமறிந்த பொற்றோர்களில் அனேகர் தமது பிள்ளைகளை எனது நுண்கலைப் பயிலகத்தில் கலைபயில ஆர்வத்துடன் அழைத்து வருகிறார்கள். யாரொருவர் மண்ணையும் மக்களையும் உண்மையில் நேசிக்கிறார்களோ அவர்களை அந்த மண்ணும் மக்களும் நேசிப்பார்கள் என்பதை நான் நன்கு அனுபவத்தால் உணர்கிறேன்.

இறுதியாக வெளிச்சம் வாசகர்களுக்கும் தங்களின் இசை ரசிகர்களுக்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்?

வெளிச்சம் மாத இதழுக்கு விதைபோட்ட காலத்திலிருந்து, இன்று இதன் வளர்ச்சி வரையும் இதனோடு உழைப்பவர்கள் பற்றியும் நான் நன்கு அறிவேன். இதனை வெளியிடும் பொறுப்பில் அன்றிலிருந்து இன்று வரை அயராது உழைத்துவரும் திரு.கருணாகரன் எனது நண்பர். நாடுவிட்டு நாடு வந்தாலும் மனதிற்குள் நட்பு தொடர்கிறது. கொள்கையில் ஒன்றுபட்டவர்களுக்கு தூரம் என்பது பெரிய விடயமல்ல. இந்த வெளிச்சம் மாத இதழ் தொடர்ந்து வெளிவர பல வகையிலும் உதவிக் கரம் கொடுக்கும் அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, காணாமல் போனோர் பட்டியலில் என்னையும் சேர்க்காமல், என்னைக் கண்டு பிடித்து இவன் என்றும் மண்ணையும், மக்களையும் மறந்தவனல்ல என்று மக்கள் முன் நிறுத்தி, வெளிச்சப்படுத்தியதற்காய் என்றும் வெளிச்சத்திற்கு நன்றியுடையவனாய் அனைவரிடமும் இருந்து தற்காலிகமாக விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.
வாழ்க தமிழ் இனம்! வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழர் தாயகம்!

" யாரொருவர் மண்ணையும் மக்களையும் உண்மையில் நேசிக்கிறாரோ அவர்களை மண்ணும் மக்களும் நேசிப்பார்கள் "



# பேசத்துடிக்கும் சொற்களின் குரல்

திருநகரூர் ஜெகா

இன்னும் மீண்டு வராமல்
எனது காவலரணில் இருந்து
நான் பேசத்துடிக்கிற வரிகள்....

என்னுடைய தேசத்தின் விடிவுமீதான
சிறு பங்களிப்பை
இயற்றிக் கொண்டிருக்கும்
ஒரு நாட்டாளன்...
என்பது எனது சுயவிளக்கமாய்
இருக்கட்டும்.

எனது தேசம்
சபிக்கப்படமுன்னும்
சபிக்கப்பட்ட போதும்
கடினமான நாட்களின் போதும்
இப்போதுவரையும்
இதே பதுங்ககழியில் பணியாற்றுகிறேன்.....
என்பது எனது சேவைக்காலமாய்
இருக்கட்டும்.

சதிகளின் போதும்
பனிப்போர் காலங்களிலும்
இராஜதந்திர நாட்களிலும்
கையூட்டுகளின் போதும்
சோடைபோகாத ஒரு போர்வீரன்...
என்பது
என்னைப்பற்றிய உண்மையை,
எனது நியாயப்பாட்டை
சொல்வதற்கு
போதுமான சான்றாய் இருக்கட்டும்.

இவற்றிக்கும் அப்பால்
ஒரு குடும்பத்தலைவன்,
ஒரு விவசாயி,
ஒரு பூர்வீகக் குடியானவன்
என்பதெல்லாவற்றையும் கூட
சொல்லவேண்டுமென்பதில்லை.

போர் எங்களை குடித்தது
ஒரு வானம்பாடி போலிருந்த என் மகளை,
ஒரு நெற்சிட்டு போலிருந்த என் மகனை,
குதூகலம் ததும்பும் வாழ்வுக்காக
கனவு கண்டிருந்த எங்கள் எல்லோரையும்
போர் குடித்தது.


போர் குடித்த மனிதர்களின்
குருதித்தடுப்பிற்குப் பின்னே
யுத்த வெள்ளம் தேங்கி நின்றது
சமாதானம் வந்து நின்ற இப்பொழுதில்.
ஒரே வீட்டில்
ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள்
இசைக்கப்பட்ட மரணகீதங்களிலிருந்து
எங்கள் தேசியகீதம் உயிர்வலுப்பெற்றது.
ஆனாலும் என்ன?
இந்த மாபெரும் ஜீவமரணப்போராட்டம்
அங்கீகரிக்கப்படாமல் இங்கு ஒரு
"ஸ்ராலின் கிராட்" அரங்கேறி இருக்கிறது.
குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள்
"அங்கீகரிக்கப்படாத ஸ்ராலின் கிராட்" என்பதை.

## கட்டளையும் ஆக்கிரமிப்புப் போர்வீரனும்

கட்டளை!
அதை என்னவென்று சொல்வது.
எனது பூர்வீகக் கிராமத்தில் இருந்து
என்னை
இவ்வந்நியதேசத்துக்கு
அழைத்து வந்தது அது.
கணவனைப் பிரியும் இளம் மனைவியின்
வெப்பப் பெருமூச்சுகளுக்கு
மத்தியில்,
எப்போதும் காதுகளில் சீவித்திருக்கும்,
ஒரே குழந்தையின்
மழலை மொழிகளுக்கு
மத்தியில்.....,
தள்ளாத வயதில் மகனைப் பிரிகிற
அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
மத்தியில்.....
..................
கட்டளை என்னை இங்கு கொண்டு வந்தது.

கட்டளை என்னை
பிடரி பிடித்து தள்ளுகிறது
இறந்துபோவேன் என்று
நிச்சயமாய் தெரிகிற ஒரு போருக்குள்.
மௌனித்திருக்கும், உயிர்பறிக்கும்
இரவுகளுக்குள்
ஒரு தனித்தீவாக,
ஓர் இயந்திரப் பொம்மையாக,
என்னுடைய மனிதாபிமானத்தை
நானே தின்று விடும்படியான
குரூர ஆசை நிறைந்த முடிவுகளை நோக்கி
அது என்னை அழுத்துகிறது
ஒரு அங்குசம் போல.

கட்டளை
அதை என்னவென்று சொல்வது
எனக்கு நேர் எதிரி அதுதான்
என்பதைத் தவிர.





## திலீபன் உன்னைச் சாகவிடுவதா?

நிலாந்தன்

கைவிடப்பட்டவர்கள் நாங்கள்
கனவு காண்பவர்களாய்
பொய்யான சமாதானத்தால்
திசை திருப்பப் பட்டவர்களாய்
பூமியின் எல்லாப் பாகங்களிலும்
அகதிகளாய்
அழையா விருந்தாளிகளாய்
அவமானப்பட்டவர்கள் நாங்கள்

எங்களுக்காக
எங்கள் பாவங்களுக்காக
பசியோடிருக்கிறாய் நீ
தாகமாயிருக்கிறாய் நீ
சகோதரா.....

நீ அருந்த மறுக்கின்ற
ஒவ்வொரு துளி நீரும்
உனக்காகச் சொர்க்கத்தில்
சேமிக்கப்படலாம்
உனது குரலையும் எடுத்துக்கொண்டு
ஒருநாள்
புறாக்கள் பறக்கலாம்

ஆனால் உன்னைச் சாகவிட முடியாது.

காற்றைக் கடலை சூரியனை
நாம் மன்றாடுகிறோம்.

காற்றே கடலே சூரியனே
கையாலாகாச் சமாதானமே
அவனைக் காப்பாற்றுங்கள்

ஒரு சருகைப் போல
ஒரு சிறகைப் போல
அவனுடல் இலேசாகி வருகிறது.....

காற்றே அவனுக்காய்
மெதுவாய் வீசு.
கதிரவனே
அவன் பொருட்டாய் குளிர்ந்துவிடு.

அவன் பாவம்
அவனுக்குத் தாய் இல்லை.
சகோதரியும் இல்லை
கசியும் விழிகளோடு
தலைமயிரைக் கோதிவிட
காதலியும் இல்லை.

அவனைச் சாகவிட முடியாது.

முறிக்கப்பட்ட ஒருடன்படிக்கையின்
முதலாவது பலியாடா அவன்?
ஓரதிசயம் போல
அற்புதம் போல
எதாவது நிகழ்ந்தாலொழிய
அவனைக் காப்பாற்றவே
முடியாதா?

ஆயின்
அவ்வாறாயின்
அவனைச் சாகவிட விரும்பும்
ஒவ்வொருவரும் அறிக.

அவனது பசி வலியது
அவனது தாகமும் வலியது
அதைவிட வலியது
எங்கள் சனங்களின் கோபம்.

1987 செப்ரெம்பர் 24
யாழ்ப்பாணம்

(திலீபன் உண்ணா நோன்பிருந்த நாட்களில் எழுதப்பட்டு நண்பர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் இது. இப்பொழுது ஞாபகத்திலிருந்து மீட்கப்பட்டு மெருகிடப்பட்டு வருகிறது)

## பெருவிருட்சமொன்று வித்தாகியது

வீதி நெடுகிலும்
சிவப்பு, மஞ்சள் அலங்காரம்
தோரணங்கள்
கண்களில் துயரச்சுமைகள்
கைகளில் மலர்களுடன்
காத்திருக்கும் தவிப்பு.

கானகமும் அசைவின்றி
மௌனமாய் சோர்ந்து
பரவிக்கிடந்தது
பாதைகளில் உதிர்ந்த மலர்கள்
இறுதிப் பயணத்திற்கென
பரவிக்கிடந்தனவோ,

பட்சிகளும் புள்ளினங்களும்
இசை பாட மறந்தனவாய்
வெறித்திருந்தன சோகத்தால்
சிறகினை வருடும் போது உதிரும்
சிறகுகள்
பனித்துளிகளாய் காற்றிலே
தவழ்ந்து சாமரம் வீசி
அஞ்சலி செலுத்தின




பார்ப்பவர் முகமதில் உயிர்த்தவிப்பு
கால்களும் நடந்தன தெருவழியே
மனதினை நெகிழ்ந்திடும்
இசை பரவுகிறது
இந்த ராகங்கள் எத்தனை
வரலாறுகளை மீட்டுச்செல்கின்றன!

பல ஆயிரம் வீரர்களின்
சரிதங்களை கருவாக தாங்கி
விடியலின் ஜனனத்திற்காய்
காத்திருக்கும் ஈழத்தாய் மடியில்
கருவாய் இவர் சரித்திரமும்.

எங்கள் தோழர்களின்
விதை குழியில்...
சந்தனக் காற்றில் தவழ்ந்து வர
இதயங்களில் சுமையுடனும்
கைகளில் உதிர்ந்தது
ஒரு பிடி மண்...
தொடர்ந்து செல்கிறது
அலை அலையாய்
மனதில் ஓர் ஏக்கம்
தாய் மடி எப்போது
ஜனனிக்கும் புது விடியல்தனை.

மா. ஆதவன்





## தமிழ்க்கவி

# கலி பிரளுது

'நீங்கள் என்ன சொல்லுங்கோ. இந்த மண் பிரச்சினை ஒரு நாளும் முடியப்போறதில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை வந்தென்ன புடுங்கி அடுக்கிறதே'

'சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே இழுபட்ட பிரச்சினை ஒருபக்கம். இதைச்சாட்டி ஊரைவிட்டு வெளியால போனவை ஒருநாளும் திரும்பமாட்டினம் எண்ட நினைப்பில நிண்டவை வலு 'ஹொராந்தாயா' போனவையின்ர காணிவழிய ஆட்சி பிடிச்சிருக்கினம். ம்..ஊரைப்பிடிக்கிறான். ஆமியெண்ண ஆளைவிடெண்டு ஓடினாலும், பக்கத்து காணிக்காரன் ரெண்டடி தள்ளி வேலி போட்டுட்டா கோட்டுக்குப் போறசனம்'.

'சும்மா விடு. எல்லாம் உடம்பில உயிரிருக்கும் தனைக்குந்தான்' கதைய அந்தளவில விட்டிட்டு வந்தாலும் ராசம்மாவுக்கு தன்ர ஊரில என்ன நடந்திருக்கோ எண்ட பயம் இருக்கத்தான் செய்தது.

'இஞ்ச வரியமொரு வீட்டில வாடைக்கிருந்து களைச்சுப்போனம். ஏதோ கொழும்புப் பகுதி எண்ட நினைப்பில வீடுகளுக்கு முப்பது நாப்பதாயிரம் அட்வான்ஸ். அய்நூறு ஆயிரம் வாடகை - சொல்லி வேலையில்லை. நாங்களும் புதுக்குடியிருப்புக்கு வந்தமே!' ராசம்மா சலிச்சுக்கொண்டே வீட்டவர பக்கத்துக் காணிக்க கல்லுப் பறிபடுது.

'ம் ..........சீமெந்தக் காணாம சனம் எவ்வளவு கஸ்டப்பட்டு உந்தக் காசைக் கட்டிக்காத்து வச்சதுகள். வீடுகட்டப் போறாங்களாக்கும்.' ராசம்மாவின்ர குணம் இது. ஆருங்கேக்கினமோ இல்லையோ, ஆரோடயோ கதைக்கிற மாதிரி தன்ர எண்ணத்தில வாறதெல்லாம் வாயால பொழிஞ்சுகொண்டிருப்பா. இந்தக்காணி அவவின்ர இடப்பெயர்வில்லட்டாவது வீடு. இதுக்கு முதல் இருந்த வீட்டில வீட்டுக் காறர் எழும்பச் சொல்லி நிக்க, ஒரு வீடு தேடி அலையலையெண்டு அலைஞ்சு எடுத்த வீடு. இதை வீடெண்டு சொல்லுறதைவிட கூடெண்டு சொல்லலாம்.

ராசம்மாவுக்கு நாலுபணங்கையில இல்லையெண்டாலும், நாலு சனம் ஆதரவிருக்கு. மனிசி தேவையோ தேவையில்லையோ ஆற்ற விசயமெண்டாலும் அக்கறையாய்க் கேக்கவும் யோசினை சொல்லவும் முன்னிக்கும். அவ்வளவுதான்.இப்ப இருக்கிற காணியில வீடு இல்லை. கூடு கட்டித்தான் இருக்கினம். காணிக்காரன் ஒரு பெரிய பணக்காரன். பிள்ளைகுட்டியள வெளிநாடுகள்ள விட்டிட்டு மனிசனும் மனிசியுமா தனிச்சிருக்கினம். ஆரும் நம்பிக்கையானவை காணிக்க இருந்தா நல்லந்தானே எண்டுதான் ராசம்மாவை வீடுகட்டவிட்டவர். ராசம்மாவும் அதுக்குத் தகுந்தமாதிரி அந்தப் பயிர்பச்சையில்லாத காணியைப் பக்குவமாய்ப் பாக்கிறா.

சமையல்ல கையை வச்சிருந்தாலும் அடுத்த காணியில பறிபடுற கல்லும் மணலுந்தான் அவவின்ர கண்ணுக்க நிக்குது.

சந்தைக்குப் போயிற்று வர காணிக்குள்ள ரெண்டு மூண்டு பேர் கோல்போட்டு அளக்கினம். குறுக்குப் பாடு நெடுக்குப்பாடெண்டு ஓடியோடி அளக்கிறாங்கள்.

ராசம்மாவுக்கு நல்லா விடுவிடெண்டு தான் கிடக்கு, என்னே ..ற?சொந்தக்காணியில்லையே. ..க்காரன் இல்லாத இடத்தில் ..க் காணிக்காறன் என்னண்டு பளப்பார்.

உப்பிடித்தான் ராசம்மாவின்ர சொந்தக் காணியைப் பிடிச்சு பக்கத்து காணிக்காறன் வேலி போட்டிருக்கிறானாம். உந்தப் புரிந்துணர்வுஒப்பந்தம் வந்தபிறகு போய்ப்பாத்த ராசம்மாவுக்கு வந்த கோவம் இப்பிடியப்பிடியில்லை.

அதெண்டாலும் பரவாயில்லை. வேலுப்பிள்ளையற்ற காணிக்க இப்ப ஒரு பம்பிடுசிங்கி கல்வீடு கட்டியிருக்கிறா. அந்தாள் பாவம் எங்கேயோபோனடத்தை கிணத்துக்க அடிச்சு விழுத்திப்போட்டாங்களாம். ஒரேயொரு பொடியன் அவனும் விடுதலைப் புலியளோட போட்டானாம்.

எங்கினயன் அலாதில காணிபிடிக்கத் திரியிறவையைக் கண்டா பொல்லாத கோவந்தான் வருது. ஊருலகத்தில நாடு நாடு எண்டு சண்டை பிடிக்க வெளிக்கிட்டவை பாடு குடியிருந்த நிலமும் போச்சு. இனி வல்லடி வழக்கடி எண்டு ஆருதரப் போகினியே, காணியெண்டா சும்மாவே; ராசம்மா புறுபுறுத்து தாளிச்சதும் எரிஞ்சு போச்சு.

'என்னணை உங்க கருகி மணக்கிது'

பொடியன் தான்.... வேலையால வரேக்கயே மூக்கை நீட்டி மணந்து கொண்டு வருது. "அதொண்டுமில்ல" எண்ட ராசம்மா, பொடியனுக்குத் தெரியுமோ தெரியாதோ எண்ட நினைப்பில

"எட பொடியா பக்கத்து வளவுக் காறர், ஏன்ரா இதுக்க வந்து காணியளக்கினம். தங்கடகாணியில வேலை செய்யிறண்டா இஞ்சயேன் அளக்கினம்" எண்டாள்.

பொடியன் விடாது, போய்க் கேக்கட்டும் எண்டுதான் ராசம்மா சொன்னது. அவன் பங்க பேசாமற் போறான். அதுகின்ரை குணமது ஒரு கதையும் பறையாது. எல்லாம் அம்சட்கம்.

"சீமாம்பிள்ளையார் இந்தக் காணிக்கு கொப்பு நேரி வைக்கயுக்கயே உந்தப் பக்கத்துக் காணிக்காறன் பிரச்சினைதா னாம்.தான் ஓர்மமா நிண்டல்லோ எல்லை பிறிச்ச தெண்டு சீமாம்பிள்ளையற்ற மனிசி சொன்னது. "சரியணை அதுக்கு இப்பேன் நீ கத்துறாய்........"

"என்ன...? கத்துறனோ...?" ராசம்மாவுக்கு உண்மையா இறில் வந்திட்டுது. என்னதான் விடிஞ்சாப் பொழுதுபட்டா வாயோயமப் பொரிஞ்சு தள்ளினாலும் 'கத்துறாய்'' எண்டாப் பொல்லாத கோவந்தான் வரும்.

'அப்ப நானென்ன கழுதையே. ஒருநல்லதுபொல்லாதது கதைக்கக் கூடாதே 'கத்துறன் - எல்லாத்துக்கும் கத்துறன்'

ராசம்மாவுக்கு, பக்கத்துக் காணிக்காறன் மேல பாயேலாத ஆத்திரமெல்லாம் இஞ்சால பறியுது.

சீமாம்பிள்ளையற்ற மனிசியறிஞ்சா துலைஞ்சுது. பொல்லாத வாய்க்காற மனிசி. சும்மா எப்பிலதப்பில காணிபாக்க வரயுக்கயே ஊரெடுபடக் கத்திக் கொண்டுவரும்.

"எங்க வேலிக்கதியாலக் காணேல்ல. வெட்டிப் போட்ட கட்டையைக் காணேல்ல. ஆர் வேலி பிரிச்ச. உந்த வாய்க்கால மூடினா என்ன" எண்டு ஊருப்பட்ட கதை. வாயோயாது. இப்ப பக்கத்துக் காணிக்காறன் இவயட காணிய அளந்து பாத்ததெண்டு தெரிஞ்சா ஊர் நாறிப்போம்.

ராசம்மாவுக்கு எப்பிடியெண்டாலும் இந்த மண்பிடிக்கிற வெறியுள்ளவையை கிழிகிழியெண்டு கிழிப்பிக்க வேணும். எங்க ஆளாளுக்கு வீட்ட விட்டிட்டு வெளிக்கிட்டுப் போனா...வீட்டில ஒருவரும் இல்லை. எல்லாம் அலாதில கிடக்கு. ஒரு அச்சறிக்கையில்லாத வீடு.

பிறகும் ஒரு நாலைஞ்சு நாள் கழிச்சுப் பாத்தா கச்சேரிக்காறரோட வந்து காணியளக்கினம். இவைக்கு சீமாம்பிள்ளையரப்பற்றித் தெரியேல்ல. ஆள் இண்டைக்கு நேற்றில்ல. பிரிட்டிஷ் காறன் காலத்திலயிருந்து சிறிலங்கா காறன்ர காலம்போய் தமிழீழக் கோடு வரைக்கும் 'சிவில் லோ' வைக் கரைச்சுக் குடிச்சு காணி வழக்காடின மனிசன் சும்மாயில்லை.

கைத்தடிய ஊண்டிக்கொண்டு தொப்பையைத் தடவித்தடவித் அந்தாள் நடக்கிறதும் ஒரு டாம்பிகம்தான். சும்மாவே உரப்பையில காசு நோட்டுகளை கட்டுக்கட்டா வச்சு - நெறுத்துத் தாணாமே மோள்காறிக்கு சீதனங்குடுத்தது. அப்பேர்கொத்த கொம்பனோட பக்கத்துக் காணிக்காறன் மோதினாவிளையாட்டே!ஆள்உண்டுஇல்லையெண்டு பண்ணிப் போடும். "அந்தநாளில திருக்கணாமலையால வந்த சனமாரோ இதுக்க வீட்டக்கட்டிப் போட்டுதுகளாம். ஒரு கதையில்லையாம். சீமாம் பிள்ளயற்ற மனிசி வந்து முழுச் சாமானுந் தூக்கியெறிஞ்சு கொட்டிலும் பிரிச்சுப்போட்டு போட்டுதாம்''

ராசம்மா மொலுமொலெண்டு ஆருக்கெண்டில்ல சொல்லிக்கொண்டே வேலை செய்யுது. சீமாம்பிள்ளையர் பொல்லாத மனிசன்தான். அந்தாளின்ர காணியள் எவ்வளவு எங்கயெங்கக் கிடக்கெண்டு அவற்ற மனிசிக்கே தெரியாதாம். மெய்யே; இந்தக் காணியள சிங்களவர் பிடிச்சுப் போடக்கூடாதெண்டு எத்தினை பிள்ளையள் போராட இவற்றை பிள்ளையெல்லாம் வெளிநாடுகள்ள வசதியா இருக்குதுகளாம். அவா மனிசிக்காறி சொல்லுறா.

'அதுகளெங்க வாறது சும்மா சேத்து வைப்பம் எண்டு' பின்னை ராசம்மா ஏன் கிடந்து பொரியுது.சும்மா ஒரு பொழிப்பப் பாக்கத்தான்போல. இது நல்ல கதை.அதென்ன பொழிப்பு? அதுகள் எங்கள நம்பித்தானே குடியிருக்க விட்டது. அப்ப நாங்கள் கவனமாகப் பாக்க வேண்டாமோ. எட இது ஒரு கடமையுணர்வுதான்.ராசம்மா இருந்தாப்போல கிளிநொச்சில இருக்கிற மோளப்பாக்க் போட்டா, ஒரு ரெண்டு மூண்டு நாள் மோளோடும் பேரப்பிள்ளையளோடும் நிண்டிட்டு ஆறுதலா வீட்டவந்தா..............வளவு மாறிப்போன மாதிரிக்கிடக்கு.

'ம்........... எட வளவுக்குள்ள ஒரு பாகம் பிடிச்சு கம்பிக்கட்டை போட்டிருக்கு. மனிசி ஏங்கிப்போச்சு. எட ஏதோ சும்மா சும்மா எண்டு பாக்க இவங்கள் உள்ளுக்க இவளவும் பிடிச்சு வேலிபோடவோ.......? மோன்காரன் வந்ததும் வராததுமா மனிசி துவங்கீற்று.

"எடபொடியா ஒரு நம்பிக்கைக்கு இருக்க விட்டா உதுகுமொரு வேலையோடா? அந்தாள்ரெண்டு மூண்டு கட்டைக்கங்கால இருக்க அவங்கள் இந்தவேலை செய்திருக்காங்கள்.போய் சொல்லிப்போட்டு வாடா.நாளைக்கு ஒரு நம்பிக்கைத் துரோகமாய்போயிடும்''.

"சரியணை பேசாத இண்டைக்குத்தான் கட்டை போட்டவை.'

"நீ மறிக்கல்லியே"

"நான் மறிக்க................இது என்ரகாணியே"

"என்னடா காணிக்காரன் வராம அடுத்த காணிக்காரன் வந்து கட்டை போட ...............இக்கணம் அந்தாள் வந்து கிழிக்கப்போகுது. என்ன வில்லங்கம்மப்பா இது. உந்த வேலையைப் போட்டுட்டுப் போடாப்பா............"

ராசம்மா அலுப்பாரிச்சதில் மோன்காறன் உடன வெளிக் கிட்டிட்டான். மகனை அனுப்பிய பிறகுதான மனிசிக்கு நிம்மதி. ஆள் தானே போய்க் கொழுவுதோ, இல்லாட்டிப் பொலிசுக்குப் போகுதோ தெரியா, இல்லாட்டீ....வந்தெல்லாம் புடுங்கி எறியுதோவுந் சொல்லேலா. எப்பிடியோ ஒரு பெரிய சண்டையை எதிர்பாத்து, வலு உற்சாகமாகக குந்தியிருக்கிறா .மகன் வரக் கொஞ்சம் பொழுதுபட்டுப் போச்சு. மனிசியும் அந்தவேலை இந்தவேலையெண்டு கொஞ்சம் அசந்து போச்சு. இரவாகி கொஞ்ச நேரத்தால தான் இருந்தாப்போல நினைவு வந்து 'சீமாம் - பிள்ளையரட்டப் போனநியே? எண்டு கேட்டா.

அவன்"ஓமண - அவரட்ட வந்து கேட்டவையாம் - காணி கொஞ்சம் பிடிபட்டுப் போச்செண்டு......தான்தானாம் சொன்னது அளந்தெடுக்கச் சொல்லி..... தன்ர காணியில கொஞ்சம் கூடத்தான் பிடிபட்டுப்போச்சாம். வேலி போடக்க தான் வந்தா மனவருத்தமா இருக்குமா மெண்டுதானாம் வரயில்ல......'

எட புரிந்துணர்வு உடன்படிக்கை, "ம்..காலங் கலிபிரண்டு கத்தரிக்கா மூழ் பிரண்டுதாம்".ராசம்மா வாயில கைய வச்சிட்டுது.

## மாற்றங்களின் மறைப்பான பாடங்களாய்......



நா.கானகன்

அவன் சிரித்திருப்பான்
அழுதிருக்க நியாயமில்லை
ஏனெனில்,
அவன் வித்தியாசமானவர்களில்
ஒருவன்.

அவர்களின் உல்லாசப்
பயணிப்பின் சிரிப்பொலியுடன்
அவனது சிரிப்பும்
ஆங்காங்கே கலந்திருக்கலாம்.
எனினும்,
அவன் சிரிப்பில் ஆயிரம்
அர்த்தங்கள்.

சொகுசுப்பயணங்களின்
பிரதிபலிப்பாய் அவர்கள்
சுட்டிக்காட்டும் இடங்களிற் கூட.....
அந்தக் காற்றுடன் கலந்த
அவன் மூச்சும்
உலவியபடி ஏதோ சொல்வதற்காய்
எழுந்திருக்கக் கூடும்.

குதூகலங்களைத் தவிர
வேறேதுவுமே சொல்லமுடியாத
அந்த ஊர்தியிலே...
மோதி மோதித் திரும்பியிருக்கக் கூடும்.

எல்லாமே...
மாற்றங்கள் எழுதிய
மறைப்பான பாடங்களாய்
அவர்களின் பயண யாசிப்புகளில்...-
எதையோவெல்லாம்
மறந்து போகின்றார்கள்
சரி போகட்டும்-
வீழ்ந்ததால்
கண் சோர்ந்ததால்
செந்நீர் தோய்ந்துலர்ந்ததால்
ஏறிப்போகின்றோம் என்றாவது
நினைத்துப் போகட்டும்.

## தீ நிழலில்

மூளை மரத்துப் போயிற்று
செயல்கள் அற்ற வாழ்வாய்
நகர்கிறது காலம்.

வெளிப்பு வந்ததென்று
காவோலை முதல்
கருப்பையிலுள்ள உயிர்கள் வரை
ஊர் கூடி மகிழ்கின்றன.

எனக்குள் துயர் நீள்கிறது
வெளிப்பு நிச்சயமில்லை
பாதைகள் அகன்று
மலிவாய் திண்பண்டங்கள் வந்து
உடுதுணி குவிந்து
உறவுகள் இணைந்ததென்று
குதூகலித்த போதும்
உயிர் இழை அதிர்கிறது.

கைப்பிடி மண்ணிற்காய்
அடுத்தடுத்து
உயிர் வார்த்து
அசையாமல் நின்ற
சிறுத்தைப்புள்ளிகளின் நினைவில்
அலைவுறுகிறது மனது.


என்னூரில்
எனை அடையாளப்படுத்த
காவிய அட்டைகள்
இன்னும் பத்திரமாக
உறங்குகின்றன பெட்டியில்.

எந்நேரமும் தீ நிழலில்
தவிக்க கூடுமோ என்பதாய்
உழல்கிறது மனது.

அலையிசை
27.03.2002

# பயிராய் விளைந்த உயிராயுதங்கள்

அ.இரவி



கருமைக்கு 'கடும் அர்த்தம்' கொடுத்த காளையரும், கன்னியரும் கொடுமைக்கு முடிவுகட்ட கொதித்தெழுந்து, குமுறிப் புறப்பட்ட நாட்கள் நகர்கின்றன. அந்தக் காலம் கண்முன்னே தெரிகின்றது. அழகான தமிழில் அலங்காரச் சொல்லில் அதனை வடித்துவிடமுடியாது. மொழிக்கு அந்த வலிமை இல்லை. மௌனத்திற்கு ஆயிரம் அர்த்தம் உண்டு. மௌனமாய் இருப்போம்.மௌனமாய் கண்ணீர் உகுப்போம். மௌனமாய் வணக்கம் செலுத்துவோம். மௌனமாய் வீரர்தமை எண்ணுவோம். மௌனமாய் தலை சாய்ப்போம். மௌனமாய் ஆனவர்கள். மௌனமாய்ப் போனவர்கள், மௌனமாய் ஆயிரம் ஆயிரம் காரியங்கள் தமைச் செய்தவர்கள்.

ஆழ்ந்த அர்த்தமும்
அதனிடையே நிலைத்து
ஓர்ந்த தியாகமும்
ஒருப்பட்ட உறுதியும்
நேர்ந்த வாழ்வில்
நெறி பிறழா இருப்பும்
கூர்ந்த நோக்கும்
குனியாக் கொள்கையும்

கொண்டவர்கள்.

இவர்கள் பற்றி என்ன சொல்லிவிட? எதனை எடுத்து இயம்பிவிட? சொல்லுக்குள் அடங்காத சோதிகள் அல்லவா அவர்கள்! வெல்வதைத் தவிர வேறொன்றுமறியாதவர்கள் அல்லவா அவர்கள்.

நான் கண்ணுற்றேன், அதனை நான் கண்டேன். செருப்புப் போடாத சப்பாத்து அணியாத தனித்த கால், புழுதி படர்ந்த கால், ஒரு பெண்ணில் கால் அது. வீதியின் ஓரத்தில் கிடக்க அதனை நான் கண்டேன். எங்கள் மண்ணிலிருந்து கிளர்ந்த கால், எழுந்த கால். எங்கள் மண்ணில் ஆயிரமாயிரம், இலட்சத்தை தொட்ட கால்களை அழித்த கூட்டத்தின் ஒருவனை அழிக்க நிமிர்ந்த கால். நடந்த கால், வந்த கால், வந்து சென்ற கால். செய்து முடிந்த கால். அந்தக் காலின் நகக் கண்ணில் அழுக்கு இருந்தது. அதனிலும் மேலாக செய்த செயலில் அழகு தெரிந்தது. அந்தக் கால்களை ஒற்றி வணங்குகின்றேன். அந்தக் கால்களை ஈன்ற அன்னையவள், ஈன்றபொழுதில் எண்ணெய் தேய்த்து, நீட்டி நிமிர்த்தி, அழுத்தி, அமுக்கி அழகு செய்திருப்பாள். வயிரம் பாய வழி செய்திருப்பாள். வயிரம் பாயந்த அந்தக் கால் எழுந்து செய்த செயல் செயற்கரியது. எதிரியை அழித்தது. எம்மை தலைநிமிர்த்தியது.

அதனையும் நான் கண்டேன். அந்தக் கண்ணாடியை கறுத்தப்பெண் அணிந்த கண்ணாடியை நான் கண்டேன். 'அந்த ஊர்'ப் பெருவெளிதனில் தனித்தலைந்த அந்தக் கண்ணாடியை நான் கண்ணுற்றேன்.கடல் கடந்து வந்தாயா?

வீரகாவியம் பாடிடும் எங்களை கபளீகரம் செய்ய முயன்றாயா? கழுத்தறுக்க நினைத்தாயா? ஆயிரக்கணக்கில் அல்லல்பட்டோமே. அவதியுற்றோமே. அழிந்து போனோமே! ராஜபரம்பரையில் வந்தவன் நீ. அதிகார சரித்திரத்திரத்தின் இளவரசன் நீ. இந்த ஏழை மனதை எப்படி அறிவாய்? 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' கூரிய வாள்தான் உன்மேல் பாய்ந்ததும்! வாள்கொண்டு, கண்ணாடி அணிந்த அந்த காரிகை திரிந்தாள்.

'அந்நியப் பெருமர நிழலில்
சோகை பிடித்த வாழ்வு வேண்டாம்
விலகு பெருமரமே
ஒளிவிரட்டும்
உன் விழுதுகளை வெட்டுகிறேன்
வழி விட்டும்'

என்றபடி விழுதுவெட்டும் வாள்கொண்டு திரிந்தாள் அந்த வனிதை.

காலங்களில் அளவற்ற நம்பிக்கை இருந்தது. காலங்கள் ஒருபோதும் கைவிடாது. இலக்கே தெளிவெனின், நேர்கொண்ட பார்வை இருக்கெனின் நீதியும், நேர்மையும், உண்மையும் சூழவரின், காலம் கைகொடுக்கும். கைவிடாது காலத்தைக் கையிலெடுத்தாள் கண்ணாடி.......... நாங்கள் சிறையுண்டோம். சிதைந்தோம். எனது கிளைகளும், இலைகளும், மலர்களும் அழிந்தன. எனினும் வேரையும், வேரடிமண்ணையும் பேணினோம்.

'என்னைப் பார்த்து
கைகொட்டிச் சிரிக்கும்
காந்தியின் புத்திரனே
பொய் பேசித்திரிந்தாய்
போய் ஒழிக.
பார், கைவீசி நடப்பேன்
பூமலர'

என்று வாள் சுழற்றி அந்த 'ஊர்'ப் பெருவெளிதனில் கண்ணாடியைக் கழற்றினாள். இப்போது கண்ணாடி தனித்தலைந்தது. கண்ணாடியை எடுத்தேன். கண்ணில்ஒற்றினேன். புதிய ஒளி தெரிந்தது. புதிய வழி தெரிந்தது.

நான் சொல்ல இருக்கின்றன ஆயிரம் கதைகள். அதனிலும் மேலான துயர்கள். வாழ்வு வதைந்து கிடக்க, வருந்தித் துடிக்க, இறுதிக் கணக்கெடுக்க இதுதான்.

மொத்த மலைகள் - 17,211

அவற்றுள் கரும் மலைகள் 217 ஆணாக 160ம், பெண்ணாக 57மாய் நிலைத்தன அம்மலைகள்.

அவற்றிலிருந்து ஓர் மயிரையும் நான் கண்டேன். மயிரெனில் காற்றுக்கு அலைவன. இதுவோ வெறும் அலையுவில்லை இரும்பென நின்றது. மலையிலிருந்து உதிர்ந்த மயிர், எ்கு என எழுதல்தானே உண்மை. அதனைத் தண்டவாளத்தின் அருகில் கண்டேன். கடற்கரைக் காற்றுப்பட நின்றது. நான் கண்ணுற்ற மயிர் கருமையானது. செம்பட்டையாக மினுங்கவில்லை. கனகாலம் காரியம் கைகூடக் காத்திருந்தது. காரியம் கைகூடும் வேளையில் வேகம் எடுத்தது. வேகமோவெனில் கடும் வேகம். மின்னல் அடித்தாப் போன்ற வேகம் இடிவெடித்தது போன்ற தாக்கம். கடற்கரையில் அது நிகழ்ந்ததைக் கண்ணுற்றேன். ஆயிரக்கணக்கில் வான்வெளியில் இருந்தது. அள்ளி எறிந்த குண்டுகள். கோடிக்கணக்கான மயிர்களை எரித்தன. மலைகளைத் தகர்த்தன. மண்ணைப்பொசுக்கின. அதற்கு ஆவன செய்தான் அவன். அவன் செய்த ஆகும் காரியமாம், எம் நெஞ்சை நிறைத்தது. தமிழர் நாமென தலைநிமிர்ந்தது. போய்ப்பார்! அந்த மயிர் இங்கே அதே இடத்தில் எனக்கு என எழுந்து நிற்கும்! 'பாலர் படை' என்று ஒருவன் பகர்ந்தான். 'நம்படை போனால் மூத்திரம் பெய்வார்கள்'என முன்மொழிந்தான் அவன். நெடுத்தவன், உயர்ந்தவன். அதனாலென்ன என்று அவனை அழிக்க ஒருவன் வந்தான். நான் அவன் கைகளைக் கண்டேன். அதன் விரல்களைப் பார்த்தேன். ஒற்றை விரலை நான் கண்டேன். நகம் கடிக்கப்பட்டு, சப்பப்பட்டு இருந்தது. அதிகம் யோசனை செய்தான் அவன். சிந்தித்தான். செயல் திறம்படச் செய்து முடிக்க வேண்டும் என்று பதட்டத்தில் இருந்தான் அவன். பதட்டம் பதகளிப்பாகவில்லை. ஒரு வெடி! ஒரேயொரு வெடி! அவன் பதுட்டம் தணிந்தது. நாடு பதுட்டப்பட்டது. ஆயினும் நமக்கென்ன? வெற்றிகிடைக்கப்பட்டது. ஆயினும் கையும், அதன் விரல்களும் தனித்துக்கிடக்கக் கண்டேன். கையில் கணையாழி, கண்ணாடி காணப்படவில்லை. ஆயினும் வெற்றிவிருது, வீரவிருது காணப்பட்டது.நாம் இன்னமும் இப்படி 217 வென்றவர்கள் எனச் சொல்லலாம். வென்றனர், வீழ்ந்ததில்லை. வெற்றி அன்றி வேறொன்றும் அறிந்ததில்லை. அவர்கள் கதை சொல்லலாம்..கதையாகச் சொல்லமுடியுமா? காவியம் அல்லவா பாடவேண்டும்! காவியத்திற்கும் அப்பால் வேறே வடிவம் உளதா? உளதாயின் அதனாலல்லவா அவர்கள் புகழ் கூறவேண்டும்! இது சாதாரண ஒன்றா? அல்லது சாகசமா? அல்லது சரித்திரக் கதைதானா? சரித்திரத்தைப் புரட்டிப்பார்! இப்படி ஓர் கதையை எங்கேனும் கண்டாயா? உலக வரலாற்றை விரித்துப்பார்! இப்படியோர் வடிவத்தை எங்கேனும் அறிந்ததுண்டா?இவர்களை இப்படியெல்லாம் செய்யத் தூண்டியது என்ன? இத்தனை வைராக்கியமாய் வாழ்வினைத் திகழ வைத்தது எது? ஆரும் கண்டிராத , ஆரும் கேட்டிராத அற்புதத்தைத் திகழ வைத்தது எது?

'அண்ட கோள்களையும்
அளக்கும் விஞ்ஞானிகளே
இந்த வேங்கைகளை
எப்படி அழைப்பீர்கள்?
உலக அதிசயங்கள் ஏழு என்றவர்களே
இந்த அதிசயங்களை
எதிலே சேர்ப்பீர்கள்?
ஓடி, ஓடி உலகெங்கும்
ஆயுதம் வாங்கினாலும்
இந்த உயிராயுதங்களை
எப்படி இல்லாதழிப்பாய்?
பகைவனே,
படுக்கையைத் தட்டிப் பார்த்துவிட்டுத்
தூங்கு
கட்டிலுக்குக் கீழேயும் கரும்புலி
இருப்பான்!

காற்று தன் வணக்கம் சொன்னது. வீசும் காற்று தன் வீரியமிக்க வார்த்தைகளால் வணக்கம் செய்தது.காற்றுக் கண்ட கதைகள் அநேகம். அவற்றினில் இதுவோர் உயர்ந்த கதை என்றது. காற்று தன் சிரம் தாழ்த்தி இக்கரும் மனிதருக்கு வணக்கம் வைத்தது.

ஆயிரம் கரங்கள் நீட்டி அணைக்கின்ற தாயான ஞாயிறு தன் நன்றியைச் சொன்னது.

நீ ஒளி
நீ சுடர்
நீ விளக்கம்
நீ காட்சி

தனக்குத் தரப்பட்ட விருதுகள் யாவற்றையம் ஞாயிறு இவ்வீரர்களிடம் கொடுத்தது. வாழ்த்தி, வணங்கி நின்றது.

கடல் அன்னை தன் குமுறும் அலைக் கரங்கள் நீட்டி



அவர்களை அணைத்ததும் அழைத்தது. வாழ்த்துச் சொன்னது. வணக்கம் செய்தது. கடலிலும் வலியவர் நீவிர் என்று வீழ்ந்து எழுந்தது.

மண்ணும் தன் நெற்றி முட்ட வீழ்ந்து வணங்கியது. தன்மீது விளைந்த மலர் சொரிய மாநிலம் அவர்களை மனதார வணங்கியது. மலை ஒருகணம் அதிர்ந்தது. அவர்கள் மரணம் கண்டு தகித்தது. என்னைவிடக் கடினமானவர் என்றது மலை தன் சிரம் தாழ்த்தி மலை.

வலிமையானவரே, வா வாழ்ந்துவிடு என்று வணக்கம் செய்தது.

நதியோரம் நீ நடந்தால் நான் சொல்வதைப் புரிவாய்? 'வாழ்வு நகர்ந்துகொண்டே இருக்கிறது. வண்ண வடிவமாய் ஒளிர்கின்றது. நகர்ந்து கொண்டே இருக்கின்றேன். நான் நாள்தோறும் புதிது புதிதாய் பிறக்கின்றேன். நீயும் அவ்வாறே பிறக்கிறாய். பிறக்கிறாய்........ இறக்கவில்லை' என்று வணக்கம் செய்.

பச்சையாய், பசுமையாய், பலன்தரும் உயிராய் பயிராய் விளையும் இந்த உயிராயுதங்களுக்கு உயிரும், உடலும் உரிமையாய் தலை தாழ்த்தி, தாள்பணிந்து வணக்கம் வழங்குகின்றது.

# காற்றின் மடி


காற்று ஓங்கி அறைந்து சென்றது
என் செவிப்பறை மீது
என் காலத்தையும், கனவுகளையும்
சிதைத்த படி

என் மௌனமான காலத்தையும்,
கனவுகளையும்
சில நொடிப் பொழுதுகளில்
கலைத்துச் செல்லும் அந்தக் காற்றின்
விகாரம் பற்றி சொன்னேன்
எவரும் நம்பவில்லை.

காற்றின் மென்மையினை தாம்
உணர்ந்தவர்கள் என்றும்
அதன் சுகந்தத்தில் தாம் வாழ்பவர்கள்
என்றும்
திரும்பத், திரும்ப சொல்லி,
உயர்வாக தம்மைப்பாவனை
செய்துகொண்டிருந்தார்கள்
காற்றின் விகாரத்தைச்
சொல்லிக் கொள்வதில்
பலன் இல்லை
மென்மையான காற்றுக்கும், சூறாவளிக்கும்
வேறுபாடு அறியாதவர்களாய்
அவர்கள் இருந்தார்கள்.

பின்னொரு நாளில்
அவர்கள் வீட்டு முற்றத்து மலர்கள்
சிதைந்து கிடக்கக் கண்டதாகவும்
அவர்களது தோட்டத்தில்
காற்றின் புன்னகை
நாறி மணப்பதாகவும் புலம்பினாார்கள்.
அவர்கள் தமது சந்தேகங்களை
காற்றின் மீதில் கொண்டுள்ளதாகவும்
அறிவித்தார்கள்.
நான் எனது காலத்தையும்,
கனவுகளையும்
விகாரமான காற்றின் பிடியில் இருந்து
விலக்கிக் கொண்டு
நீண்டதூரம் பயணித்து விட்டேன்.

அவர்கள் காற்றின் பிடிக்குள்
சிக்கிக் கொண்டிருந்தார்கள்
அவர்கள் தோட்டத்து மலர்கள்
தினமும்
சிதைந்து கருகிக் கொண்டிருந்தன
அவர்கள்விகாரமான
காற்றின் பிடியிலிருந்து
விடுபட முடியாது
தவித்துக் கொண்டிருந்தார்கள்



தானா.விஷ்ணு
14.09.2002எ

வன்னி
ஒக்ரோபர்-2002

# தூது




அன்பின் தயாவுக்கு,

நலமாக இருப்பீர்களென்று நம்புகின்றேன். நீண்டநாட்களின் பிறகு உங்களுக்கு கடிதம் எழுத இப்பொழுதுதான் சாத்தியமாகின்றது. இப்படி நீண்டநாட்களின் பின் எழுதும்போது நிறைய விடயங்கள் சேர்ந்து விடுகின்றன. எதை எழுதுவது எதைவிடுவது என்று தெரியவில்லை.எல்லாவற்றையும் எழுதவேணும் போலுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முக்கியத்துவமும் முதன்மையுமுண்டல்லவா! இந்தக் கடிதத்தில், இம்முறை எல்லாவற்றுக்கும் இடமில்லையாயினும் சிலதையாவது எழுதுகின்றேன்.

இங்கே இப்பொழுது அமைதி நிலவும். எல்லாப்பொருட்களும் கிடைக்கும். மக்கள் இயல்புவாழ்க்கைக்குத் திரும்பியிருப்பார்கள். சூழல் மாறியிருக்கும் என்றெல்லாம் நீங்கள் நினைக்கக் கூடும். நீங்கள் அப்படி நினைப்பதில் தவறில்லை. நமது பெரும்பாலான பத்திரிகைகள் (தமிழ்) அதிலும் வர்ணப்பத்திரிகைகள் உங்களை அப்படித்தான் நினைக்க வைத்திருக்கும். இந்தப்பத்திரிகைகளின் தன்மையே அநேகமாக அப்படித்தான். எதையும் நேர்மையாகவும் உண்மையாகவும் பேசுவது குறைவு. பொய்யுரையும், புகழுரையுமே இன்று இவற்றின் பொதுக்குணாம்சமாகி வருகிறது. சமூகத்தையும் வரலாற்றின் நிகழ்வுப்போக்கினையும் பயன்படுத்திப் புதிய வழியில் வளம்படுத்திச் செல்லவேண்டிய இப்பத்திரிகைகள் வெறும் வணிக ஏடுகளாக மலிந்து வருகின்றன. யார் யாரை எப்படித்திருப்திப்படுத்தலாம் என்பதே இவற்றின் பிரதான நோக்கம். எப்படி வெகுஜனத்தின் மனதை மலினமான ரசனைமுறைக்கும், வாசிப்புமுறைக்குமுட்படுத்தலாம் என்பதிலேயே இப்பத்திரிகைகள் அதிகம் தலையைப் பிய்த்துக் கொள்கின்றன. இந்த நிலையில் மெய்வாழ்க்கையை இவை எப்படி வெளிப்படுத்தமுடியும்?

நாம் அரை நூற்றாண்டுக்கு மேலாகப் போராடியிருக்கிறோம். அழிவுகளையும் உயிரிழப்புகளையும் வாழ்விழப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்திருக்கிறோம். அதிலும் 20 வருடங்கள் வரையில் நாம் சிந்திய குருதி கொஞ்சமல்ல. பட்ட துயரம் சிறிதல்ல. கொடுத்த உயிர்கள் குறைவானவையுமல்ல.

யுத்தம் நமது மடியில் நடந்திருக்கிறது. போராட்டம் நமது வாழ்வில் நிகழ்ந்திருக்கிறது. இப்படி யதார்த்தம் இருக்கும்போது இந்த யதார்த்தத்துக்குப் புறம்பாகவே அதிகமான தருணங்களிலும் விதங்களிலும் இந்தப்பத்திரிகைகள் செயற்படுகின்றன.

யுத்தமும் அழிவும் நிகழ்ந்த களத்தின் மனிதர் நாம். எல்லாம் தகர்ந்து போராட்டம் உறுதிபெற்ற களத்தின் மக்கள் நாம். இந்தநிலையில் தீவிரமாகவே-சீரியஸாகவே நாம் எதையும் சிந்திக்கவேண்டும். அணுகவேண்டும். மடியில் நிகழ்ந்த யுத்தத்தின் கனதியையும் இதயத்தில் நிகழும் போராட்டத்தின் பெறுமதியையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.நண்பர் நிலாந்தன் சொல்லுவார் "யுத்தம் எல்லா விழல்தனங்களையும் அறுத்தெறிந்துவிடும்" என்று. ஆனால் விழல்தனங்களை இன்றும் விட்டுவிடாமல் மேலும் வளர்க்கும் விதமாகவே இவை இருக்கின்றன.

அரசியல் கலாச்சாரம், சமூகவியல், எதிலும் அறிவுபூர்வமான அணுகுமுறை குறைவு. பதிலாக தென்னிந்திய சினிமாக்காட்சிகளை 'வர்ணக்கலைச்சேவை' யாக அறிமுகப்படுத்துவதிலும் சினிமா உலக சமாச்சாரங்களுக்கு இடமளிப்பதிலுமே அதிக கவனம் செலுத்துகின்றன.

போர்நிகழ்ந்த போதுகூட கசியும் தகவல்களை அல்லது ஊகங்களை முன்வைத்து கட்டுரைகளைத் தயாரித்து அதை வியாபாரமாக்கின. அதேபோல இப்போது சமாதானத்தையும் வியாபாரமாக்க முயல்கின்றன என்கிறார் ஒரு நண்பர். சிங்களப் பேரினவாதிகளால் போர்திணிக்கப்பட்ட முறைமை, அதன் கொடூரம், நமது போர்க்கால வாழ்க்கை, ஒடுக்குமுறையை நாம் எதிர்கொண்டு நடத்திய போராட்டம், அதனை நெறிப்படுத்தி வழிப்படுத்திய விடுதலைப்புலிகளின் ஆற்றல், எமது ஒவ்வொரு போராளியினதும் வியத்தகு உணர்வுகள், அவர்கள் செயற்பட்ட அபூர்வமான தன்மைகள் என்றெல்லாம் எவ்வளவை இவை எழுதியிருக்கலாம்.

யுத்தம் மிகத்தீவிரமாக நடந்த நாட்களில், போராளிகளின் வித்துடல்களை நாம் மண்ணில் விதைத்துக்கொண்டிருந்த தருணங்களிலெல்லாம் பத்திரிகைகளின் பாதிப்பக்கங்களும் கிளுகிளுப்பூட்டும்மசாலா விசயங்களுக்கே களம் தந்தன. இதுவரையில் இவை எத்தனை மாவீரர்களையும் மகத்தான நிகழ்வுகளையும் வாசகருக்குச் சொல்லியிருக்கின்றன? எத்தனை போராட்டக் கவிதைகளையும் பாடல்களையும் கதைகளையும் வெளியிட்டிருக்கின்றன? ஆனால் அப்போது சில பத்திரிகைகள் சினிமாப்பாடல்களையும் விழல் விடயங்களையும்தான் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்குத் தந்தன.

நீண்டகாலமாக இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நாம். நீண்டகாலமாக விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருப்போர் நாம். போராட்டத்துக்காக வாழ்வையும் உயிரையும் அதிகம் அர்ப்பணித்தவர்கள் நாம். இவையெல்லாம் நம்மைப் பண்படுத்தி, நெறிப்படுத்தி, ஒரு புதிய காலத்தை நோக்கி, ஒரு புதிய வாழ்வை நோக்கி நம்மை அழைத்துச் செல்லவேண்டும். தகர்ந்திருக்கும் மனங்களையும் சிதைந்திருக்கும் வாழ்வையும் அழிந்திருக்கும் தேசத்தையும் புது நிர்மாணம் செய்யக்கூடிய சிந்தனையையும் விழிப்புணர்வையும் மக்களிடத்தில் ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் முயலவேண்டும். போராடிப்பெறும் சுதந்திரத்தை இன்னும் அர்த்தமுள்ளதாக்க சீரிய சிந்தனையை வளர்த்தெடுக்கவேண்டும்.

தன்னைப்பற்றி மட்டுமே சிந்திக்கும் பழக்கத்தையுடைய சமூகத்திலிருந்து சமூகத்திற்காகவும் தேசத்துக்காகவும் சிந்திக்கவும் செயற்படவும் தன்னையே அர்ப்பணிக்கவும் கூடிய

பல ஆயிரக்கணக்கான போராளிகளை உருவாக்கியவர் தலைவர் பிரபாகரன் அவர்கள். இந்தப்போராளிகளுடன் துணைநின்று, தோள்சேர்த்துப் போராடுகின்றனர் மக்கள். இந்த மக்களின் மனதில் இன்னும் விடுதலைக் கனவையும் அறிவையம் வளர்த்தெடுப்பதில் நமது ஊடகங்களுக்குப் பெரும் பொறுப்புண்டல்லவா?

நண்ப,

வன்னியும் படுவான்கரையும் தனித்துவிடப்பட்டபோது மக்கள் பட்ட துயர் சிறிதல்ல. இவற்றை வெறுமனே சில புகைப்படங்களைப் பிரசுரித்து அவலத்திலும் துன்பத்திலும் துயரத்திலும் மக்கள் அல்லாடுகிறார்கள் என்று எழுதியதால் மட்டும் இந்த மக்களின் வாழ்நிலை வெளியே தெரிந்துவிடுவதில்லை. உண்மையில் பசியுடனும் பெரும் சுமைநிறைந்த வாழ்வுடனும் நெருக்கடிகளின் மத்தியிலும் சளைத்துவிடாமல் இந்தமக்கள் எல்லைப்படையென்றும், சிறப்புப்படையென்றும், போராளிகளென்றும் ஒருமித்துப்போர்க்களத்தில் நின்றார்கள்.வாழ்வின் எல்லா வசதிகளையும் வளங்களையும் துறந்தே பயிற்சியெடுத்தார்கள், போரிட்டார்கள்.எங்கள் தலைவரின் சிந்தனைக்கு வடிவம் கொடுத்தார்கள். இதன் பெறுமதி சாதாரணமானதல்ல. இதனை எல்லா மனிதரும் உணரக்கூடிய வழிகளைப் பேசியிருக்கலாமல்லவா? ஆனால் பல ஊடகங்களும் கவனித்ததாகத் தெரியவில்லை. இப்படி விடுபட்டுப்போன சங்கதிகள் ஆயிரமுண்டு.

இப்பொழுது சமாதானம் பற்றியே பேச்சாயிருக்கிறது. நல்லது. அமைதியும் சமாதானமும் கிட்டுவதில் நிறைய மகிழ்ச்சி. நிலையான சமாதானத்துக்கு வலுவான தீர்வு தேவை. தீர்வுக்கான முயற்சிகளின் முன்னோட்டத்தில் இடைக்கால நிர்வாகம் பற்றி பேச்சுகள் பரவலாக அடிபடுகின்றது. இந்த இடைக்கால நிர்வாகத்துடன்தான் அபிவிருத்தியும் புனர்நிர்மாணமும் முழு அளவில் சாத்தியப்படும் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அதற்கு முன்பு சிறு அளவிலாவது அடிப்படைத் தேவைகளின் மீது சில கவனமாவது வேண்டுமல்லவா?

நாம் இப்போது உடனடியாக மின்சாரத்தையோ, தொலைபேசியையோ கேட்கவில்லை. அதற்காக இவை தேவையில்லாதவை என்று பொருளல்ல. மிக அவசியமான தேவைகளாக இருக்கும் வீதிகளுக்குக் கொஞ்சம் தார் ஊற்றுங்கள் என்றுதான் கேட்கின்றோம். புழுதியும், தூசும் குடித்துக் குடித்தே செத்துவிடுவோம் போலிருக்கிறது. உண்மையில் நண்பரே, வீதியால் பயணிப்பதை நினைக்கும் போது பெரும் பயமாக இருக்கிறது. யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் யுத்தத்தின் பாதிப்பைவிட படையாய் எழும்பும் தூசியின்பாதிப்பே அதிகமாக இருக்கின்றது.

பல இடங்களிலும் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகிறார்கள். இன்னும் கண்ணிவெடி, மிதிவெடி அச்சம் தீரவில்லை. வெண்டூரா நிறுவனத்தினர் துரிதமாக மிதிவெடி அகற்றும் பணியைச் செய்துவருகின்றனர்தான். ஆனால் மிதிவெடி, கண்ணிவெடிப் பரப்போ மிக நீண்டிருக்கிறது.



மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கு பாடசாலை வசதிகள் உடனே தேவை. சாட்டுக்கு பாடசாலைகள் சில ஆசிரியர்களுடன் மட்டும் இயங்கினால் போதாது. வளங்களும் வேண்டும். அப்படியே வைத்திய வசதியும். தமிழீழ சுகாதார சேவையினர் நடமாடும் மருத்துவ சேவையை விரிவுபடுத்திவருகின்றனர். ஆனபோதும் பற்றாக்குறையும் குறைபாடுமாகவே நிலைமை இருக்கின்றது. இப்படி எல்லாவற்றையும் ஒழுங்கமைக்க வேண்டியே இருக்கின்றது. இதற்கு நிறைய நிதி தேவை. இவையெல்லாம் நிறைவாகும் நாளையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தயா,

எல்லா இடங்களிலிருந்தும் ஊர்பார்க்கவென்று பலரும் வந்து போகிறார்கள். புலம்பெயர்ந்திருந்தவர்கள் போன இரண்டு மாதமும் வந்துகுவிந்திருந்தார்கள் ஒருவர் புலம்பெயர்நாட்டில் விட்டுவந்த தன் மனைவி பிள்ளைகளுடன் தினமும் கதைக்க வேண்டுமென்று தவியாய்த் தவித்ததைப் பார்த்தேன். இது தவறானதல்ல. இங்கே களத்தில் பிள்ளைகளும் வீட்டிலும் அகதிமுகாமிலுமாக எத்தனை உறவுகள் இருந்தன என்று எண்ணிப்பாருங்கள். இந்த உணர்வுப்பரிவர்த்தனையைத்தான் மீடியாக்கள் செய்திருக்க வேண்டுமென்று முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

இன்னுமொரு சம்பவம்.போனமாதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரிய நியமனம் கிடைத்து மூவர் வன்னிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் வன்னியில், முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்தவுடன் ரெலிபோன் எடுத்து சொல்லும்படி வீட்டார் சொல்லிவிட்டிருந்தார்களென்று கூறித் தொடர்புகொள்ள முயன்றார்கள். வன்னியில் தொலைத்தொடர்புசேவை இயல்புநிலையாக இன்னும் பொருந்தவில்லை என்பது அவர்களுக்குத் தெரியாது. இப்படித்தான் பலவற்றிலும் நிகழ்கிறது.

நண்ப,

உங்கள் ஓவியங்கள் சிலவற்றை சில இதழ்களில் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் இந்திய ஓவியர்களின் அடையாளங்கள் சிலவற்றில் தெரிகிறது. ஆதிமூலமும் மருதுவும் இணைந்த கலவையாக அவை தெரிகின்றன. பொருள்ரீதியிலும் வெளிப்பாட்டு முறையிலும் நீங்கள் வேறுபடலாம். வேறு பெயின்ரிங்ஸ் செய்யவில்லையா?

இங்கே இன்னம் மழைபெய்யவில்லை. கடுங்கோடை தகிக்கிறது. ஒரே வரட்சியும் வெக்கையுமாக இருக்கிறது. கிணறுகள் நீரின்றிப் போகின்றன. குளங்களில் சேறு வெடித்திருக்கிறது. புழுதி சூடேறிக் கொதிக்குது.

மக்களில் அநேகர் யாழ்ப்பாணத்துக்கும் திருமலை மட்டக்களப்புக்கும் என்று போய்க்கொண்டிருக்கிறார்கள். இம்முறை வன்னியில் மாவீரர் நாளுக்கு துயிலுமில்லங்கள் என்றுமில்லாத அளவுக்கு பெற்றோராலும் உறவினராலும் நிரம்பப்போகின்றது. வன்னியில் யுத்தம் நிகழ்ந்தபோது வீரச்சாவடைந்த போராளிகளின் பல பெற்றோரும் உறவினரும் வன்னிக்கு வெளியே இருந்தனர். இப்போது பாதைதிறக்கப்பட்டிருப்பதால் எல்லோரும் வந்து இங்கே கூடுவர். போராட்ட மையம் எங்கிருக்கின்றதோ அங்கேதானே உயிர்ச்சூடிருக்கும் என்பார்கள். உண்மைதான். சமாதான காலநடவடிக்கையிலும் இதை அவதானிக்கலாம். வேறு என்ன மீண்டும் தொடர்வோம். கடிதம் எழுதுங்கள்.

நட்புடன்

நிவேதன

0[illegible]-10-2002

# அனுபவத்தின் பெறுமதி உயிர்



நீரைக்கிழித்து விரைகிறது நீருந்து விசைப்படகு. கடூர இருளும் கருங்கடலும் கைகோர்த்துள்ளன. விசைப்படகில் மோதும் பேரலைகள் உள்ளிருப்பவர்களைத் தூக்கியடிக்கின்றது. அப்படகில் '50 கலிபர்' துப்பாக்கியொன்று பொருத்தப்பட்டுள்ளது. அதனைத்தயார் நிலையில் வைத்தபடி வலத்திசையை உற்று நோக்குகின்றாள் ஒரு பெண் கடற்புலி. அவளின் கால்களுக்கு அருகில் வலது கால் முழுவதும் P.O.P கட்டுடன் கிடத்தப்பட்டுள்ளான் போராளி யொருவன். அங்குகாணப்படும் போராளி மருத்துவனும் ஏனைய சகலரும் வலத் திசையாலே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்கள். சுமார் ஒரு மைல் தூரமளவில் நடைபெறும் கடற்சமர் இடையிடையே கடலில் தீப்பிளம்புகளை தோற்றுவிக்கின்றது. இருளைக் கிடையாகக் கிழிக்கும் ரவை மழையும், வானைப் பிரகாசமாக்கி நட்சத்திரங்களைக் கரைய வைக்கும் பரா வெளிச்சங்களும், படகில் இரைந்தபடியே கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டிருக்கும் தொலைத் தொடர்புக்கருவியும். வலியில் முனகும் காயக்காரனும், கடல் நீரில் நனைந்து கடற்காற்றினால் சில்லிடும் உடல்களுமென கடற்சமர் சூடுபிடித்துள்ளது. இக்காயக்காரனை வன்னிப்பெருநிலம் கொண்டு செல்லவும், படைக்கல பரிமாற்றங்கள் செய்யவுமென, பாதுகாப்புக் கொடுத்து நிற்கும் கடற்புலி கலங்களிற்கும் கடற்படைக் கலங்களிற்கும் இடையேயான கடற்சமர் ஆரம்பித்து விட்டது.

இதோ! இவர்களின் கடல் வியூகத்தை உடைத்து, பகைக் கலமொன்று, நெருப்புத்துண்டங்களை வேகமாக உமிழ்ந்து வரும் இராட்சத முதலையென, அலைகளில் பாய்ந்து பாய்ந்து பக்க வாட்டாக வேகமாக உமிழ்ந்துவரும் இராட்சத முதலையென, அலைகளில் பாய்ந்து பாய்ந்து பக்க வாட்டாக இவர்களை நோக்கி வருகின்றது. தனது ஆளுகையில் இருக்கும் இயந்திரத் தப்பாக்கியை அவள் அதனை நோக்கித் திருப்புகின்றாள். இவர்களின் சூட்டு வலுவோ பலமடங்கு குறைவானது. எனினும், சில கணங்களில் நேரடி வலுச்சண்டையொன்று மூழப்போகின்றது. முண்ணாணைச் சில்லிட வைக்கும் அச்சிலகண இடைவெளியில், இவ்விரு கலங்களிடையே சீறிப்பாய்ந்து வந்த கடற்புலிச் சமர்க்கலமொன்று பகைக் கலத்தைப் போரிற்கு இழுக்கின்றது. அது தன் திசை மாற்றிச் செல்கின்றது. ஒரு காயக்காரனைக் காப்பாற்றவென சிலர் வீரச்சாவடையும், பலர் காயமடையும் கடற்சமர் தொடர்கின்றது. அச் சூழலிலும் அம்மருத்துவனின் மனவோட்டம் சில நாட்கள் பின் நோக்கி கடக்கின்றது.

1999 யூலை 31, அதிகாலை அந்தத் திருமலை காட்டு முகாமில் பரபரப்புக் குறைந்து காணப்படுகின்றது. பெரும் பாலானவர்கள் பதுங்கித் தாக்குதல் ஒன்றைச் செய்வதற்காக இரவோடிரவாக நகர்ந்து விட்டிருந்தனர். திட்டமிட்டபடி சூரியக்கதிர்கள் தெறிக்கும் நேரம் வீதிச் சோதனைக்கு வரும் பகைவர் மீது உயிர் பறிக்கும் தாக்குதல் தொடங்கப்படும். இவர்கள் தரப்பில் எவ்வித இழப்புக்களும் ஏற்படாத வண்ணமே திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏனெனில் அம் முகாமின் மூன்றுதிசைகளிலும், சிலமைல் தொலைவில் தொடர் இராணுவ முகாம்கள் உள்ளன. நான்காம் திசையை கடல்வரையறுத்துள்ளது.

இச் சூழ் நிலையில் காயமடைபவர் களைக் காப்பாற்றி பராமரித்து வன்னிக்கு அனுப்புவதென்பது கற்பனை கடந்த கடினங்களை உள்ளடக்கியதாகும். வேகமான நகர்த்திறனைக் கொண்டிருப்பதுடன், தற்காலிகமாக தங்ககங்களை அமைத்துத் தங்குவதே இவர்கள் வழமையாகும். எதிரிக்குத் தொல்லை கொடுக்கும் தாக்குதல்களை அடிக்கடி மேற்கொள்ளவேண்டும். இதனால் பகைவனுடைய படைப்பலம் இம்மாவட்டத்தில் முடக்கப்படும். வன்னியை ஊடறுக்க முனையும் 'ஜெயசிக்குறு'ப் படையினருக்கு வலுவூட்டும் படைகள் இங்கிருந்து செல்வது தவிர்க்கப்படும். மேலும் இத்தாக்குதல் நடக்கும் இடத்தில்தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு போராளியை எதிரி கொன்று அவன் தலையை வெட்டிச் சென்றிருந்தான். அதற்கான பதிலடியாகவும் இது அமைய வேண்டும்.திடீரென இவர்களின் தொலைத் தொடர்புக் கருவிகள் உயிர் பெறுகின்றன. சண்டையின் விபரத்தைக் களமுனைத் தளபதி அறிவிக்கின்றார். இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட மற்றவர்கள் தப்பியோடிவிட்டார்கள் என. இவர்கள் கைப்பற்றிய ஆயுதங்களுடன் எவ்வித இழப்புகளுமின்றி பின் வாங்குகின்றனர். களமருத்துவன் ஆசுவாசப் பெருமூச்சு விடுகின்றான். எதிரியின் இராணுவ மூளை இவர்கள் பின்வாங்கும் திசையைச் சரியாகக் கணித்திருக்க வேண்டும். பல ணுமுனைகளில் இருந்தும் ஒருங்கிணைந்த எறிகணை வீச்சை செறிவாக மேற்கொள்கின்றான். முகாம் மீண்ட போராளிகள் கையசைப்பினூடாகவும், புன்சிரிப்பினூடாகவும் வெற்றியைப் பகிர்ந்தபடியே பதுங்கு குழிகளினுள் புகுந்துகொள்கிறார்கள். அப்பொழுது வந்து விழுந்து வெடித்த எறிகணையொன்று இருவரைக் காயப்படுத்தி விட்டது.

கணமும் தாமதிக்காது அவர்களை காப்பரண்களினுள் இழுத்துச் சென்றவர்கள் இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்துகின்றனர். மேலதிக சிகிச்சையினை இப்பொழுது செய்யமுடியாது. எறிகணை வீச்சு சற்றேனும் ஓய வேண்டும். கால்மணி நேரத்தின் பின்னர் காயங்களைக் களமருத்துவன் கவனமாகப் பரிசோதிக்கிறான். உடனடியாக இருவருக்கும் பெரிய சத்திர சிகிச்சைகள் செய்ய வேண்டும். ஒருவனுக்கு வலதுகால் முழங்காலிற்கு கீழாகச் சிதைந்து விட்டது. மற்றவனுக்கு முதுகினைத் துளையிட்டுச் சென்றுள்ள எறிகணைச் சிதறல் வயிற்றறை உள்ளுறுப்புகளைத் தாக்கிவிட்டது.

தளபதிக்கு மருத்துவர் நிலைமையை விளக்குகின்றார். அவர் அணிகளை மீள ஒழுங்கமைக்கின்றார். இரண்டாமவனின் வயிற்றறையினைத் திறந்துதான் மேலதிக சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான மருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், ஆதரவாளர் வீடொன்றின் குளிர்சாதனப் பெட்டியினுள் வைக்கப்பட்டுள்ளது. அதனை எடுத்து வருவதற்காக அணிகளை அனுப்ப வேண்டும். ஒரு பகல் நடந்து, இரவு இராணுவக் காவல் அரண்கள் கடந்து, ஊர்மனையினுள் புகுந்து, குறித்த மருந்தினை எடுத்து, மறுநாள் பகல் மீள வேண்டும். ஏதோவொரு வழியில் நிச்சயம் இராணுவத்தினரின் பதுங்கித் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம். அவ்வாறு நடைபெறின் சிலர் இறக்கவோ, காயமடையவோ வேண்டி வரலாம்.அவ்வாறு நடந்தால்......... நினைக்கவே பயமாக

தூயவன்

இருக்கின்றது. காயமடைதல்: மருந்துத் தேவைக்காகச் செல்லுதல்: மீண்டும் காயமடைதல்: மருந்தேவைக்காகச் செல்லுதல்: மீண்டும்காயமடைதல்: மீண்டும் .... எனவொரு நச்சுவட்டமே தொடர்கதை பாகிவிடும்.எனினும்ஆள்எண்ணிக்கை மீதான இலாப நட்டக் கணக்கைவிட போராளிகளின் உளவியல் பலம் பேணப்பட வேண்டும். ஆதலால் துணைத்தளபதி தலைமையில் அணிகள் புறப்பட்டுவிட்டன.

இங்குபோராளிமருத்துவன் உதவியாளர்களுடன்தனது பணியை வேகப்படுத்துகின்றான். காட்டு மரம் ஒன்றின் கீழ் காட்டு மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மாதிரிக் கட்டில் ஒன்றில் கால்க் காயக்காரனுக்கு சிகிச்சையை ஆரம்பிக்கிறான். எவ்வித அடிப்படை உயிர்காப்பு வசதியும் இல்லாமல் மயக்க மருந்து கொடுத்து சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றது. சாதாரண சூழலில் இவ்வாறுசெய்வது மருத்துவ விதிகளுக்கு முற்றிலும் முரணானது. ஆனால் அதுவே இங்கே விதியானது. சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தேவையான மருந்துகள் பல்வேறு பகுதிகளில் உருமறைந்திருந்தமரப் பரண்களில் இருந்து எடுத்துவரப்படுகின்றன. போராளியொருவனில் இருந்து பெறப்பட்ட இரத்தமானது, நேரடிப் பரிசோதனை மூலம் ஒருங்கொட்டாமை உறுதி செய்யப்பட்டு இவனுக்கு ஏற்றப்படுகின்றது. புதிய சூழல் என்பதால் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளுக்கு தாக்கு பிடிக்க வல்லமை பெற்ற கிருமிகளின் தொற்று தவிர்க்கப்படும். இது சாதகமானஒன்று. வெட்டித் திறக்கப்பட்ட கால்க் காயத்திலிருந்து இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும் நாடி நாளங்கள் பிடித்துக்கட்டப்படுகின்றன. சிதைந்த தசை நார்கள் வெட்டி அகற்றப்படுகின்றது.என்பு சீராக்கப்பட்டு P.O.P போடப்பட்டுசிகிச்சை வெற்றிகரமாகநிறைவுசெய்யப்படுகின்றது.

மறுபகுதியில் ஒரு தற்காலிகமாக சத்திர சிகிச்சைக்கூடம் "பிளாஸ்ரிக் ரெண்டினால்" அமைக்கப்படுகின்றது. அவ்வேலை முடிவடைய சில மணித்தியாலங்கள் தேவைப்படும். சிறு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. தளபதி உட்பட அனைவரும்பம்பரமாகச்செயற் படுகின்றனர். இதனுள்தான் வயிற்றறையைத் திறக்கும்சிகிச்சையைச் செய்யலாம்.

வயிற்றறைக் காயத்திற்குட்பட்டவனின் நிலையோ மோசமடைந்து கொண்டு செல்கின்றது. நிமிடங்கள் ஒவ்வொன்றும் நாட்களாகக் கழிகின்றது. "டொக்டர் நான் தப்புவனா? ஏன் எனக்கு இன்னும் ஒப்பிரேசன் செய்யவில்லை?" போன்ற அவனின் கேள்விகள் இவனைக் குடைந்து எடுக்கின்றது. மருத்துவனோ அவன் தலையைத் தடவிய வண்ணம் "இன்னும் கொஞ்ச நேரத்தில தொடங்கிடுவம்.மருந்துக்குப் போனவையள் வந்து கொண்டிருக்கினம்" எனத்தன்னாலான பொய்களைச் சொல்கின்றான். அவனுக்கு வாயினால் எதுவும் அருந்தக் கொடுக்கவில்லை. திரவ ஊடகத்தின் மூலம் உடலின் அனுசேபத்தேவையானது பூர்த்தி செய்யப் படுகின்றது. நாடித்துடிப்பு வீதம், குருதியமுக்கம், உடல் வெப்பநிலை என்பன அளக்கப்பட்டு அட்டவணைப் படுத்தப்படுகின்றது. மருத்துவரோ காயக்காரனுக்கும் தொலைத் தொடர்புக் கருவிக்கும் அருகிலேயே அமர்ந்திருக்கிறார். சென்றவர்கள் ஊரினுள் நுழையும் நேரம் நெருங்கி விட்டது. நேரம் மென்னிருள் கடந்து ஆழமான பகுதிக்குள் செல்கின்றது. திடீரென



சசத்தங்களுடன் தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. ஒருவரினது முகத்திலும் ஈயாடவில்லை. அவர்களுக்கு அடிவிழுந்து விட்டது. இவர்கள் கலைந்து சென்றிருப்பார்கள்.

சிலர் எதிர்பாரா நிகழ்வுகளே வழமையாகிவிட்ட வாழ்க்கைக்குப் பழகியவர்கள். ஆழ்ந்த யோசனையுடன்காத்திருக்கின்றனர். நள்ளிரவு தாண்டிவிட்டது. மீண்டும் தொடர்பு சாதனத்தில் தொடர்பெடுத்த உபதளபதி நிலமையை அறிவிக்கின்றார். தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தாங்கள் காயமோ உயிரிழப்போ இன்றித் தப்பிவிட்டதாகவும், எதிரி உசார் அடைந்துவிட்டதால் தாங்கள் மீண்டும் மீண்டும் முயற்சித்தும் முடியவில்லை எனவும், மறுநாள் இரவு மீண்டும் முயற்சிப்பதாகவும் கூறுகின்றார். தளபதி மருத்துவரிடம் என்ன சொல்வது எனக் கேட்கிறார்.


நிலைமை கையை மீறிவிட்டது. ஏற்கனவே தாமதமாகிவிட்டது. இன்னுமொரு நாள் அவனால் தாக்குப்பிடிக்க முடியாது. இதனை அவனுக்கு தெரிவிக்கவும் இயலாது. சாதாரண மயக்கமருந்தைக் கொடுத்து சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டியதுதான். அவ்வாறு வயிற்றறையை வெட்டித் திறந்தால் காற்றடித்த பலூனாக குடல்கள் வெளித் தள்ளிக் கொண்டு வரும். அவற்றை மீண்டும் உள்ளே செலுத்தி சிகிச்சையை முடிப்பது என்பது மிகவும் கடினமானது.எனினும் அதனைத்தான் செய்யமுடியும். அவ்வாறு செய்வதை சத்திர சிகிச்சைக்குரிய மருத்தியல் புத்தகங்கள் அனுமதிகின்றனவா எனத் தேடித் தேடிப் பார்க்கின்றான்.புத்தகங்களைப் பார்த்தும் காயத்துக்குள்ளானவனின் உடல் நிலையைப் பரிசோதிப்பது தளபதியிடம் நிலைமையைக் கேட்பது என மாறி மாறி செயற்பட்டுக் கொண்டிருந்தவன், அவரின் கேள்விக்கு நாங்கள் இருக்கிறதைக் கொண்டு தொடங்குவோம், அவர்களை வரச்சொல்லுங்கள் என்கிறான்.

ஒன்றும் செய்யாமல் விடுவதிலும் ஏதாவது செய்வது நல்லது என்பதால் சிகிச்சையை அரம்பிக்க வேகமாகச் செயற்பட்டனர். தேவையான மாற்றுக் குருதி தயார் செய்து உபகரனங்களை ஒழுங்கு செய்து, மின் ஒளியைத்தயார் செய்து காயக்காரனை மேசையில் கிடத்தி சிகிச்சையை ஆரம்பிக்கையில் எல்லாமே பிந்திவிட்டது என்பது புரிந்தது. விழுப்புண்ணடைந்தவன் தனது இறுதி மூச்சுக்காக அவஸ்த்தைப்படத் தொடங்கி விட்டான். மெல்ல மெல்ல ஆவிபிரிய அவன் துடிப்புகள் அடங்கிப்போகின்றன. வீரச்சாவு என்பது உறுதி செய்யப்படுகின்றது.

களமருத்துவ வாழ்வில் அவன் சந்தித்த தோல்வியின பட்டியல் நீள்வதாக உணர்கின்றான். தன்னுணர்வுகளை முகத்தில் வெளிக்காட்டாமல் தளபதிக்கு விடயத்தைச் சொல்கின்றான். மறுநாள் வீரமரண நிகழ்வு நடந்தது. இவர்கள் இருக்கும் பகுதியிலேயே அவ்வித்துடல் விதைக்கப்படுகின்றத. தப்பியிருப்பவனைத் தொடர்ந்து அங்கு வைத்துப் பராமரிக்க முடியாது. வன்னிக்கு அனுப்ப வேண்டும். அதற்கு இரண்டு நாள் நடந்து கடற்கரை செல்ல வேண்டும்.இன்றிரவு நித்திரை செய்தால்தான் நாளைக் காலை நடக்கத் தொடங்கலாம். இவனை ஏதோவொரு குற்றவுணர்வு கொல்கின்றது.

"இப்படியான இடங்களில் பயன்படுத்தக்கூடியவாறு, குளிர்சாதனப் பெட்டி தேவைப்படாத வகையில் மருந்து தயாரித்து இருக்கமாட்டார்களா?" மீண்டும் இரவு புத்தகங்களைப் புரட்டுகின்றான். அவன் தேடியதைக் கண்டுகொள்கின்றான். குறித்த மருந்து இருந்திருந்தால் இம்மரணத்தைத் தவர்த்திருக்கலாம். மேற்படி மருந்தைக் குறிப்பெடுத்தவன் துறைசார் பொறுப்பாளரிடம் அறிவித்து வெளியிலிருந்து இதனை எடுப்பிக்க வேண்டும், என எண்ணுகின்றான். அப்பொழுது 'டொக்டர்' எனக் கூப்பிட்டபடியே வரும் தளபதி சொல்கிறார். "களைத்துப்போயிருப்பீர்கள், இரண்டு நாள் தொடர்ந்து நடக்க வேணும், நித்திரை செய்யலாம்தானே!" என., இவனிடமிருந்த வெறுமை கலந்த சிரிப்பொன்று வெளிவர முயற்சிக்கின்றது.

## ஆதித்த நிலா



அசோக், அவனது பாணியில் வழமைபோலவே கஜனி வீட்டில் அந்த டபிள் செற்றிக்குள் சாய்ந்திருந்தான். கஜனி ஸ்கூலால் வந்ததும் வராததுமாய், "அக்கா வந்திருக்கிறா எண்டியள், இஞ்ச நிண்டா என்ன மாதிரி............?" அவளுக்குப் பதிலளிக்கத் தோன்றவில்லை. அவனுக்கு. எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். உணர்வுகளை படித்தறிந்துவிட முடியாத ஆழமவன். கஜனி மீண்டும் கேட்டாள்.

"உங்களத்தான் கேட்கிறன்."

"கேக்குது"

"கேட்டாப் பதில் சொல்லுறதுதானே."

"பாத்திட்டு வந்திட்டன்." செத்துப் போன பதில்.

எத்தனை வருடங்களுக்குப் பிறகு அவன் அக்கா தயா வந்திருக்கிறாள். அமைதி காக்க வந்த இந்தியப் படைகள் அமைதியைக் குலைத்த காலம்



அது. அசோக்குட்டி, அசோக்குட்டி எண்டு சுற்றி வந்த அண்ணனை.........ஒருபோது காணாமல் போன அண்ணனை............இடையிடையே தோன்றி மறையும் அண்ணனை அடிக்கடித் தேடிவருவதும், சுற்றி வளைப்பதும் அவனைக் கைதாக்க முடியாத ஏமாற்றத்தில் அவர்களை நையப்புடைப்பதுமான தொல்லை தாங்காமல் தவித்த போதுதான், தயாவின் நேசத்துக்குரியவன் அவளை ஜேர்மனுக்கே அழைத்துக் கொண்டான். தவித்துத்தவித்துப் போனவன் அசோக்தான். தயா புறப்பட்ட அன்று அசோக் அழுத அழுகையை என்றுமே மறக்க முடியாதாம். அவன் மச்சாள் குமுதா அடிக்கடி சொல்வது கஜனிக்கு நினைவில் வந்தது.

கஜனி, குமுதா, அசோக் மூவரும் ஒரு வகுப்பில் போட்டிப்போட்டுப் படித்துக் கொண்டிருந்தவர்கள்தான். இருப்பிழந்து போன தேசத்தில் இருப்பை நிலைநிறுத்த அசோக் அவன் அண்ணன் விதுரன் பாதையிலேயே சென்று விட குமுதாவும் இந்திய இராணுவ காவலரண்கள் தாண்டி ஸ்கூலுக்குத் தினமும் போய்வர போதும் போதுமென்றாகி நின்றுவிட படித்துக் கொண்டிருந்தவள் கஜனிதான்.

அக்காதானே லீவு அசோக்.....

பதிலற்ற பார்வை.

"நீங்களும் புரிஞ்சு கொள்ளேல்ல............"

"என்னத்த புரிஞ்சு கொளலேல்ல..... சொன்னாத்தானே புரியும்."

"இவ்வளவு காலமும் இருந்தது காணுமாம், குமுதாவைச் செய்து கூட்டிக்கொண்டு போகத்தானாம் வந்தவவாம்....."

"விரும்பாட்டி விளக்கிச் சொல்லுறதுதானே."

"எங்க விளங்குது........? புரிஞ்சு கொள்ளுறா இல்ல. அவாவால விளங்கிக்கொள்ள முடியேல புரிஞ்சு கொள்ள முடியாது தான் எங்கட தேசத்திற்கும் அவையளுக்கும் இடை வெளிகள் அதிகம் தான்."

"ஏன் உங்கட ஆக்களெல்லாம் செய்யிறவைதானே."

"செய்யலாம். ஆனா விரும்பேல."

"அதுதான் ஏனெண்டு கேக்குறன்..."

"என்னோட இருந்தவங்கள், என்னட்ட வளர்ந்தவங்கள், என்ன வளர்த்தவங்கள் இல்ல......அவங்கள நினைக்க....."

"யதார்த்தம் புரியாத ஆளாய் இருக்கிறியள் அசோக்"

"என்னால முடியேல. அவங்கட நினைவுகள், இலட்சியங்கள்.....இன்னும் நிறைவேறல. நிறைவேற்றல்ல."

"அப்ப நீங்கள் செய்யப் போறதில்லையே."

"காலம்தான் பதில் சொல்லோணும்.."

"இருந்தாப் பிறகு பாப்பம், இப்ப என்ன அவசரம்."

"விரும்பாட்டி விடுங்கோ. விளக்கிச் சொல்லுங்கோ. ஜேர்மனை எண்டாலும் ஒருக்காச் சுத்திப் பார்த்துக்கொண்டு வாங்கோவன். பாவம் மனிசி உங்களுக்காகத்தானே வந்தது."

அவர்களுக்கான நெறிமுறைகள், சாத்தியங்கள் தெரியாது அப்பாவியாய்ச் சொன்னாள் கஜனி. "யாதார்த்தம் புரியிற உங்களுக்கு நடப்புத் தெரியாமல் இருக்கு. சாத்தியம் இல்லாத கதை கதைக்கிறீங்கள்."

அவனுக்கு அப்பாவித்தனம் சினமாய் இருந்தது. மௌனமாய் இருந்தான். அவனின் மோனநிலையைஅவள்தான்மீண்டும்கலைத்தாள் "புரிஞ்சு கொள்ள முயற்சிக்கிறன். விதுரன் அண்ண வந்தவரே....?

"இல்ல."

"ஏன் வரேல"

"தெரியாது."

"அப்ப என்ன தெரியும் உங்களுக்கு?"

"கஜனி உங்களால விளங்கிக்கொள்ள முடியேல. யாழ்ப்பாணத்தில இருந்தா யாழ்ப்பாணத்தில இருக்கிற எல்லாரையும் தெரியுமே?"

"நீங்கள் மழுப்புறியள்.......பொய் சொல்லுறியள் அசோக்."

"ஏன் பொய் சொல்லவேணும்.....?"

"அதுதானே ஏன் பொய் சொல்ல வேணும்.....?" அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அவர்களை அவளால் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. எத்தனை வருடங்களுக்குப் பிறகு தயாக்கா வந்திருக்கிறாள். தன்ர அக்காவைப் பார்க்கக்கூட ஏன் அவனால் வரமுடியேல. எவ்வளவு பாசத்தோட வந்திருக்கிறா. அவனும் எவ்வளவு பாசம் வைத்திருந்தவன். "நீங்கள் கேட்டுப் பார்த்தனீங்களோ அசோக்.

"வரக்கூடிய மாதிரி இருந்தா வந்திருப்பார்."

"அப்ப வரமாட்டாரே"

"வரமாட்டார் போலத்தான் இருக்கு."

"ஏன் வரமாட்டார்..."

"தெரியலே......"

அவன்ர "தெரியலே' அவனுக்குத் தெரியும். தயாக்காவால இரண்டு கிழமைக்கு மேல காத்திருக்க முடியாது. அனுமதித்த நாட்களுக்கு மேல நிற்கமுடியாது. நின்றால் வேலை போய்விடும். புதிசா வேலை தேடுவது

கஷ்டம். வேலை மட்டும் இல்ல, விசா முடிஞ்சா பல சிக்கல்கள். அவர்கள் காத்திருந்துவிட்டு காணமலே போன போது கஜனிக்கும் வலித்தது.

“அசோக் மாமா நாங்கள் அடுத்த முறை லீவில வரேக்க விதுரன் மாமாவையும் கூட்டிக் கொண்டு வாங்கோ. கஜனி அன்ரி அசோக் மாமா கூட்டிக்கொண்டு வந்ததும் கோல் பண்ணுங்கோ”. அவர்களின் மழலை டொச்சு மொழியை மொழி பெயர்த்து இன்னதுதான் எண்டு தயாக்காதான் சொல்லிக் கொண்டிருந்தார். கொஞ்சம் கொஞ்சம் தமிழ்; இரு மொழித் தேர்ச்சி. மருமக்களின் கெஞ்சுதல், அவனைத் துன்புறுத்தியிருக்க வேணும். “கண்ணில ஏதோ விழுந்திட்டுது” என்றான். தயாக்கா பதறித் துடிக்க, சுதாகரித்துக் கொண்டான்.

அழுகையைக் கூட அழுகையெண்டு சொல்ல மாட்டான். என்ன ஆளோ தெரியாது. கஜனிக்கு அவன் மீது கோபமாய் இருந்தது.

அவர்கள் கையசைத்து விடைபெறும் போதும் விதுரன் மாமாவைக் கூட்டிவரும்படிதான் சொல்லிப் பிரிந்தார்கள். தூசி விழுந்ததாய் சுதாகரித்துக் கொண்டதோடு சரி. அவர்கள் மறையும் வரை உணர்ச்சியற்றுப் பார்த்துவிட்டு வந்தான். அவ்வளவு தான். கஜனிக்கு தெரியும், அவன் அதுக்குமேல் எதுவும் கதைக்க மாட்டான் என்று. வழமை போல அமைதியாக வருவான், போவான். மாமா என்று கெஞ்சிய கொஞ்சிய மருமக்களின் குறும்புத் தனங்களில், வேண்டுதலில் நினைவுகளில் இருந்து விடுபடுவது கடினமாய் இருந்திருக்க வேணும். அடிக்கடி அல்பத்தை எடுத்து அவர்களது போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

அன்றும் வழமை போல காலை வந்தான். கையில ‘தினகரன்’ பத்திரிகையில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு படம். வடிவா மட்டையில ஒட்டியிருந்ததான். “என்ன படம்.......” அவளின் கேள்விக்குப் பதிலில்லை. “அல்பத்துக்கப் போடுங்கோ.” அவ்வளவுதான் அவன் பதில்.

காலச்சக்கர சுழற்சியில் காலத்தின் கட்டளையில் கஜனியும் அவன் பாதையில். அடிப்படைப் பயிற்சிகள் முடிந்து அவள் ஏதேச்சையாக வீடு சென்று வரவேண்டிய தேவை ஏற்பட்டபோது அசோக்கைச் சந்தித்தாள். அவள் எதிர்பார்க்கவில்லை.அவனை சந்திப்பாள் என்று. காலநிலை பொய்த்த வேண்டாத வெள்ளம் பாதைகளை உடைத்திருந்ததால் அன்று வாகன ஓட்டம் இல்லை. அவளது பயணம் தடைப்பட்டிருந்தது. அவனது பயணமும் தடைப்பட்டிருக்க வேணும்.

அசோக் அப்பிடியே தான் இருந்தான். ‘அதே மோனநிலை’

“எங்க நிக்கிறியள் கஜனி..........”

“தெரியாது.”

“எப்பிடி இருக்கிறியள்...........?”

“தெரியாது.” அவளும் அவனது வழமையான மொழியிலேயே பதிலளித்ததாள். ஒருகணம் ஊடுருவிப் பார்த்தான்.

“வாறன்.’ அவன் போய்விட்டான். எங்கேயோ போய்விட்டு மீண்டும் வந்தான். அவளுக்குத் தெரியும் அவன் வருவான் எண்டு.

“எங்க நிக்கிறியள் கஜனி.....?” மீண்டும் அதே கேள்வி.


“தெரியாது.” அவளிடமும் மீண்டும் அதே பதில்.

“நீங்கள் எங்க நிக்கிறியள் அசோக்?”

“இந்தா இதிலதான், இருக்கிறன்.”

“நானும் இதிலதானே இருக்கிறன்.”

சொன்னவள் மௌனமாய் இருந்தாள். ஒரு போதுமே அவன் தன மௌனத்தை கலைக்க மாட்டான். என்பதை அவள் அறிவாள். அவந்தான் கலைத்தான்.



“எப்பிடி இருக்கிறியள் அசோக்?”

“இருக்கிறன், நீங்கள்...........?”

“அப்பிடியெண்டா சரி” அவன் அமைதியாய்ச் சொன்னான்.

“என்ன சொன்னியள் அசோக்?”

“என்ன சொன்னனான்”

“ஏதோ சொல்ல எடுத்தனீங்கள் நிறுத்திப் போட்டியள்.”

“ம்ம்......பேந்து சொல்லுறன்.

“பேந்தெண்டா............”

“நேரம் கிடைக்கேக்க.”

“அப்ப நான் இருக்கோணுமே.

“எங்க போப்போறியள்.”

“மேல, நான் சண்டையில நிக்கிறன்.”

“சண்டையில நிக்கிறவையள் எல்லாம் மேல போறதில்ல.”

“தெரியும்.”

“உங்களுக்கு முதலில நான் போயிடுவன் கஜனி.”

“அப்ப சரி, நாங்கள் மேலசந்திப்பம். மேல வந்ததும் தொந்தரவு தருவன்” அவள் விளையாட்டாய்த்தான் சொன்னாள்.

எண்ணி ஏழு மாதங்கள்தான் இருக்கும். அவன் செய்தி எட்டியபோது யதார்த்தம் உணர்ந்தாள். அவளிடமும் அதே மோன நிலை.

95ல வந்த தாயாக்கா, இற்றைய சமாதான உடன்படிக்கையில் ஒரு இடைவெளி - பிள்ளையோட வந்திருந்தா. அண்டைக்கு அசோக்கையெண்டாலும் பார்க்க முடிஞ்சுது. இந்தமுறை அவனும் இல்ல. அவன் செய்தி எட்டி மூன்று வருடங்கள் உருண்டு போட்டுது.வித்துடலைக்கூட பார்க்க முடியேல்ல. வந்திருந்தாக்கூட அவன்ர முகத்தைப் பார்த்திருக்க முடியாதுதான். சீல் பண்ணப்பட்டிருந்தது. கஜனியால கூட அவனுக்கு இறுதி மரியாதை செலுத்த முடியாது போனது. நிலைத்துப்போன வலி. இருப்பை நிலைநாட்ட தாங்கிக் கொள்ள வேண்டிய ரணங்கள். ஈடுகட்ட முடியாத ரணங்கள்.தயாக்கா என்னெண்டுதான் ஆறுதல் அடைந்தாளோ...... அழுது தீர்த்து அவன் நினைவாக வருடா வருடம் ஜேர்மனியிலேயே விளையாட்டுப் போட்டி நடாத்தி நிறைவு கண்டாளாம்.

அசோக் வரலாற்றில் பொறிக்கப்பட்டு விட்டான். அவன்ர கல்லறையை பார்க்க முடியும். அவன் விதையான இடத்தையேனும் பார்த்து ஆறுதல்பெறும் நம்பிக்கையுடனும், இந்த முறையேனும் விதுரன் பாத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் தான் தயாக்கா வந்திருந்தாள்.

ஆனா, விதுரன் அசோக்குக்கு முன்னமே அவன் பணியில, அழகு மாணிக்கமாய் அல்ல, அத்திவாரக் கல்லாய்; அசோக வீரச்சாவடைவதற்கு ஒரு கிழமைக்கு முன்னம்தான் விதுரன்ர படத்தைக்கொண்டே சுவரில மாட்டினானாம்.

“ஏன் தம்பி கொண்ணையிட படத்தைக் கொழுவுறாய்............”

“கொழுவக்கூடாதோ...........”

“கொண்ணை எங்கையெண்டு கேட்டா தெரியாது எண்டுறாய். படத்தை ஏன் கொழுவுறாய்........” தாயரின் கேள்வி நியாயம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனா, அவனால அப்பிடித்தான் பதில் சொல்ல முடியும்.

அண்டைக்கு எண்டைக்கும் இல்லாதபடி வினோதமாய், வேட்டிகட்டி கோயிலுக்குப் போனானாம். அடுத்த கிழமை அவன் செய்தி வந்தது. அவன் செய்தி யாவரும் அறிந்ததுதான். ஆனா, விதுரன் பற்றிய செய்தியை அவனும்.... அவன்.... அது ஒரு சிலருக்குள்ள உறங்குகிற உண்மை.

கஜனிக்கு அவர்களைப் புரிந்தது, அவளும் அவர்கள் பாதையில் எண்படியால. ‘வேர்கள் வெளியில தெரியாது. தெரிஞ்சா மரம் தரியாது, ஈடாட்டம் கண்டிடும்.’

“அக்கா அசோக் அண்ணேன்ர அக்காவும், பிள்ளையளும் வீட்ட வந்திட்டுப் போனவையள். உங்களக் கேட்டவையள்.அசோக் அண்ணையின்ர கல்லறைக்குப்போட்டு விதுரன் அண்ணைய இந்தமுறையாவது பாத்திட்டு போவமெண்டு வந்தவையாம். இந்த முறையும் விதுரன் அண்ணைய சந்திக்க முடியேலையாம். கவலையோட போகினம்.”

கஜனியின் சகோதரி அவளைப் பாக்க வந்திருந்தபோது, செய்தி சொல்லிக் கேட்டாள்.


“விதுரன் அண்ணையப்பற்றி நீங்கள் கேட்டனீங்களே கஜனியக்கா?”

“இல்ல”

“ஏன்”

“வரக்கூடிய மாதிரி இருந்திருந்தா வந்திருப்பார்;?”

# தூரிகை முகம்



தூரிகையில் வழிகின்ற
ஒரு துளிமையில்
ஒளிர்கிறது ஓவியம்

ஓவியங்களின் புனைவுகளில்
நகையரும்பும் காலங்கள்
ஒளிர்கின்றன.

கண்ணீரும் கம்பலையுமாக
அழுது வடிகின்றதாக

அச்சம் கொண்டு மிரள்வதாக
வேதனையில் உழல்வதாக

உணர்வைப் பிழிவதாக
உருக்குலைந்து கிடப்பதாக

மௌனத்தில் காதல் பேசுவதாக
கலவியில் கூடுவதாக

உயிர் கரைந்து ஒழுகுவதுபோல
மொழியில் வன்மம் தொனிப்பதுபோல

மந்திர உச்சாடனம் செய்வதாக
வாழ்வு அவலத்தில் கழிவதாக

காலமொன்றின் அகாலம்
உயிர் கருக்கொள்வதாக
உலகம் அழிவுற்ற நிலையில்
ஆன்மா அலைந்து திரிவதாக

அதிகாரிகள்
புலன் விசாரணைகளில்
தலையைப் பிய்த்துக் கொள்வதாக

என்னவோ
ஏதோ வெனப் புரியாமல்
நெஞ்சை உருக்குபவையாக

இன்னும் கணக்கிட வியலா
சங்கேத மொழிகள் போலெல்லாம்
ஒளிர்கின்றன ஓவியங்கள்.

தமிழ்மாறன்
1.9.2001


அருளர் கள்ளுக்கு போய் வாறார் எண்டால் அண்டைக்கு வழிச்சலில நல்ல மீன் பட்டிருக்கும். அதில்லை என்றால் அண்டைக்கு நேவியடிச்சு வழிச்சல் தொழிலாளர்கள், ஆரும் வலையை வெட்டிப் போட்டு வந்திருப்பாங்கள். இவர் தேடிப்போய் வலைகளை கொண்டு வந்திருப்பார். அதுவுமில்லையென்றால் கடலில நல்ல சண்டை நடந்திருக்க வேணும், இயக்கம் நல்லா அடி குடுத்திருக்க வேணும்.

கடலைப் பற்றியோ? அல்லது கடல் தொழிலைப் பற்றியோ? ஏதேனும் கேட்க வேணுமெண்டால் அந்தாளைக் கேட்டா அச்சொட்டா பதில் சொல்லும்.

காலமை விடியிற மூண்டு மூண்டரைக்கு எழும்பி கடற்கரைக்குப் போய், மண்டானுக்கு நிண்டு சூடவலை , அறக்கொட்டியான் போகிற குல்லாக்களை இறக்கிக்குடுத்து வழிச்சல் வள்ளங்கள் வந்தால், மீன் வெட்டிக்குடுத்து கருவாடு போட்டு.................

இப்ப அதுதான் அவரின்ர தொழில், எப்பிடியும் நூறு ரூபா, உழைச்சுப் போடுவார். சிலநாள் கறி மீனோட காலம் போகும். அண்டைக்காரோடையும் கதைக்க மாட்டார்.

ஏனப்பா இண்டைக்கு ஒண்டும் வாய்க்கேல்ல ஏதேனும் பாரன் எண்டு மனிசியட்டை சரணடைஞ்சு போடுவார். அண்டைக்கு மனிசி என்ன பேசினாலும் கேட்பார். 'ஏனப்பா உந்தக் குடிக்கிற காசுக்கு ஏதேனும் நல்ல சாப்பாட்டை சாப்பிடலாந்தானே' என்று மனிசி கேட்டால், 'எனக்கு கள்ளுத்தான் சத்தான சாப்பாடு; எப்பாலும் குடிச்சிட்டுவந்து உன்னட்டை சாப்பாடு கேட்டிருக்கிறேனா? கதையை விடு' என்பார். குடிக்காத நாளில




பசித்தெண்டு கொஞ்சம் கூட சாப்பாடு கேட்பார். மனிசி குடுக்காது. ஒரு பார்வை பாப்பா. பசியெண்டா என்னெண்டு இப்ப விளங்குதெல்லே.

அவ இளகிக் கதைப்பா. அவர் கணக்கெடுக்கார். சிலவேளை வெறியோட வந்தால் பாவம் எண்டு பாப்பா. குடிச்சுப் போட்டு வந்தால் "கொஞ்சம் சாப்பிடுங்கோ சாப்பிடாம கிடந்து சாகப் போகிறீங்களே?" என்று சொன்னால் "நான் பசிக்குதெண்டுகெஞ்சிக் கேட்டும் நீ அண்டைக்கு தரேல்ல, நீ சொல்லி நான் சாப்பிடோணுமோ? நான்தான் புருஷன் எண்ட ஞாபகம் இருந்தாச்சரி." என்பார். இப்பிடியே நாள் போகும் ரெண்டு பேருக்கும்.

அண்டைக்கு குட்டி சம்மாட்டியின்ர வழிச்சல் வள்ளம் தொழிலுக்கு வெளிக்கிட்டுது. தொழிலுக்குப் போக தொழிலாளி ஒருத்தன் வரேல்ல, சம்மாட்டி அவனத் தேடிக்கொண்டு திரிய அருளரும் பார்த்தார். 'கையில காசுமில்ல தற்சேலா மீன் பட்டுதெண்டா ஐநூறு ஆயிரம் எண்டு வரும்'

"நான் கடலுக்கு வரவோ" என்று கேட்டு தொழிலுக்கு ஏறிவிட்டார் இயக்கதின்ர போட்டுக்கள் கடலில நிக்கிறது அவருக்கு சாடையான துணிவு.

வழிச்சல் தொழிலுக்குப் வள்ளங்கள் போகுதெண்டா, கரும்புலி போட்டு போகுதெண்டுதான் கடற்கரையில சொல்லுவாங்கள். நேவி வந்திட்டா பாஞ்சு நீந்தினாலும், போகஸ் அடிச்சுப்பார்த்து சுடுவாங்கள். தப்பவே ஏலாது. தப்பினாலும் நீர் பாடு வாடைநீராய் ஓடினால் எப்பிடித்தான் நீந்தினாலும் புல்மோட்டை திருகோணமலை எண்டுதான் கரைசேரலாம். அப்பவும் சாவுதான், சோளக நீர் உரமெண்டால். காங்கேசன் துறை பருத்தித்துறை பக்கம் தான். உலாந்த நீர்(உயர இழுத்த நீர் ) நிண்டு தெண்டாலும் உயிரு இல்லை.

ஆரும் வந்து காப்பாத்தினாச்சரி. ஆர்வருவாங்கள். உந்த நேவியுக்கை. காலம் நல்ல தெண்டா கடற்புலிப் போட்டுத்தான் வரும்.

ஓயாத அலை ஒண்டுக்குப் பிறகு இந்த ஊரில குடியேறி இந்தக் கடலில தொழில் செய்ய வெளிக்கிட்டபிறகு கடலில காணாமப் போனவரை காத்திருந்த நாளுகள் எத்தனை? கை கால் இல்லாமகரையில ஒதுங்கின பிரேதங்கள் எத்தின? எத்தினை உயிர் போட்டுது?

எவ்வளவை அள்ளிக் கொட்டின கடல். கடல் அடிச்சாலும் கரைய நிண்டு வீச்சு வலை வீசினா எத்தனை மடவை மீன் அறுக்கும். எவ்வளவு இறாலப்பிடிச்சு கொட்டின இடம். தைப்பூசத்துக்கு பனி விழுந்து சீர் போட்டுதெண்டால் அலைச்சத்தமே கேக்காது. காலமை தொடங்கி இரவுவரை ஒரே இஞ்சின் சத்தம்தான். இஞ்சின் வேகம் காணாதெண்டு இருபத்தைந்து, முப்பது, கோசிலயும் (HP) ரெண்டு இஞ்சின் பூட்டி தொழில் போகும்.

தை மாசி மாதமெண்டால "உந்த றாலை ஆர் சாப்பிடுறது. இறைச்சிவேண்டு" சாவாளையும், காரலும், பன்னாவும் கோளாக்கட்டா சின்னட்டியும், கருவாடு வெட்டிப் போட, நேரம் இல்லாமல் கடல்ல கொட்டுற மீன்.

முந்தி வலை தெரிக்க வாற பெண்டுகள், ஒளிச்சுக் கொண்டு போகிற றால், ரெண்டு நாள் சீவியம் போக்காட்டும். முற்பணமா காசு தந்து றால் எடுக்க எத்தின வியாபாரிகள். காசைமதிக்காத கணக்குப்பாக்காத வாழ்க்கை. எது தரம் எண்டு பாக்காம எது விலையெண்டு பாக்கிற சனம். றாலில உழைச்சு நகை நட்டத் தேடி கடலடி வர வித்து, உழைக்கிறதும் செலவழிக்கிறதும் சேத்து வைக்கிற நினைப்பில்லாத ஊர்,

கடைசிக் காலத்துக்கு........... கடைசிக் காலம் வரைக்கும் கடலிருக்கும் தானே. வலை படுக்கிறதுதான் வேலை. காசு கையில.

ஆர் நினைச்சது. இப்ப காஞ்ச கருவாடு மாதிரி உடைஞ்ச ஐஸ்வாடியும், கடலரிச்சறோட்டும் கறல் கட்டின கம்பி வலையும் செல்துண்டும் வெட்டின கிடங்குமாய் எருக்கலை பரவிக்கிடக்குது. கடற்கரை றோட்டெல்லாம் காடுபத்தி தொழிலுக்கு வள்ளமில்லாமல் குளத்தில தொழில் செய்யிற குல்லாக்களோட வலிச்சு மாஞ்சு போய்.........நேவியட்ட அடிவாங்கிச் செத்து................

கைம் பெண்கள் ஊரில கனத்து. காஞ்சு போய்க் கிடக்குது ஊர். இப்ப கடல் தொழிலும் மறந்து போய், கடலுக்கு போற வள்ளங்களை நம்பி, கரைய காவல் கிடந்து வலை தெரிச்சு சீவியம் போக்காட்டுற காலம்.

அண்டைக்கு குட்டிச் சம்மாட்டிக்கு நல்ல புழுகம், ஐநூறு கிலோவுக்கும் மேல மீன் பட்டுப்போச்சு. அருளர் வழிச்சலுக்கு ஏறிப்போனா தொழில்தான். அந்தாளோட ஆர் மீன் பிடிக்கிறது. குட்டிச்சம்மாட்டி சொல்ல சொல்ல அவருக்கு நல்ல ஏத்தம். 'ஆனா இண்டைக்கும் தொழிலுக்கு போகச் சொல்லி குட்டி சம்மாட்டி சொல்லிட்டா?' அவருக்கு இனி தொழிலுக்குப் போக விருப்பமில்லை. பயந்த மாதிரியே குட்டிச் சம்மாட்டி கேட்டுட்டான்

"அருளண்ண, பட்டதோட பட்டதா இன்னும் ரெண்டு மூண்டு கடல் ஓடினா. உழைச்சுப் போடுவியள்"

"எதுக்கும் வீட்ட போனத்தான் சொல்லாம். வழமையாப்போற தொழிலாளியை விட்டிட்டு என்னை தொழிலுக்குப் அனுப்புறதுசரியில்லை" எண்டு சொல்லிப் போட்டார்.

குட்டிச்சம்மாட்டிக்கு முகம் சரியில்லை. அவருக்குத் தெரியும் வீட்டை இப்ப ஆரும்போய் மங்களாவட்டை சொல்லிப் போடுவாங்கள் எண்டு. வீட்ட போக ஒரு பிரளயம் இருக்கும். மங்களாவை சமாளிக்க இப்பவே திட்டம் போட்டுட்டார்.

குட்டிச் சம்மாட்டியிட்டை பங்குக்காசிலை ஆயிரம் ரூபாவும் வேண்டிக் கொண்டு மங்களா மாட்டிறைச்சி தின்ன மாட்டாள் எண்டு ரெண்டு கிலோ ஆட்டிறைச்சியும் சமான்களும் வேண்டி, கோப்பிறேசனையும் மறக்காமல், வீட்டபோக மங்களா கதைக்கேல்ல. சமாதானப்படுத்திப்பார்த்தார். சரியே வரேல்லை. "உயிரைக்குடுத்து உந்த வழிச்சல் தொழில் செய்யத் தேவையில்லை, நாங்கள் பட்டினி கிடந்தா கிடக்கிறம்."

"நானோ பிள்ளையளோ அதைக் கொண்டாங்கோ, இதைக் கொண்டாங்கோ, எண்டு கேட்டதே? நாலுநாள் நல்லாச் சாப்பிடோணும் எண்டதுக்காக காலம் பூராவும் கண்ணீரோட கிடக்கோணுமே. சத்தியம் பண்ணுங்கோ இனிப் போகேனெண்டு."



"அதடி கடலில இயக்கத்திண்ர போட்டுகள் இறங்கி நிண்டது. நேவிவரான், பயமில்லை எண்டுதான் ..............." எப்பிடிச் சமாளிச்சும் சரிவரேல்ல. அருளர் கொண்டுவந்த சமான்களெல்லாம் தூக்கி யெறிஞ்சு சத்தம் போட்டு ஊரைக் கூட்டிப் போட்டுது மங்களா. தொழிலுக்கு கூட்டிக்கொண்டு போகவந்த குட்டிச் சம்மாட்டிக்கும் நல்ல பேச்சு. அண்டையோட அருளர் வழிச்சல் தொழிலுக்கு முழுக்குப் போட்டுட்டார். பழையபடி வேதாளம் மரமேறின கதைதான். மண்டான் மீன்வெட்டு - அரைப்பட்டினி, கால்ப்பட்டினி -

மங்களாவுக்கு அருளர் பயம்தான். நல்லா கதைக்கத் தெரிஞ்ச ஆள். "நாட்டின்ர பொருளாதாரம் வீழ்ச்சியடைஞ்சு போட்டுதெண்டு இவளுக்கு என்னண்டா விளங்கப்படுத்துறது." அவர் சொல்லேக்க சிரிப்புத்தான் வரும்.

அவர் படிச்சதெண்டால் எட்டாம் வகுப்புத்தான், எண்டாலும் உலகப்புதினமெல்லாம் அந்தாளின்ர கையுக்குள்ள. ஆரும் படிக்கிற பெடியளோ கூட்டாயிருந்து அவரட்டை கதை கேப்பாங்கள். வால்வு ரேடியோவில இருந்து கம்பியூட்டர் எண்டு போய், நெற்வேக்குக்கு தமிழ் சொல்லி மூலகம் எண்டு தொடங்கி, ஐதரசன், ஒட்சிசன், துகள்கள், இலத்திரன்கள், மின்காந்தம், எண்டுஅணு ஆயுதம் வரைக்கும் போய் குரோசோம்கள், டி என் ஏ ஏணிப்படி இதுதான் என்று கீறிக்காட்டி .......... நம்ப மாட்டாமலும் பெடியள் இருப்பாங்கள். இப்பிடியிருந்து அருளர் கதைக்கிறது மங்களாவுக்கு கொஞ்சமும் பிடிக்கிறதேல்லை.

'உப்பிடியே கதைச்சு காலம் போக்காட்டுற நேரம் நாலு தென்னைய நட்டிருந்தாலும், இந்த நாலு வருசத்தில காச்சிருக்கும், ஆளுக்காள் தென்னை நட தேங்காய் விலை குறையுமெல்லே. இப்பிடியே எல்லாத்திலையும் எல்லாரும் கஸ்டப்பட எல்லாச்சாமான்களுக்கும் விலை குறையபட்டினி ஏன் வருகுது." ஒரு லெக்சரே வைப்பா. ஞாயமாய்த்தான் படும் எல்லாருக்கும். இப்பதான் பொருளாதாரப் பிரச்சினையின்ர அரைவாசிக்கு வந்திருக்கிறாய். சரி நீ சொல்லுகிற மாதிரியும் செய்வம்" என்பார். அண்டைக்கு காசிருந்தாலும் அருளர் பட்டினிதான்.

அருளர் ஒண்டும் கஸ்டப்படாத ஆளில்லை. வாழ்க்கையில் நல்லா அடிபட்ட ஆள்தான். சின்ன வயசிலயிருந்தே வீச்சுவலையடிச்சு உழைச்சு சகோதரங்களை கரைசேர்த்து காதலல தோத்து வயசு போய்க் கலியாணங்கட்டி இப்ப மூத்தவளுக்கு பதினாலு வயசு; போட் எஞ்சின் வழிச்செல் வலை.அறக்கொட்டியான், சூடவலை, நகை நட்டெண்டு மனிசி பிள்ளையளை நல்லாத்தான் வச்சிருந்தவர். தொண்ணூறோடத்தான் எல்லாம் துலைஞ்சு போனது, அகதி வாழ்க்கையைச் சமாளிச்சு முல்லைத்தீவை விட்டு வரேக்க தாட்டு வைச்சிட்டு வந்த வலையளும், போட்டும் அந்தத் தென்னந்தோட்டமும் இருந்தாக்கானும் எண்டுநினைச்சு, முல்லைத்தீவு பெடியளிட்ட பிடிபட ஊருக்கு வந்து பாத்தா, ஆமி அடுக்கி வச்ச தென்னங்குத்தியும் அதுக்குக் கீழ உடைஞ்சு போய் கிடந்த அவரின்ர கடற்கரைக் காணியெல்லாம் அடம்பனும் எருக்கலையுமாம். மனம் விட்டேபோச்சு. பழையபடி மிச்சமாய் கிடந்த, கிணத்தை இறைச்சு சுத்திவர

வேலியடைச்சு பத்துதென்னையும் மரவள்ளியும் வச்சு தொட்டு தொட்டுப்பார்த்து தண்ணியூத்துவார் மங்களா. சொன்னது போல ஒரு நாலு வருசக்கஸ்டம் தேங்காய் மலியும்தான். மீன்விலையும் குறையும் தான், அரிசியும் தேங்கும்தான், எல்லாரும் வடிவா சாப்பிடலாந்தான், ஆனால் எல்லாரும் சேர்ந்து கஸ்டப்பட வேணுமெல்லோ?

இந்த முறை காலத்துக்கு முன்னமே கடல் அடிக்கத் தொடங்கினதால, இடைக்கிடை கடல் சீராய்ப் போகுது, கல்லுவலை படுக்கிறதாலையும் இடைக்கிடை வழிச்சல் தொழில் போறதாலையும் பங்குக்கரவலை வளைக்கிறதாலையும் மாரிச்சீவியம் பரவாயில்லாமல் போகுது. கடலில இயக்கம் போட்டு இறக்கினா வழிச்சல் தொழில் பயமில்லாமல் ஓடும், அருளர் கரவலையும் வழிச்சலும் மாறி மாறிப் பாக்கிறதால அவரின்ர பாடும் பரவாயில்லை.

காலம, விடிய மங்களாவீட்டை அருளர் தேத்தண்ணி கேக்கப்போக, தேத்தண்ணிக்கு சீனி இல்லை எண்டு தொடங்கி இந்த முறை நத்தார் கொண்டாடுறதில்லையோ? என்று கேட்டு குடிக்கக் கூடாது எண்டு சத்தியம் வாங்கி இந்த முறை பிள்ளையளுக்கு உடப்பெடுக்கோணும், இந்த முறை நத்தார் பெரிசா கொண்டாவேணும் எண்டு முடிச்சிட்டா. எத்தின வருசம் நத்தார் பட்டினியோட போட்டுது. மற்ற நாளில் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை, நத்தாருக்காவது நல்ல கறி சோறு சமைக்கோணும்மப்பா, இந்த முறை ராப்பூசை கள்ளப்பாடு அந்தோனியார் கோவிலிலயாம்.

அருளர் வருசப்பிறப்பை பெரிசா கொண்டாடுறதில்லை. நத்தார்தான் கொண்டாட்டம். கடைசியா தொண்ணூறில நத்தார் கொண்டாடினதை நினைச்சுப் பார்த்தார்; எத்தின கிலோ கேக்கு இரவு பாலப்பம் சுட்டு, ராப்பூசைக்கு மழையில நனைஞ்சு............ அந்த வருசம் நத்தாருக்கு கடல் சீ போட்டுது. றாலும் பட்டது. தொழிலாளிகள் தொழிலுக்கு வெளிக்கிட பிளக் சுங்கானுக்கை கடதாசி அடைஞ்சு எஞ்சின் ஸ்ராட் வராமச் செய்து. தொழிலை நிப்பாட்டி, எத்தின பி. எஸ் ஓ.ஏ (B.S.O.A) எத்தின பியர் போத்தல், கொக்கோலா எண்டு தொழிலாளியளை தவழவச்சது. ஆட்டுக்காரனுக்கு ஆடு, மாட்டுக்காரனுக்கு மாடு. கோழியும் பிரிம்பா. இரவு வீடியோப்படம்,

'இந்த முறை கடவுள் மனம் வச்சாரண்டா நத்தார் கொண்டாடுறது தான்' ரெண்டு பேரும் சேர்ந்து திட்டம் தீட்டியாச்சு.

'நாலு சாவல் நிக்குதல்லே ரெண்டை வித்துவிடு ரெண்டு நத்தாருக்கு கறிக்கு. மூண்டு கிலோ அரிசி வேண்டோணும். பக்கத்தில இருக்கிற பிள்ளையளுக்கு சாப்பாடு கொடுக்கோணுமாம்.''

'பெரிய திட்டம் போடாதயுங்கோ. இவ்வளவுக்கும் காசுக்கெங்க போறது. முதல் நீங்கள் குடிக்க மாட்டன் எண்டு சத்தியம் பண்ணுங்கோ.'

'நத்தார் மட்டும் குடிக்க மாட்டன்.' சத்தியம் பண்ணியாச்சு. கதைச்சுக் கொண்டிருக்க குஞ்சுக்கிளி சம்மாட்டியின்ர பெடியன் ஒருத்தன் ஓடிவந்தான். அருளண்ண கரவலைச்சலவாய்மடி கட்டையில விழுந்து கிழிஞ்சு போச்சுது. சம்மாட்டியார் உங்களை ஒருக்கா வந்திட்டுப் போகட்டாம்''

முந்தி அருளருக்கு தெரிஞ்சதெல்லாம் கோரிக்கு நேர ஆறு பாகத்தில ஒரு கப்பல் தட்டு அதுதான். ஒரு கொழுவல் அதிலதான் வழிச்சல் வலையள் விழுந்து கிழிஞ்சு போறது. அது சோழர் காலத்தில கொள்ளைக்காரர் மாத்தளினில குதிரையளகொள்ளையடிச்சுக்கொண்டு போகேக்க சண்டை நடந்து தாண்டு போன கப்பல் எண்டு பொன்னியின் செல்வன் புத்தகத்தில படிச்ச ஞாபகம். அதை விட களத்தில ஒரு கட்டை.

இப்ப ஆமியின்ர டோராக்களும் கப்பல்களும். சனம் விட்டுட்டுப் போய் ஆமிகடல்ல தள்ளிவிட்ட சனத்தின்ர போட்டுகளும் கடல் முழுக்க கட்டைதான். இப்ப அந்தக் கட்டையளை வச்சுதான் நத்தாருக்கு காசு வரப் போகிறது. 'மாதா தருவாவடி மங்களா' மனிசியைப் பார்த்து கண் காட்டினார் அருளர்.

அருளர் வலையடிக்கு போயிட்டார். இண்டைக்கு இருநூறு முன்னூறைக் கொண்டு வருவார் எண்டு பக்கத்து வீட்டில அரிசியும் கடன் வாங்கிப் போட்டு கருவாடும் எடுத்து முருங்கையிலை சுண்டிக் கொண்டிருக்க, அருளற்ற சத்தம் கேட்டுப்பதறிப் போனா.

சரி எல்லாம் சரி குடிக்கிறேல்ல எண்ட மனிசன், இப்ப குடிச்சுப்போட்டு வருகுது. காசெல்லாம் முடிஞ்சுதோ தெரியாது. கடவுளே! நல்ல புழுகத்தில வாறவர் போறவருக்கெல்லாம் கதை சொல்லிக் கொண்டு வாறார். வரட்டும் இண்டைக்கு; வாசலுக்கு அருளர் வரேக்கயே

''யேய் மங்களா பெடியள் டோரா ஒண்டை அடிச்சுப் போட்டாங்களாம்.'' நல்லா பேசோணும் எண்டு நினைச்சுக் கொண்டிருந்த மங்களாவுக்கு இப்ப எல்லாமே விளங்கிட்டுது. எண்டாலும் அவர் எவ்வளவு மிச்சம் வச்சிருக்கிறார் எண்டு பொக்கற்றை தேடிப்பார்த்து இருநூறு ரூபா அகப்பட்டிச்சு. எவ்வளவு எடுத்தவர் என்று கணக்குப்பார்க்க, சம்மாட்டி எவ்வளவப்பா தந்தவர், எண்டு கனதரம் திருப்பித் திருப்பிக் கேட்டாச்சு, அவருக்கு அதைப்பற்றி கவலையேஇல்லை. டோரா அடிச்சதும் தாட்டதும் தான் கதை. ஒரே புழுகம்.

பழையபடி குடிவிடுறதுக்கு அருளர் சத்தியம் பண்ணியாச்சு. பிள்ளையளுக்கும் உடுப்புக்கள் தேடியாச்சு. ரெண்டு கோழியும் வித்து அரிசி மூண்டு கிலோ, அப்பத்துக்கும் மாவிடிச்சு, இறைச்சிக்கும் பிரச்சினையில்லை. கோழி ரெண்டும் நிக்குது. நூறு கிராம் நூறு கிராமா சில்லறைச்சாமானும் வேண்டி தாள் இடிச்சாச்சு. இரவு பாலன் பிறப்பு. பகல் சோத்துக்கு என்ன செய்யிற தெண்டு மங்களா யோசிச்சுக் கொண்டிருக்க, அருளர் பத்து நண்ட கொண்டு வந்தார். ஐடியா வந்திட்டுது. இரவுக்கு அப்பம் சுடுறதுதானே, அப்ப மத்தியானம் கூழ், இருந்துபனியவரை கொஞ்சம் புடுங்கியாச்சுது, அப்பதான் கிழங்கு வச்ச மரவள்ளி ஒண்டை இழுத்தாச்சு, பழைய காரல் கருவாடு, கொஞ்சம் முசுட்டை இலை, கொஞ்ச முருங்கை இலை, புளிக்கொரு மாங்காய், ஒடியல் மா, கொஞ்சமெண்டு கூப்பன் மா, அஞ்சாறு கொச்சிக்காய். காசில்லாத கூழ் ரெடி.

''கையை நீட்டடி வலக்கையை நீட்டடியாத்தை'' அருளர் மனிசியின்ரை கையைப்பிடிச்சுக் குலுக்க, அவ ஆச்சரியமாய்ப் பார்க்க,'' யேய் உலகமே வந்து எங்களுக்கு பொருளாதாரத்தடை போட்டாலும், கடைசிவரைக்கும் ஒண்ணும் செய்யேலாது.''

''பொருளாதாரத்தடை எண்டால் என்னப்பா?' அருளர் ஓடியே விட்டார் கூழோடை.

இரவு நத்தார். ராப்பூசை கள்ளப்.பாடு அந்தோனியார் கோவிலில, ஆரவாரத்தோட துவங்கிட்டுது. தொண்ணுறுக்குப் பிறகு, அந்தோனியார் கோவிலில நடக்கிற ராப்பூசை. சனம் குறைவெண்டாலும் சந்தோசம் கூட பாலன் பிறக்க முந்தியே அரியதுரை ''பப்பா'' ஆடத்துடங்கிட்டான். பக்கத்து கடற்புலிப் பெடியளும், பூசைக்கு வந்து வேட்டுத்தீத்து றேசர் ரவுண்சும் அடிச்சு சிறப்புத்தான்! பாலன் பிறந்திட்டார் அருளர் வீட்டிலயும்.



நத்தார் நித்திரை எண்டாலும் அருளர் வெள்ளனவே அருண்டுண்டார். "மங்களா என்னடி பெடியள் இன்னமும் நத்தார் வெடி கொழுத்துறாங்களோ?

"இல்லையப்பா கடலிலதான் சத்தம்,ஆரும் வழிச்சலுக்குப் போனவங்களே"

"இல்லை.........ரெண்டு மூண்டு வள்ளம் தான் போனது, அவங்கள் இவ்வளவு நேரமும் கடலில கிடக்கிறாங்களோ!"

"அப்ப சண்டை நடக்குதோ"

"விடியத் தெரியும்தானே. தேத்தண்ணி வையன் நானொருக்கா கடற்கரைக்கு போட்டுவாறன்."அண்டைக்கு சீனி இருந்தது. அவ எழும்பி தேத்தண்ணி போட, குடிச்சிட்டு கடற்கரைக்கு வெளிக்கிட்டுட்டார்.

கிபிர் சத்தம் கேட்கவே மங்களா சொல்லிட்டுது. 'அவன் எங்களைத் தாண்டி போட்டான்' எண்டு. கடலுக்க ஏதோ நடக்குது போல. அவன் நேர கடலுக்க போறான். மங்களா அதையெல்லாம் கணக்கெடுக்காம நத்தார் மத்தியானச் சாப்பாடு செய்யத்துவங்கிட்டா. மூத்தவளை கோழியை உரிக்கச் சொல்லிட்டா, அவள்தான் உரிப்பாள், பிள்ளையளுக்கு காலமைச் சாப்பாடு குடுத்தாச்சு, அதுகள் நத்தார் கொண்டாட சினேகிதப் பிள்ளையள் வீட்ட போட்டுதுகள். கறியும் மணக்க மணக்க இறக்கியாச்சு.ரோட்டால போறவையளும் 'என்ன மங்களாக்கா நத்தார் விசேடமோ?' சந்தோசமாயிருந்தது அவவுக்கு.

"கோழியெண்டா கிழவர் மூண்டுதரம் சாப்பிடுவார்" சந்தோசம் வந்தா மங்களாக்கா அருளரை கிழவர் எண்டுதான் சொல்லுவா. 'இண்டைக்கு கேக்க சாப்பாடு போட்டுக் குடுக்கோணும். பக்கத்து வீட்டுப் பிள்ளையளையும் கூட்டிவந்து இவரோடவச்சு சாப்பாடு குடுக்கோணும்.' ரெண்டு மணியாச்சு, படலேல நிண்டு பார் பார் எண்டு பார்த்தும் அந்தாள் இன்னும் வரேல்ல. எங்க போட்டுது உந்த மனுசன்?

வேலி ஒழுங்கையால, கள்ளுப்பையோட வந்த மாசிலாமணியண்ண, "என்னடி மங்களா மனுசனைப் பாத்துக்கொண்டு நிக்கிறியே? புதினம் தெரியுமே கடலில பெடியள் டோராவை அடிச்சுத் தாட்டுப் போட்டாங்களாம். இழப்பு ஒண்டுமே இல்லையாம், காயம் மட்டும்தானாம் கரைக்குள்ள வாட்டர் ஜெட் எல்லாம் கொணர்ந்து கட்டிப் போட்டு நிக்கிறாங்கள், அவங்கள் தான் டோரா தாட்டத்தை சொன்னது"

"அப்ப அவர் அங்கயே நிக்கிறார்"

"ஓமடி நந்த சேனமல்லி வந்ததேனோ துள்ளி எண்டு, பேரல்ல அடிச்சு, பாட்டும் ஆட்டமும் நடக்குது, கொண்டாட்டம் தான்."

"அப்ப அந்தாள் அங்க நத்தார் கொண்டாடுது. அவருக்கு இண்டைக்கு ரெண்டு நத்தார், என்னை இண்டைக்கு மறந்து போடும், என்னோட நத்தாரைக் கொண்டாட ஆக்களில்லை, உந்தச் சின்னப் பெடியளை சாப்பிடக் கூப்பிடுவம், அதுகளோடையாவது சந்தோசமாய்க் கொண்டாடுவம்" எண்டு மனதுக்க நினைச்சுக் கொண்டு திரும்ப,

"மங்களாக்கா"

அவவுக்குத் தெரிஞ்ச கடற்புலிப் பெட்டை. கடல்ல பொம்பிளையளும் நீந்தலாமோ? எண்டு ஆச்சரியப்படேக்க சந்திச் சினேகிதம். 'எங்கையடி காத்திகா வந்தனி"

"அது கடலில இரவு சண்டை. இப்ப கரைக்குள்ள வண்டியை கொண்டு வந்து கட்டிப்போட்டு நிக்கிறம், என்ன நத்தார் விசேசமில்லையோ? "

"என்னவிட அவருக்குத்தான் விசேசம். அதுசரி நீங்கள் கடல்ல டோரா தாட்டுப் போட்டீங்களாம். உண்மையே" சந்தோசத்தோட கேட்டா.

"அது நாங்கள் அடிக்கேல்ல. அண்ணையாக்கள்தான் அடிச்சவங்கள், எங்கட போட் சப்போட்தான். அதிருக்கட்டும். எங்க அருளண்ண? கோப்பிரேசனுக்கோ?"

"அவர் வரார், அவருக்கு இண்டைக்கு பாலன்பிறப்பும் நத்தாரும். நீங்கள் வாங்கோ உள்ளுக்குள்ள சாப்பிட்டுட்டு போங்கோ"

"கார்த்திகா வோட வந்த பிள்ளையளையும் வீட்டுக்குள்ள கூட்டிக் கொண்டுபோனா, அவவுக்கும் நத்தார் கொண்டாட ஆக்கள் வந்திட்டுது எண்ட சந்தோசம்.

"இருந்து சாப்பிடலேதக்கா நாங்கள் போகோணும். சாப்பாட்டைக் கட்டித்தாங்கோ,"

சாப்பாடு கட்ட மங்களாக்கா குசினிக்க போய்ட்டா, அவவுக்கு இயக்கப் பிள்ளையள் தன்ர வீட்டில இருந்து சாப்பிடாம போகப் போகுதுகள் எண்ட கவலை.

"சாப்பாட்டை இஞ்சயே வச்சு சாப்பிடுங்கோவன், கட்டித்தர ஒண்டுமில்ல"

"ஒரு சொப்பிங் பாக்கில கட்டக்கா" மற்றப் பிள்ளையளுக்கு பலகாரமும் தேத்தணியும் குடுத்துப் போட்டு, காத்திகாவை சொப்பிங் பாக்கை பிடிக்கச் சொல்லிட்டு பானைச் சோறு முழுவதையும் சொப்பிங் பாக்கில கொட்டி, போதாம இன்னொரு சொப்பிங் பாக்கிலயும் போட்டு மற்றச் சொப்பிங் பாக்கில கறி முழுவதையும் ஊத்திக் கட்டத்தான் கார்த்திகா கேட்டுது,


"என்ன மங்களாக்கா ஒண்டும் மிச்சமில்லாம கறியெல்லாம் ஊத்திறீங்கள். அப்ப உங்களுக்கு வேண்டாமோ?"

மங்களா ஒண்டும் கதைக்கேல்ல, எல்லாம் கட்டியெடுத்துக் கொண்டு வந்து கட்டில வச்சுட்டு வீட்டுத் தட்டிக்கதவெல்லாம் இறுக்கிக் கட்டினா. அவவுக்கு தெரியும், கடல்ல இண்டைக்கு சண்டை நடந்து பெடியளுக்குத்தான் வெற்றி. அப்ப அவருக்கு இண்டைக்கு பாலன் பிறந்த சந்தோசம். அவர் இனி வீட்ட வரமாட்டார். என்னையும் விட்டுட்டு கோப்ரேசனில தனிய நிண்டு, இல்ல தன்ர சினேகிதரோட நிண்டு நத்தார் கொண்டாடுவார். இனி அவருக்கு சாப்பாடும் தேவையில்லை. நாளைக்கு குடிக்கமாட்டன் எண்டு இன்னொருக்கா சத்தியம் பண்ணுவார். நாளண்டைக்கு திரும்ப கடல்ல ஒரு சண்டை நடக்கும். பெடியள் வெண்டு வருவாங்கள், பேந்து இனி புதுவருசம், அல்லாட்டில் ஒரு பொங்கல், ஒரு உயிர்த்த ஞாயிறு, தீபாவளி எண்டு கொண்டாடிக் கொண்டே இருப்பார். அது அவவுக்கும் சந்தோசம்தான். இன்னொருத்தற்ற சந்தோசத்துக்காகத்தானே நாங்கள் வாழுறம் எண்டு நாங்கள் நினைக்கிறேல்ல, ஆனா அதுதான் உண்மையும். கார்த்திகா கேட்டாள். "என்ன மங்களாக்கா வீடெல்லாம் கட்டி எங்க வெளிக்கிடுறியள்"

"வேற எங்க உங்களோட வரத்தான்," கார்த்திகா ஆச்சரியமாய்ப் பார்க்க "என்னோட நத்தார் கொண்டாட ஒருதரும் இல்லை. இண்டைக்கு உங்களோடதான் நத்தார் கொண்டாடப் போறன்."

# நல்லெண்ண வெளிப்பாடு

அ. அன்ரனி



இப்போது ஒருவாறாக அனல் கக்கி விஸ்வரூபமெடுத்து பரந்து விரிந்து இந்நாட்டையே சீரழித்து வந்த கொடிய யுத்தம் ஓரளவு தணிந்த நிலைக்கு வந்துள்ளது. மக்கள் வாழ்க்கையும் ஓரளவு சுமுகமானதொரு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது.நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஓரிரண்டு யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் பெரியளவில் விபரீதமான நிகழ்வுகளெதனையும் அது ஏற்படுத்திவிடவில்லை.

இதற்கிடையே வன்னிப்பிராந்தியத்தில் அடிக்கடி உலங்கு வானூர்திகளிலும், A9 வீதிவழியேயும் சமாதானத்தை வலியுறுத்தி நிற்கின்ற அனைத்துத் தரப்பினரும் வருவதும் போவதுமாகவும், பேச்சுக்களில் கலந்து கொள்வதுமாகவும் நிலைமைகள் இருக்கின்றன.

அரசாங்கத் தரப்பும், விடுதலைப்புலிகளும் பரஸ்பரம் எவ்வளவுக் கெவ்வளவு விட்டுக்கொடுப்புகளுடன் நடந்து கொள்ள முடியுமோ அவ்வளவுக்குப் புரிந்துணர்வுடன் சமாதானத்தை நோக்கிய நகர்வில் முன்னேறி வருகின்றனர்.

இவ்வாறாகச் சமாதானம் நோக்கிய பயணத்தின் பக்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பிரதிபலிப்புகள் சம்பந்தமான தேடலுமே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்புகளாக இருக்கின்றது. இந்த நேரத்தில் சூட்டோடு சூடாக பிறிதொரு சம்பவமும் இருபக்க நல்லெண்ண முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது புலிகள் வசமுள்ள சிங்களப் போர்க்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய அவர்கள் முன்வந்தமையை அடுத்து அரசாங்கமும் தம்வசமிருக்கும் போராளிகள் சிலரை விடுதலை செய்தது.

இந் நடவடிக்கை பலராலும் எதிர்பார்க்கப்பட்டதொரு நிகழ்வே. சமாதானத்துக்கு முந்திய காலமறிந்து ஆற்றவேண்டியதொரு சாலப்பொருத்தமானதொரு நடவடிக்கையாக இது இருக்கின்றமை வரவேற்கத்தக்கது.

சமாதான முன்னெடுப்பு முயற்சிக்கு அடித்தளமிடும் முயற்சிகள் பல இருசாராராலும் ஈடேறியிருக்கின்றன. அவற்றில் மிகவும் மனிதாபிமான அடிப்படைத் தேவையெனக் கருதும் கைதிகள் பரிமாற்றம் நிகழ்வதானது வரவேற்கப்பட வேண்டியதொன்றே . அது மாத்திரமன்றி இதுவொரு நல்லெண்ண சமிக்கையாகவும் கருத வாய்ப்புண்டு. அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கை மீது தமிழ் மக்கள் மேலும் நம்பிக்கை வைப்பதற்கு இது வழிசெய்திருக்கின்றது என்றும் கூடச் சொல்லலாம்.

விடுதலைப்புலிகளின் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கை மீது எவரும் சந்தேகப்பட முடியாது. ஏனெனில் கடந்த காலகட்டங்களிலெல்லாம் விடுதலைப்புலிகள் சமாதான முன்னெடுப்புக்காகத் தம்மால் இயன்ற பங்களிப்பைப் பல்வேறு வழிமுறைகளில் வழங்கி வந்திருக்கின்றனர். அவ்வப்போது எதுவித எதிர்பார்ப்புகளுமின்றி பல சிங்களப் போர்க்கைதிகளை விடுதலை செய்திருக்கின்றனர். அதைவிடப் பல விடயத்தில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சில விட்டுக்கொடுப்புக்களையும் மேற்கொண்டுள்ளனர். ஆனால் கடந்த கால அரசாங்கங்கள் யாவும் ஏமாற்று வழியையே பின்பற்றி வந்தனவேயொழிய உண்மை வழியில் இனப்பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளவில்லை. அதேவேளை சமாதானத்தின்பால் அக்கறையின்றியும் நடந்து கொண்டன. இதனை மறந்துவிடாத அடிப்படையிலேயே தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கை மீது எம்மக்கள் பூரணமாக நம்பிக்கை கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய நாள் முதலே பலரது எதிர்பார்ப்புகளும் பலவாறாக இருந்தன. அதில் இந்த கைதிகள் விடுதலை சம்பந்தமும் ஒன்றாயிருந்தது. விடுதலைப்புலிகள் அன்று தொட்டே சமாதானச் சூழலொன்று ஏற்படுமிடத்து மீதமாய்த் தம்மிடமிருக்கும் போர்க்கைதிகளை விடுதலை செய்யத் தயங்கமாட்டோம் எனப் பலதடவைகள் அறிவித்திருந்தனர். ஆகவேதான் இன்று விடுதலை செய்யப்படும்

போர்க்கைதிகள் விடயத்தில் மேலதிகமான அக்கறையோ அன்றிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவோ அன்றி மிகுந்த சிரமப்படவேண்டியதொரு கட்டாயம் யாருக்கும் ஏற்படவில்லை. பெரும்பான்மை சிங்கள மக்களிடையே கூட 'புலிகள் தம்வசமுள்ள சிங்களப்படைக் கைதிகளை விடுதலை செய்வார்கள்' எனும் நம்பிக்கையிருந்தது. ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இன்றும்கூட அரசாங்கம் கூடுதல் கவனமெடுக்காமை எம்மக்களுக்கு மிகவும் வேதனையை உண்டுபண்ணியுள்ளது. அதுமாத்திரமன்றி அரசியல் சிக்கல்களில் கூட தீர்வுகாண அரசாங்கத் தரப்பு முயலும்போதெல்லாம் அதற்கெதிராய் ஜனாதிபதி சந்திரிகா செயலாற்றுகிறார். அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை குழப்பியடிக்கத் துடிக்கின்றார். எனவேதான் மக்கள் இன்னும் முழுமையான முறையில் அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை கொள்ளத் தயங்குகின்றனர் போலும்.

இது இவ்வாறிருக்க தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கடந்த கால அரசுகளெவையும் கூடுதல் கரிசனை கொண்டதாக இல்லையென்றோம். கைதிகளது சாத்வீகப் போராட்டங்களெல்லாம் இவர்களது பொய்யான வாக்குறுதிகளை நம்பியதோடு தடைப்பட்டு விடும். சில அரச பிரதிநிதிகள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களது விடுதலை விடயத்தில் கரிசனை கொண்டு முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் ஏன் இன்னும் பலனானது சாத்தியப்படவில்லை என்பதுவே இங்கு கேள்வியாகின்றதல்லவா?.

தென்னிலங்கைச் சிறைகளிலும் இன்னும் அரசபடைகளது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலுள்ள சிறைகளிலும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். இவர்களது விடுதலை எப்போது சாத்தியமாகும்? இவர்களது விடயத்தில் அரசாங்கம் இனியாவது விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

ரணில் தலைமையிலான அரசாங்கம் கைதிகள் விடுதலை விடயத்தில் முடிவெதனையும் எடுப்பதற்கு சில சட்டப்பிரச்சினைகளும் தடையாயிருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியாததல்ல. ஆகவேதான் ரணில் தலைமையிலான அரசாங்கம் தனது சமாதானச் செயற்பாடுகளில் உண்மை நிலைமையினையும் தெளிவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டுமாயின் சட்டதிட்டங்களில் உள்ள சரியான அணுகுமுறைகளினைப் பயன்படுத்தி சட்ட வல்லுனர்களது ஆலோசனைகளின்படி விவாதித்து பயங்கரவாதிகளென சித்தரிக்கப்பட்டு சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் காரியம் சாதிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

அரசபடைகளினால் கடந்த காலகட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்களே. களமுனையிலும் அதனோடு சம்பந்தப்பட்ட இடங்களிலும் வைத்துக் கைதுசெய்யப்பட்ட புலிகளெனப் பார்த்தால் ஒரு சிலரே. அவர்களின் பெயர் விபரங்கள் கூட விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அடங்கலானவர்களில் ஏழு உறுப்பினர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். மீதியானவர்களது வழக்குகள் தொடர்வதினால் விடுதலை சாத்தியப்படவில்லை எனக்கூறப்படுகிறது. ஆனால் பலகாலங்களாக சிறைகளில் எதுவித வழக்குகளும் பதியப்படாமலும் சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்காத விதத்திலுமே அதிக தமிழ் இளைஞர், யுவதிகள் இன்னும் உள்ளனர். இவர்களது விடுதலை சம்பந்தமான நடவடிக்கைகளையே துரிதப்படுத்த வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

இழப்புக்களும், அழிவுகளும், துன்பங்களும், வேதனைகளும் விடுதலைப்போரை முன்னெடுக்கின்ற தேசத்திலே நிகழ்வது சகஜம் தான். அது தவிர்க்கவும் முடியாததுதான். ஆயினும் விடுதலையடைந்த நாடுகளிலும் சரி அன்றி போர் நிறுத்தம் ஒன்று உருவாக்கப்பட்ட நாடுகளிடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடாத்தப்படுகின்ற ஓர் சூழ்நிலையிலும் சரி மேற்கூறப்பட்ட அத்தனை இழப்புக்களுக்கும் இழப்பீடு ஒன்று உருவாக்கப்படும். அழிவுகளும் துயரங்களும் தொடரா வண்ணம் உறுதிசெய்யப்படும். மனிதநேயத்திற்கு மதிப்பளிக்கின்ற நிகழ்வுகள் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் கடைப்பிடிக்கப்படும்.

இந்த வகையில் நோக்கும்போது அரசாங்கத் தரப்பால் தமிழ் மக்கள் சந்தித்துள்ள இழப்புக்களுக்கும், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் உடனடி நடவடிக்கையெதனையும் விரைவாக எடுக்கவில்லை என்பது மனவேதனையே. இருந்தும் இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையை இழக்கவும் இல்லை. ஐ.தே.மு.அரசாங்கம் தேர்தலில் வாக்குறுதியளித்தபடி மக்களின் இயல்புநிலை வாழ்க்கை திரும்புவதற்கு வழியமைக்க வேண்டும். அத்தோடு சமாதான முயற்சிகளுக்கு முன்னர் நிகழ்த்தப்படும் நல்லெண்ண வெளிப்பாடுகளில் ஒன்றான தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை அடங்கலாக மேலதிக சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். அதனையே இன்று சிறைகளில் தமது விடுதலைக்கான நாளையெண்ணி கண்ணீர் சிந்தும் எங்கள் மக்கள் சிங்கள மக்களிடமும் அரசாங்கத்திடமும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழர் அனைவரையும் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என கத்தித்திரிந்த காலம் கடந்தாயிற்று போரே சரியான தீர்வு என கங்கணம் கட்டி நின்றவர்களையும் அவர்களுக்கு முண்டுகொடுத்த இனவாதிகளையும் மக்கள் தேர்தலில் தோற்கடித்துவிட்டனர். பேச்சு மூலமே தீர்வென்பதில் உறுதியாயிருந்த ஐ.தே.மு.அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அன்று தொட்டு நிகழ்வதே சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளாகும். அதற்கு விடுதலைப்புலிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர். பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்பு முயற்சியாக புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்தாகியாயிற்று. ஆரோக்கியமான நடவடிக்கைகள் சிலவும் இருதரப்பினராலும் மேற்கொள்ளப்படுகின்றது. பேச்சுக்களும் நடைபெறுகின்றது. புலிகள் மீதான தடைநீக்கமும் நடந்தாயிற்று. நிலைமை இப்படியிருக்க இனி யார் பயங்கரவாதிகள் ஏன் அவர்களைத் தடுத்து வைத்துள்ளார்கள்? இக்கேள்விக்கான விடைகளை பரிசீலிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தத்தை அரசாங்கம் தீர்த்துக் கொள்ள என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதென்பதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதல்ல. எந்தவொரு செயற்பாட்டின் பின்னேயும் அதற்கான விளைவென்பது கிடைப்பது போல் இதுவரை காலமும் போரும் அதனால் நிகழ்ந்த அனர்த்தங்களிற்கும் அழிவுகளுக்கும் இழப்பீடு எனும் ஒத்தடம் இடவேண்டியது அவசியம். நொந்து கெட்டுப்போயிருக்கும் தமிழினத்தின் ஆன்ம அபிலாசைகளை ஓரளவுக்காவது உடனடியாக தீர்த்து வைக்க வேண்டிய பலவிடயங்களில் கவனமெடுக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்தின்பால் எழுந்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு வழி திறக்கப்படுமா?



# காப்பரண் வேலியிலிருந்தோர் கடிதம்

அம்புலி

காப்பரண் மரங்கள்
கதைபேசின.
வான்நிலவும் உடுக்களும்
வந்தன சேர்ந்துண்ண.
கார்முகிற் துளிகளில்
முகம்பார்த்துத் தலைசீவி
பனிக்கால இரவுகளை
பயிற்சிக்காய் பகலாக்கி இளமைக்
கனவுகளின் முளைகிள்ளி
காவலுக்காய் உயிர்தேக்கி
உடல் தின்ற குண்டுக்கு
உதிரத்தால் பசியாற்றி
விழுப்புண்கள் ஆறமுன்னம்
விரைகிறேன் எல்லைக்கு
மீண்டும் பதுங்கு குழி.... துப்பாக்கி.....
எத்தனை உயிர்களின்
துயிலலுக்கான துயில்மறப்பு.
இன்றோ நாளையோ
என்றிருக்கும் வாழ்வுக்காய்
என்னுறவுகள்
அழுதலில் எனக்காறுதலில்லை
உண்ணும் சோற்றில் ஒருபிடி
உடுக்கும் துணியில் ஒரு முழம்
இல்லாதோர்க்கீயும் மனத்திறன்
எல்லாம் உறவென
நினைக்கும் ஈரம்.
பேதமகற்றிய வாழ்வின் வீரம்
காதலின் மேலெனக் கருதுவேன் யான்
நெஞ்சினிற் சுமக்குமென்
தாகத்தை ஆற்ற
நினைவுகளால் நீவிடுங்கள் உறவுகளே.



# பழி

மாரப்பன ஒரு குழந்தைமாதிரி என்று அப்பா சொன்னார்.

குழந்தை என்றால் என்ன மாதிரி இருக்கும்?

கதை கேட்டால் சிரிக்கும், "வா...." என்றால் கைகளை நீட்டிக்கொண்டுவரும். தூங்கவில்லையென்றால் கத்தும். சிலவேளைகளில் மண்ணை அள்ளி தலையில் கொட்டும்.

குழந்தைத்தனம் இவ்வளவு தானா....? அப்பிடி என்றால் மாரப்பன இன்னும் குழந்தையாகவில்லை.

எப்பிடி மாரப்பன குழந்தையாக முடியும்?

லக்ஷி முன்பு சின்னக் குழந்தை. சரியான குழப்படி; அழுகுணி. மூக்கில் சளிவழியவழியத் திரிவாள். சளியைப் பிடிக்கவிடமாட்டாள். அம்மா சீலையை உயத்தி அடிப்பாவாடையை பிடிச்சுக்கொண்டு லக்ஷிக்குக் கிட்டப்போக லக்ஷி வீரிட்டுக்கத்துவாள். அம்மா விடமாட்டா; லக்ஷி மண்ணுக்கை விழுந்து உருள தலையிலை அஞ்சாறு குட்டுக் குட்டிப்போட்டு அமத்திப் பிடிப்பா.அம்மாவின் கையுக்கை கழுத்து நெரிபட லக்ஷியின் கண்கள் சிவத்துக் கொண்டு வரும். மூக்கு அடைச்சால் சளி அடைகட்டி முட்டுவரும் என்றபயம் அம்மாவுக்கு. லக்ஷியை நித்திரை கொள்ள வைச்சு சளியை வாய் வைச்சு உறுஞ்சித் துப்புவா.

விடியற்காத்தாலை காகம் கரைஞ்சால்க்காணும் - லக்ஷி எழும்பி விடுவாள். எழும்பியதும் முற்றத்துக்குத்தான் ஓடுவாள்.

முற்றத்தில் பெரிய குடத்துக்கை தண்ணி நிறைய இருக்கும். சாப்பாட்டை முடிச்சு எல்லாரும் படுக்கேக்கை அம்மா போய் குடத்தை மூடிப்போட்டு வருவா. இரவில் எவருக்கும் சீவன் போவில், சீவன் தண்ணிக்குத்தானாம் அலையிறது. அலைந்து காடுகளுக்கை போய் விழாமல் தடுக்கத்தான் குடத்துக்கை தண்ணியை மூடிவைக்கிறதாம். ஆருக்கோ செத்தவீடு கொண்டாடினவையாம். விடிய குடத்துத்தண்ணியை எடுத்தூத்த மனிசன் உயித்திடுத்தாம். இதை அம்மம்மா ஒருநாள் சொன்னாப் பிறகு அம்மா இரவில் குடத்தை மூடித்தான் வைக்கிறவா.

லக்ஷி முற்றத்துக்கு ஓடிப்போனதும் முதலில் குடத்துத் தண்ணியை சரிச்சூத்திப்போட்டு தொம்பலடிப்பாள். மேல் நுதம்பும். கால்களில் இருக்கிற சேறைக் கழுவவிடமாட்டாள். குளிச்சால் நெற்றியில் பொட்டு வைக்க விட மாட்டாள். காதுக்கை போன தண்ணியை முறுக்கின சீலைத்துணியால் எடுக்க விடமாட்டாள். அம்மா எதுக்கெடுத்தாலும் லக்ஷிக்கு அடிப்பா. போயா மாமா லக்ஷிக்கு அடிக்க விடமாட்டார்.

நாங்கள் மாமாவை போயா மாமா என்றுதான் சொல்லுறனாங்கள். மாமா எண்பத்தி மூன்றாமாண்டுக் கலவரத்துக்கை அநாதரவாக ஓமந்தையில் நிக்க, அப்பா மாமாவைக் கூட்டிக்கொண்டு வந்தவர். மாமாவின்ரை இடம் மலைநாடாம்.

மாமா முந்தி நல்ல குழப்படி, ஒழுங்காப் பள்ளிக்கூடத்துக்கும் போக மாட்டார். பள்ளிக்குடமெண்டு வெளிக்கிட்டுப்போய் கள்ளிப் பத்தையளுக்குள் தானாம் ஒழிஞ்சு நிற்கிறவர். முளைச்சு நிக்கிற சின்ன ஆலமரங்களில் கட்டித்தூக்கின இளங்கொடிகளுக்கு கல்லுகளால் எறிந்து விளையாடுவார். எங்கள் ஊரில ஆடுகள், மாடுகள் போடுகிற இளங்கொடிகளை பாலுள்ள மரங்களிலை கட்டித்தூக்கிறது வழக்கம். பால் நல்லா ஊறுமாம். பள்ளிக்குட நேரங்களில் மாமாவைக் கண்டவர்கள் ஏன் பள்ளிக்குடம் போகவில்லை என்று கேட்டால் இன்று "போயா" என்று சொல்லுவார் மாமா - அதைவைச்சுத்தான் எல்லாரும் மாமாவை போயா என்று சொல்லுறவர்கள்.

லக்ஷி அழுதால் போயாமாமா ஓடிவருவர். தூக்கித் தோளில் போட்டுத்தாலாட்டுவார். "அக்கிளு" செய்து சிரிக்க வைப்பார். முற்றத்தில் லக்ஷியை இருத்திவிட்டு யானைமாதிரி நடந்து காட்டுவார். தவளைமாதிரிப் பாய்ந்து காட்டுவார். தாரா மாதிரி அரக்குவர். லக்ஷியை தோளில் வைத்து காவடி ஆடுவர். பாக்கிறசனங்கள் எல்லாம் போயாமாமாவைப் பாத்திட்டு குழந்தைப்பிள்ளை என்றுதான் சொல்லுவார்கள்.

மாரப்பன அப்பாவுக்குப் போயா மாமா மாதிரி ஏதும் செய்து காட்டினானா...?

மாரப்பன 'றபர்பான்' அடிக்கிறவன். பூவரசம் காம்பை மடக்கி றபரை இழுத்து விட்டான் என்றால் பட்ட இடத்தில் சுள் என்று வலிக்கும். புவனேஸ்வரி மாமியின் வத்ஷலா பள்ளிக்குடம் போக மாரப்பன பங்கர் கரையில் மறைஞ்சு நின்று 'றபர்பான்" அடிச்சவன். வத்ஷலாவின் நெஞ்சுச்சட்டையில் பட்டது. வத்ஷலா திடுக்கிட்டு நெஞ்சில் கையை வைச்சிட்டு, வெக்கத்தில் முகத்தை கீழை சரிச்சுக்கொண்டு போனவள். தலையாட்டி விசரனையும் அண்டைக்கு மாரப்பன பிடிச்சவன். விசரனுக்கு தலையிழுத்துப் பொட்டு வைச்சவன். தலையில் பூக்கள் குத்தினவன். பீடி குடிச்சுக் கறுத்துப்போன சொண்டில் 'லிப்ரிக்ஸ்' பளிச்சிட்டது. உள்ளாடைகளைப்போட்டு, தலையாட்டி விசரனை தெருவில் மாரப்பன கலைச்சு

விட்டவன். தலையாட்டி விசரன் சிரிச்சுக் கொண்டு ஓடினவன். சனங்கள் அவனைப் பார்த்து சிரிக்க மாரப்பனவும் சிரிச்சான். மாரப்பன சனங்களின் தோள்களில் கைகளைப் போட்டு விழுந்து விழுந்து சிரிச்சான்.

இப்ப போர் நிறுத்தம் அதுதான் மாரப்பன சனங்களுடன் ஒட்டுகிறான். முன்பு என்றால் மாரப்பனவுக்கு சனங்கள் சரியான பயம். மாரப்பன அந்த முகாமுக்கு வந்தவுடன இளம்பெடியள் ஒருதரும் கண்டபடி தெருக்களில் திரியிறேலை.

கந்தப்புச் சாத்திரியாற்றை றுசாங்கனை முப்பதுநாளைக்கு மேலை பிடிச்சு வைச்சிருந்தவங்கள். சாத்திரியார் லச்சம் லச்சமாகக் கொட்டித்தான் றுசாங்கனை வெளியில் எடுத்தவர். றுசாங்கன் வெளியில் வரேக்கை வெறும் எலும்புக்கூடு. காற்றுக்குக் கொக்குப் பட்டம் மாதிரி வளைஞ்சவன். அவங்கள் கறண்டு பிடிச்சுப் பிடிச்சுப் கோதாக்கிப் போட்டுத்தான் விட்டவங்கள். இப்ப கந்தப்புச்சாத்திரியார் குடும்பத்தோடு லண்டனிலை. மாரப்பனவாலைதான் அந்த மனிசன் மாபிள் பதிச்ச எட்டறைக் கல்வீட்டை விட்டிட்டுப் போனது.

லச்சுமியை வெள்ளைச்சீலை கட்டவைச்சதும் இந்த மாரப்பன தான். போயாமாமாவை தலையாட்டி விசரனாக்கியதும் இந்த மாரப்பனதான். ஏனெண்டால் மாரப்பன அந்த முகாமுக்கு வந்தாப்பிறகுதான் லக்ஷி காணாமல் போனவள். லக்ஷி காணாமல் போன நாளிலை இருந்து போயாமாமா நித்திரை கொள்ளுறேலை. லக்ஷியைத் தேடித்தேடிப் போயாமாமா வயல் வெளிகளுக்குப் போறவர். பத்தைச் செடிகளைப் பாக்கிறவர். சுடலைக் கிணறை ஒட்ட இறைக்கிறதுக்கு அஞ்சாறுவீடுகளுக்கு மிசினுக் கலைஞ்சவர்.

தேடிற இடங்களில் ஏதும் உடுப்புக்களைப் கண்டால் ஓடிப்போய் தூக்கிப்போட்டு லக்ஷியின்ரையில்லை என்பதற்குப் பதிலாக தலையை ஆட்டி ஆட்டிக்கதறுவார். இதை அவதானித் தவர்கள்தான் போயா மாமாவுக்கு "தலையாட்டி விசரன்" என்ற பேரை வைச்சவர்கள்.

நேற்று அப்பா மார்க்கற்றுக்கு நடந்து போனவர். அப்பாவுக்குப் பெரிய வண்டி, (வயிறு) பனங்கள்ளுக்குத்தான் உப்பிடி வண்டியென்று பொச்சுக்கார செல்லத்துரையர் சொன்னவராம். அப்பா இருந்திட்டு எழும்பமாட்டார். சரியாகக் கஷ்டப்பட்டு, முன்னுக்கிருக்கிற கதிரைகளில் கைகளைப் பிடிச்சுத் தான் எழும்புவார். நடந்தால் வண்டி வத்துமென்று ஆயுள்வேதப் பரியாரியார் சொன்னவராம். அப்பா நடந்துவர மாரப்பன அப்பாவை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வந்து விட்டவன். அதனால்தான் அப்பா மாரப்பனவை குழந்தை மாதிரி என்று சொன்னாரா?

இன்று மத்தியானச் சாப்பாட்டுக்கு அப்பா மாரப்பனவை வரச்சொல்லி சொன்னவராம். இதை அப்பா சொன்னதும் அம்மாவுக்கு நல்ல சந்தோசம்.

இப்ப ஆமிக்காரர் வீடுகளுக்கு வாறதை சனங்கள் பெருமையாக நினைக்குதுகள். வசதியான வீடுகளும் வடிவான பொம்பிளையள் இருக்கிற வீடுகளுக்கும் தான் அவங்கள் அடிக்கடி போறவங்கள்.

முந்தி இயக்கத்தின்ர கட்டுப் பாட்டுக்கை நாங்கள் இருக்கேக்கையும் கனபேர் இயக்கத்தை அணைச்சவை. சாப்பாடுகளும் கொடுத்தவை. அதை பெருமையாகவும் நினைச்சவை. வக்சலாவின்ர அப்பாவும் நாதனைக் கொழும்புக்கும், ரூபியை கனடாவுக்கும் அனுப்பிப்போட்டு இயக்கத்துக்கு ஆள்ச் சேர்த்தவர். மேடைகளிலை ஏறி ஏறிப் பேசியவர். கடைசியா சனங்கள் எல்லாம் வன்னிக்கு ஓடேக்கை நைசா நழுவி நிண்டிட்டு லெக்ஷன் கேட்டவர்.

அப்பா ஏன் மாரப்பனவை குழந்தை என்று சொன்னார்?ஒருநாள் லக்ஷியைத் தேடி அப்பா மாரப்பனவிடம் போனார்.

"ஐயா, லக்ஷி என்ரை மூத்தபிள்ளை. ஒருமாதமாகக் காணேலை. கலியாணம் செய்து பத்துவரிசமா எனக்குப் பிள்ளை குட்டியள் இல்லை. சன்னதி முருகனுக்குப் பறவைக்காவடி எடுத்துப் பெரிய அன்னதானம் கொடுத்தாப்பிறகுதான் லக்ஷி பிறந்தவள்."

அப்பாஅழுதார். மாரப்பனவுக்கும் கண்கள் கலங்கின. லக்ஷி கிடைப்பாள் என்று மாரப்பனமேல் அப்பா நல்ல நம்பிக்கை வைச்சவர். மாரப்பன ஒவ்வொருநாளும் வீட்டுக்குவந்து லக்ஷியை தேடிய இடங்ளைச் சொல்லுவான்.

அப்பா போகும் நேரம் எல்லாம் ரீ கொடுப்பான். மைலோ போட்ட நல்ல ரீ. அப்பா அரசாங்க உத்தியோகம் என்றாலும் நிவாரணம் பெற சிபார்சு செய்தான். அதை வைச்சுத்தான் அப்பா மாரப்பனவை குழந்தை என்றார்.

அப்பா மாரப்பனவுக்கு உரிச்சபடி முழுக்கோழி வாங்கி வந்தார். மாரப்பனவுக்கு கோழி என்றால் நல்லாப்பிடிக்கும். முழுக்கோழியை சூப்பு வைச்சுதான் குடிக்கிறவன்.

கோழி உரிச்ச சந்தைப் பொடியனுக்கு அப்பா பத்து ரூபா கொடுத்தார். போயா மாமாவுக்கு விசர் வராட்டி போயாமாமாதான் கோழியை உரிச்சிருப்பார். போயா மாமா கழுத்தில் சுருக்குப்போட்டு கோழியைச் சாக்கொல்லமாட்டார். செட்டையை அடிச்சுத் துடிக்கிறது பாவமாம். கத்திப் பிடியாலை நாரியிலை அடிச்சார் என்றால் துடியாமல் உடனை செத்துப்போடும்; அது பாவமில்லை என்று போயா மாமா சொல்லுவார்.

அம்மா முற்றத்தைக் கூட்டி மஞ்சள் தண்ணியை வடிவாகத் தெளித்தார். "கிஷோ" டைனிங் ரேபிளில் பூச்சாடிகளை அடுக்கினாள்.சுவர்களில் இருந்த படங்களின் தூசிகளைத் தட்டினாள்.

பெரிசாய் பிறேம் போட்டு போயாமாமாவின்ர படத்தை அப்பா சுவரில் மாட்டியிருந்தார். அதை கிஷோ கழட்டினாள். போயா மாமா வடிவில்லையாம். மாரப்பன அதை பாத்திட்டு ஆர் என்று கேட்பானாம்.

போயா மாமாவின் படம் இருந்த இடத்திலை ஒரு நடிகையின் படத்தை மாட்டினாள். அந்த நடிகையைப் பாக்க வெக்கமாக இருந்தது.குளித்துக் கொண்டு இருக்கி றாள். அந்த நடிகையை விட போயா மாமா என்ன வடிவு....... சிரிக்க குழி விழுந்த கன்னங்கள் நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டு. புள்ளிபோட்ட சேட்.

கிஷோவிற்கு இரசிக்கத் தெரியாது போலை...?

அப்பா ஈஸிச்செயரில் "சண்டே ரைம்ஸ்" பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்து ஸ்ரூலில மெண்டிஸ் போத்திலும்,

**கருணை ரவி**

கிளாசும் இருந்தன. ஒரு கிளாஸ் அடிக்க போத்திலை எடுத்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த மாரப்பன, கேற்றில் நின்று கோணடித்தான். அப்பா திரும்பிபார்த்தார். மாரப்பன சிரித்தார்.

முற்றத்தில் படுத்திருந்த டக்கிள் மாரப்பனவைக் கண்டதும் குரைத்துக் கொண்டு ஓடியது.

"டேய் டக்கிள்"

அப்பா டக்கிளை உறுக்கினார். அப்பா உறுக்கினார் என்றால் டக்கிளுக்குத் தெரியும் வந்தவர்கள் அப்பாவுக்கு வேண்டியவர்கள் என்று. டக்கிள் பேசாமல் போய் முற்றத்தில் படுத்தது.

"டக்கிள்" லக்ஷி வைத்த பெயர். போயா மாமா புளியடிச் சந்தைக்கு மீன்வாங்கப் போகேக்கை சந்தையிக்கை டக்கிளைப் பிடித்துக் கொண்டு வந்தவர். கொண்டு வரேக்கைஅப்பா பேசினவர், கழுத்துக்கை, காதுகளுக்கை எல்லாம் சரியான உண்ணியள் என்று. லக்ஷி ஒவரு உண்ணியளாப் பொறுக்கிப் போட்டு சம்போ வைச்சு முழுக வாத்தவள்.

லக்ஷி எப்பவும் டக்கிளோடுதான் விளையாடுவாள். பந்து என்றால் காணும்; வாயில்

கவ்விக்கொண்டு டக்கிள் ஓடும். லக்ஷி டக்கிளைத் துரத்திக் கொண்டு திரிவாள். லக்ஷி சோப் வாங்க சந்திக் கடைக்குப் போனால் டக்கிளும் சைக்கிளுக்குப் பின்னாலை போகும். லக்ஷியை ஆரும் தொட்டால் காணும்; "வள் வள்...." என்று குரைக்கும்.

போயா மாமாவைத்தான் டக்கிள் கூடுதலாகத் துரத்துகிறது. போயா மாமா வேணுமென்று அடித்துப்போட்டு ஓடுவார். ஓடிப்போய் முற்றத்து வேப்பமரத்திலை ஏறுவார். டக்கிள் வேப்பமர அடியை விசர் நாய்மாதிரி கடிக்கும். லக்ஷி டக்கிளைப் பார்த்துச் சிரிப்பாள்.

டக்கிள் லக்ஷிக்குப் பக்கத்தில் தான் படுக்கும். லக்ஷி படுக்கேக்கை கால்மாட்டில் சாக்கை விரித்து விடுவாள். டக்கிள் சாக்கில் படுக்கும். லக்ஷிக்குக் கிட்ட எறும்பு போனாலும் டக்கிள் பாய்ந்து பாய்ந்து குரைக்கும்.

இப்ப டக்கிள் விளையாடப் பந்து இல்லை. படுக்க சாக்கு இல்லை. லக்ஷி இல்லை. லக்ஷிக்கு அடிக்கும் போயா மாமா இல்லை. மாரப்பனவைப் பார்த்ததும் டக்கிளின் கண்களில் அந்த நாள் தான் ஞாபகத்தில் வந்தது.....

அன்று காலமை லக்ஷி சோப் வாங்கிறதுக்குப் புளியடிக் கடைக்குப் போனாள். டக்கிளும் லக்ஷியின் சைக்கிளுக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தது. அப்ப தெருவிலை ஒருதருமில்லை; காற்று மட்டும் தெரு புழுதிகளை அள்ளிக்கொண்டிருந்தது. ஜீப்பொன்று வந்து லக்ஷிக்குப் பக்கத்தில் பிறேக்கடித்து நின்றது. டக்கிள் வெருண்டு போய் கரையில் ஒதுங்கியது. மாரப்பன ஜீப்பில் இருந்து லக்ஷியை இழுத்தான். சைக்கிள் கானில் விழ ஜீப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது....

டக்கிள் குரைத்துக் கொண்டு ஜீப்பைத் துரத்தியது. டக்கிளால் அந்த ஜீப்பைத் பிடிக்கமுடியேலை.

கண்கள் உடைய டக்கிள் மாரப்பனவைப் பார்த்தபடி இருந்தது. டக்கிளுக்கு லக்ஷி வேணும். விளையாடப் பந்து வேணும். படுக்கச் சாக்கு வேணும்; போயா மாமா வேணும்.

அப்பா மாரப்பனவை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போனார். மாரப்பன வாசலில் கால்களை வைக்க டக்கிள் உறுமியது. அம்மா சிரித்தபடி கதிரையைத் துடைத்து விட்டு மாரப்பனவை இருக்கச் சொன்னா.கிஷோ வீட்டு ஜன்னலுக்கால் மாரப்பனவைப் பார்த்துச் சிரித்தாள். விரல்கள் ஜன்னல் கம்பிகளைத் தடவிக் கொண்டிருந்தன.

மாரப்பன சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்த நடிகையின் படத்தையே பார்த்தபடி இருந்தான். மாரப்பன அந்த நடிகையின் படத்தை கிஷோ மாதிரியே நினைத்தான்.

சீ! கிஷோ இப்பிடியா குளிக்கிறவள்....?

அம்மா சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்தாள். மாரப்பன கைகள் கழுவ அப்பா தண்ணி கொண்டு வந்தார். அம்மா ஒருவடிவான சில்வர் கிண்ணத்தை நீட்ட மாரப்பன அதுக்கிளை கையைக் கழுவினான்.

ஒருநாள் போயா மாமா வீடு கூட்டிக் கொண்டு போகேக்கை அந்த வடிவான கிண்ணத்தை எடுத்துப் பார்த்தவர். அம்மா ஓடிவந்து பறிச்சவா கிண்ணத்தில் ஊத்தை பிரளுதென்று.

மாரப்பன சாப்பிட்டதும் அம்மா அல்பத்தை எடுத்துவந்து கொடுத்தா. மாரப்பன ஒவரு படமாகப் பார்த்தான்.

மாரப்பன எழும்பி வாசலில் வந்தான். தென்னைக்குக்கீழை படுத்திருந்த டக்கிள் உறுமியது. அப்பா டக்கிளை ஒரு பார்வை பார்த்தார். டக்கிள் வாலை கால்களுக்குள் இழுத்துக் கொண்டு நாடியை மண்ணில் குத்தியது.

மாரப்பன வாசலால் இறங்கிப்போக கிஷோ ஓடிவந்தாள். முற்றத்தில் பூத்திருந்த ஒரு ரோஜாப் பூவைக் காட்டினாள். மாரப்பன அதை ஆய்ந்து கொண்டு போனான்.

அம்மாவும் அப்பாவும் கிஷோவும் மாரப்பனவை கேற்று வரைக்கும் போய் வழியனுப்பினர். மாரப்பன மோட்டச் சைக்கிளில் ஏறினான். முற்றத்தில் படுத்திருந்த டக்கிள் ஓடிவந்து, "வள்." என்று மாரப்பனவின் காலைக் கவ்வியது. சப்பாத்துக் போட்டுப் பழுத்துப் போன வெள்ளைக்காலில் டக்கிளின் ரண்டு பல்லுகள் தாண்டிருந்தன. மாரப்பன காலை இடறினான். இடற மோட்டச் சைக்கிள் கீழை விழுந்தது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கிஷோவுக்கும் டக்கிள் மேலை கோபம் ஏறியது.

"சனியன்......! நீ இதோடை துலைஞ்சு போ....."


அப்பா கீழை கிடந்த கல்லொன்றை எடுத்து டக்கிளுக்கு எறிந்தார். டக்கிளின் கழுத்தில கல்லுப்பட்டது. டக்கிள் கத்திக்கொண்டு ஓடியது. டக்கிளுக்கு கல்லுப்பட்ட இடம் வேதனையாய் இருக்கவில்லை.

டக்கிள் ஓடிப்போய் ஒரு பற்றைக்கரையில் மறைந்து கொண்டு தெருவைப் பாத்தது.

மாரப்பன வந்து கொண்டிருந்தான்..



## யதார்த்தம்



செத்துப் போகிறது
யதார்த்தம்
வாழ்க்கையின்
கௌரவம் எனும்
சேற்றில் விழுந்தழுகி
மூச்சுத்திணறி - அது
செத்துப் போகிறது

வாழ்தலின் - கௌரவம்
கம்பிகளின்
பின்னணியில் - அது
சிறையிருக்கிறது
அடுத்தவர் பற்றிய
பயத்தில் - நிஜங்களை
பொய்மையின்
நிழல்களுள் அழுத்துகின்ற
அறியாமையை எண்ணி
அழுதபடி - அது
சிறையிருக்கிறது.

ஒருநாள் - கௌரவத்தின்
காதுகளை கிழிக்கும்
வெற்றி முழகத்தோடு
நிழல்களைக் கீறிக்கொண்டு
நிஜங்கள் வெளிவரும்
அதுவரையும் - கௌரவச்
சேற்றில் மூழ்கி
செத்துப் போகிறது
யதார்த்தம்.

# காகிதக் கனி

இயல்பாய் வீசுகிறது காற்று
வழமைபோலவே
இயல்பாய் எறிக்கிறது வெய்யில்
பறவைகள்
தமது பாடல்களோடு
பாதைவழியே செல்லும்.
எளிமையான மனிதர்கள்
மனசிலிருந்து வரும்
தமது புன்னகையோடு.

புறம் திரும்பிய
முகங்களுடனும்
புதையுண்டு போன
மனசுகளுடனும்
நீயும் நானும்
மட்டும்
என்னசெய்துகொண்டிருக்கிறோம்
இங்கே......?
ஏடுகள் தந்த வரண்ட ஞானம்
எம் இயற்கையையும் தின்று
போனதேன் ?

ந.சத்தியபாலன்

---

# இலையுதிரும் நினைவுகள்......

சூரிய கிரணங்கள் தணல்
துண்டுகளாகி
புவிமேனியில் வீழ்ந்து கொண்டிருக்கும்
நடுப்பகல்,
என் நிழலும் ஒடுங்கி
அடிச்சுவடுகளுள் புதையுண்டது
என் மனம் போல.

நான் புரண்டெழுந்த மணல் மேடுகள்
எரிந்தும் புகைந்தும்....
மண்துரவுகள் தூர்ந்து முனகலோடு...
என் சுவாசக் காற்று மூக்கை அரிக்கும்
நெடியோடு,
தலைகளறுந்த தென்னந்தோப்புக்கள் ?
உரசி
என் முகத்தில் மோதிச் சிதறிற்று
நெஞ்சில் வலி ஆழவேரோடியது.

என் பிரிய கிராமமே!
உனது சோபிதங்கள் எங்கு போயின?
நான் சிறகு விரித்துப் பாவிய காற்றே
நீ எங்கு தான் தொலைந்தனயோ?



உன்னுடன் கதைகள் பல பேசி
போய் வருவேனே
அதே கல்லு வீதி நீதானா...?


உடைந்த கரும்பலகைகள் இருண்டிருந்தன
எழுத்துக்கள் இல்லாமல்

உனது மக்களை இரட்சித்து ஆசீர்வதிக்கும்
பார்பரா மாதாவே!
உமது திருச்சொரூபத்தில் தூசுகளின் படிவு...
படை கொண்ட முருகா உன்தாழ்களில்
அர்ச்சனைப் பூக்கள் இல்லையே!
சந்நிதி வீதி இப்படியா இருக்க வேண்டும்.

தூசுகளை ஒத்தி எடுக்க
நான் மீண்டும் வருவேன் மலர் கொண்டு,
அதுவரை பெருமூச்சுக்களை மட்டும்
விட்டுவிட்டு.

இத்தாவில்.க.சிவராசா

# நாம் மறவோம்




மா. பகீரதன்

அகதி என்ற
பெயர் கொண்டு
அவதியுற்ற வாழ்க்கையினை
நாம் மறவோம்....
மூட்டை முடிச்சுகளை
முதுகுதனில் சுமந்து கொண்டு
ஓட்டை மனத்துடனே
ஊரை விட்டு ஓடியதை
நாம் மறவோம்....


வீடு விட்டு நாமோட
நான் வளர்த்த நாய்க்குட்டி
நான் வருவேன் என்று சொல்லி
ஓடிவந்த வேளையிலே
ஊர்தி ஒன்றில் மோதுண்டு
உடல் சிதறி மாண்டதையும்
நாம் உறவிழந்து தவித்ததையும்
நாம் மறவோம்....

கொலைக்குருவி
வானத்தில் வட்டமிட
எம் உறவோர்
பூமிதனை முத்தமிட்ட வாழ்க்கைதனை
நாம் மறவோம்....
ஏவி விட்ட எறிகணைகள்
கூவி வந்து வெடித்ததையும்
எம் சுற்றம் உடல் சிதறி
மாண்டதையும்
நாம் மறவோம்....

பசியினாலேயே நாம் வாடி
நாலரிசிக் கஞ்சி காய்ச்சி
நாற்பது பேர் குடித்ததை
வீதியோர மரத்தடியில்
நுளம்பு குத்த படுத்ததையும்
நாம் மறவோம்....

ஊரிழந்து உறவிழந்து
உயிர் காக்க வேண்டுமென்று
இருமாத குழந்தைதனை
ஏந்தி வந்தாள் தமிழன்னை
உணவில்லை என்பதனால்
மார்பு பால் சுரக்க மறுத்ததையும்
பாலனுயிர் பறந்ததையும்
அன்னை வீதியிலே
விம்மி வீழ்ந்ததையும்
நாம் மறவோம்....

மகிழ்வோடு நாம்வாழ
நிலையான வீதியோடு
நாம் ஊர் போக வேண்டும்
மக்கள் வாழ்வில் நாளெல்லாம்
இன்பத் தேரோடிச்
சிறக்க வேண்டும்....



நேரம் தெரியவில்லை. வான் வெளுத்து சிறிது நேரம். ஆளரவமற்ற வீதிக்கு வந்த செல்லப்பு கிழவர், எதிராக நின்ற தென்னைகளுக்கும் சிறுமந்து பற்றைகளுக்கும் ஊடாக தெரிந்த கடலை கண்வெட்டாமல் பார்த்தார். ஒன்றிரண்டு போர்க்கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் தெரிந்தன. அலை அற்ற கடல் ஓரடிமையைப் போல் அடங்கி அமைதியாக கிடந்தது.

வழமையில் வேறுபாடில்லை. வெறுப்புடன் மறுபக்கமாக திரும்பினார் கிழவர். பனம் கூடல்கள், இடையே காடாக வளர்ந்த பற்றைகளும் வடலிகளும். அவை கடந்து வயல் வெளிகளோ அதற்கப்பால் மறு கிராமமோ தெரியவில்லை. மனதில் வெறுப்பு நிரம்ப, சலித்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தார். எதிரில் நாயொன்று வால் மடக்கி மெதுவாக ஓடிவந்தது. மறைத்த பார்வை, வாயில் வீணீர். கிழவர் நின்றார். பரமநாதனின் நாய். வீட்டில் கொட்டுவதை சாப்பிட்டு வாலாட்டியது. இப்போது மாறிவிட்டது. அதற்கு விசராக இருக்கலாம். கடித்தால் நிச்சயம் மரணம். மருந்தில்லை. ஊரைவிட்டு வெளியில் போகவும் இயலாது.

கல்லொன்று கிடைத்தால் நல்லது' தன்னைச் சுற்றிப் பார்த்தார். கல் கிடந்தது. எடுக்க மனம் தடுத்தது.வேண்டாம். இந்த நாய் துணுக்குற்று குலைத்தால், மற்றவையும் சேரும். எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து குரல் வைத்தால், ஒரு களேபரம். அதை தொடர்ந்து அக்னி சுவாலைகளை வீசிக்கொண்டு வர வேண்டியவை எல்லாம் வரும். சில வேளைகளில் அதில் ஒன்று அவருக்காகவும் இருக்கலாம்.

வில்லங்கம் வேண்டம்', மிரண்ட பார்வையுடன் ஒதுங்கி ஓரமாக நின்றார். அது விரோதமானதொரு வெறித்த பார்வையுடன் விலகிச் சென்றது.

நெஞ்சில் சிறு நிம்மதி. இரண்டு அடி வைத்ததும் அதுவும் போனது. நிமிர்ந்தவர் கண்களுக்கு முதலாவது இராணுவத்தினனது கெல்மட்டின் பளபளப்பு தெரிந்தது. அவன் பின்பாக நீண்டதொரு வரிசை.திரும்பவும் நின்றார்.அன்றாட அவஸ்தை. ஆனாலும் தேகம் பயத்தால் நடுங்கியது. இயல்புக்கு வர கட்டாயப்படுத்தி முயன்று தோற்றார். விகார உருவங்கள், மனிதமுகம் தொலைத்த மனிதர்களின் வரிசை. ஒவ்வொருவனாக கடந்தார்கள். பலமாதங்களாக சந்திக்கும் முகங்கள். சகஜமாகச் சிரிக்க முயன்று முடியாமல் பணிவான அடிமையின் தோன்றலாக நின்றார்.

சப்பாத்துக் கால்களின் ஒவ்வொரு அடியும் நெஞ்சில் மிதிக்கும் சுமையாக கடந்து போயின. அமைதியான நீண்ட நிமிடங்கள். திரும்பிப் பார்த்தார். அந்த நாயும் சேர்ந்து சென்று கொண்டிருந்தது. இந்த வேதனையின் ஆரம்பம் சில வருடங்களுக்கு முன் ஒரு கனவுபோல நிகழ்ந்தது.

குண்டு வெடிப்பு சத்தங்கள், வெடிச்சத்தங்கள் அடங்கிய காலைப் பொழுதில் எங்கும் இவர்கள் நின்றார்கள். ஊரில் முக்கால் வாசிச் சனம் எப்படியோ ஓடித்தப்பிக்க அங்கங்கு நின்ற சிலர் மட்டும் கைதிகளாய் நின்றனர். அதில் செல்லப்பு கிழவரும் ஒருவர். மூன்று வருடங்கள் நித்தமும் இவர்களின் இருப்பிற்குள் நெரிபட்டுக்கொண்டு

வசந்தன்

# புறக்கணிப்பு

வாழ்வோடு போராடியபடி வாழ்ந்து முடிந்தாயிற்று.

இங்கு இருக்கும் ஒவொருவரை சுற்றியும் சூனியமான வெறுமை. ஒரு மனச் சாந்திக்காக, சிறு பரவசத்துக்காக ஆளுக்காள் சந்திக்க மனம் அவாவும். அதன் பலன்தான் கிழவரின் இந்த நடை அன்றாட தேவையாகிறது. அவர்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் மிகவும் நெருக்கம். ஆபத்துகளும் அவலங்களும் அவர்களுக்கிடையேயான பிணைப்பை மிகவும் இறுக்கமாக்கி உள்ளது.

பிடிபட்டவுடன் முதலில் பள்ளிக்கூடத்தில்தான் அனைவரும் அடைக்கப்பட்டது. துப்பாக்கிகளின் முனைகள் நெஞ்சிற்கு முன் அழுத்த வாழ்வு.

அங்கு காயப்பட்டு கிடந்த நாலு பேரில் பரமன் சாக, அவன்ர உடலை அடக்கம் செய்ய முடியாமல் மூன்று நான்கு நாட்கள் தவித்த தவிப்பு.உயிரற்ற ஒரு மனிதனின் அருகில் அன்றாட வாழ்வு. கடவுளே, மிகக் கொடுமை. பள்ளிக்கூட சிறை வாழ்க்கை முடிந்து இந்த திறந்த வெளி சிறைக்கு அனுமதிக்க ஒரு வருடம் சென்றது.

சர்ரென வந்த ஜீப் வண்டியொன்று அவருக்கு அருகில் நின்றது. அதிலிருந்து இறங்கியவன் தமிழ்கலந்த சிங்களத்தில் சொன்னான். 'கொமாண்டர் வரட்டாம்' ஜீப் திரும்பவும் தறிகெட்டு ஓடியது.

கேணல், மதிப்பிட முடியாதவன்.கறுத்து உயர்ந்த தோற்றம். சற்றுபருமன். முற்றாக சவரம் செய்யப்பட்ட அவனது முகத்தில் உணர்வுகளை அறி வது கடினமானது. ஆங்கிலத்தில் பேசத் தெரிந்திருந்ததால் சில தடவைகள் அவனை சந்திக்க வேண்டிவந்தது. இரண்டு முறை அவராக சென்று. ஒருமுறை அவன் அழைத்தது. முதல் சந்திப்பு பள்ளிக் கூடத்தில் இருந்த போது, மிகுதியாக இருந்த இரண்டு பொடியளை பிடித்து சென்றபோது போய் பேசி அரை உயிராக அவர்களை அழைத்து வந்தது. மறுமுறை அந்த விசர்ப் பெட்டை வீதியில் செத்து கிடந்த போது அவள் மூளை சரியில்லாதவள். அவளின் முடிவு இப்படி அமையுமென்று யார் கண்டது.

'அவள் மனிதமிருகங்களால் குதறப்பட்டிருக்கிறாள்' என்று கேணலுடன் பேசும்போது கிழவர் சொன்னார். 'எனது பையன்கள் அப்படி செய்யமாட்டார்கள்' அவன் வழமைபோலவே மிகச் சாதாரணமாக சொன்னான். கண்களில் தவறு நடந்து விட்டதென்ற தடுமாற் றமோ அல்லது மறைக்க வேண்டும் என்ற அவதியோ இருக்கவில்லை. உன்னால் என்ன செய்யமுடியும் என்ற அலட்சியமும் கோடிடவில்லை.

நேரம் வீணாகிறதுஎன்பதுபோல் மணிக்கூட்டை திருப்பிப் பார்த்தவன் எழுந்துபோகச் சொன்னான்.

மூன்றாவதுமுறை, சற்றுக் கடுமையான சந்திப்பு. பகிரங்கத்தில் அவருக்கு நன்றாக தெரிந்த சம்பவம் பற்றியது. இரவு, சரமாரியான வெடிச்சத்தம். ஏன் எதற்கு என்று எவருக்குமே தெரியாது. ஏன்சுட்டவர்களுக்கே தெரியாது.

விடிந்து பார்த்தால், நல்லதண்ணி கிணற்றடி வடலிப் பக்கமாக சிவப்பு பசுவொன்றும் கன்றும் செத்து கிடந்தன. கன்று பாவம். சின்னது பிறந்து ஒரு மாதம் கூட ஆகியிராது.அந்தப் பக்கம் பதுங்கியிருந்த படையினருக்கு அன்று பகைவர்கள் அந்தக் கன்றும் பசுவும் வடலியின் சரசரப்பும்தான். அவர்களிலும் ஒருவனை தூக்கிச் சென்றதாக சிவகாமி சொன்னாள். இருக்கலாம் மாறிச் சாறி நடப்பதுதானே.

பிரச்சினை அதுவல்ல. அதன் தொடர்ச்சியாய் வந்தது. இந்த ஊர் கலகலப்பில் எஞ்சி இருப்பது அவர்கள் இரண்டு பேரும்தான். பத்துப் பதினொருவயதிருக்கும். சொல்ல முடியாத துடியாட்டம்.'ஒரு நாளைக்கு அவங்களிட்ட சூடுவாங்கி சாகப் போறியள்' என்று தாய் அடிக்கடி ஒப்பாரி வைப்பாள். அவர்கள் காதில் வாங்குவதில்லை. இராணுவத்தோடு கூட சிறிது வாரப்பாடு. கிழவருக்கு அவர்களை நன்றாகவே பிடிக்கும். அந்த உயிரோட்டமுள்ள நீரோட்டங்களுக்கு தடை போட அவருக்கு சம்மதமில்லை. செத்தாலும் பரவாயில்லை, வாழ்க்கையின் நீட்சியை விட வாழ்வின் அனுபவிப்பின் இடை சாவு ஆனந்தமானது.


அன்று கருக்கல்பொழுது இரண்டுபேரும் அந்தப்பக்கம் நின்றார்கள். ஓடிவரும் போது கிழவர் மறித்து கதைகேட்டு தோளில் தட்டி விட்டார். ஆனால் அவர்கள் இதைத்தான் செய்திருப்பார்கள் என்று அவர் நினைக்கவில்லை.

மறுநாள், சுற்றிவளைத்து முரட்டுத்தனமாக அழைத்து வந்து பள்ளிக்கூட முற்றத்தில் அனைவரையும் நிறுத்தியபோதுதான் விபரீதம் புரிந்தது.இராணுவத்தினர் அனைவரின் முகங்களிலும் கொடூர வெறி தாண்டவமாடியது. கேணல் கூட நிதானமிழந்து சினத்தோடு இருந்தான். அவனால் சகிக்க முடியவில்லை. வெறும் முதியவர்களையும், பெண் களையும் சிறுவர்களையும் கொண்டதொரு கிராமத்தில் தமக்கெதிரான போராட்டத்தை நினைத்துப்பார்க்கக்கூட முடியவில்லை. அப்படி இருக்க இப்படி நடந்துவிட்டதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"நாங்கள் தண்ணி எடுக்கிற கிணற்றில் செத்த மாட்டைப்போட்டது ஆர்" அவனது கண்கள் ஒவ்வொருவரின் முகங்களிலும் நின்று அலசி மிரட்டி வெருட்டி மாறியது. அவர்கள் பயந்து அடிமைகளாய் தலை குனிந்தார்கள். பதிலில்லை. அவன் சற்றுவிலகி தூரப்போனான். இப்போது அவனது சகாக்களின் முறை. அதே கேள்வி. அடி. உதை. அதில் ஆண் பெண் வயது வேறுபாடில்லை. ஆனால் பதிலில்லை. சற்று நேரத்தில் கேணல் திரும்பி வந்தான். இன்று மாலைக்குள் சொல்லாவிடில் அனைவரையும் கொல்லப் போவதாக மிரட்டிவிட்டு வேகமாக நடந்தான்.நினைக்க வேதனையாகவும் விரத்தியாகவும் இருந்தது. உச்சி வெய்யிலில் பசிக்கழும் குழந்தைகளோடு நோயோடு தள்ளாடும் வயோதிபரோடு கைகட்டி தலைகுனிந்து கண்ணீரோடு அவர்கள். வேதகாலத்து மனித அடிமைகள் வாழ்வு இலகுவானதாக மனதிற்பட்டது. மரணபயம் அங்கு குறைவு.

இங்கு மரணத்தோடு இணைந்ததொருகூட்டுவாழ்க்கை.சாவை அணைத்தபடி நடப்பு. சில நேரம் வாழ்வின்பிடி இறுக்கம். சிலநேரம் சாவின்பிடிஇறுக்கம். இன்று இரண்டா வதன்பிடி சற்று கூடுதலாகவே இறுகி இருக்கிறது. அவ்வளவு தான். வேறுஒன்றும் வேறுபாடாஇல்லை.

சாய் பொழுது, கேணல் அவரைதனியாகஅழைத்தான்."குடிக்கிற தண்ணியில இப்படிச் செய்யிறது......" நிறுத்தி அவரது கண்களை ஆழமாகப் பார்த்தபடி, "இது மனிதாபிமானமில்லாத செயல்" என்று அழுத்திச் சொன்னான். 'மனிதாபிமானம்' அந்த வார்த்தையை, அதுவும் அவன்.....கேட்டவுடன்நெஞ்சில் உதைத்தது போலிருந்தது. தேகம்



## நினைவில் ஒளிரும் திலீபனின்

### பதினைந்தாம் ஆண்டு நிறைவு முகம்

ஆதிக்கருக் கெதிராய்
எரிந்த தீயே
ஆனதா பதினைந்தாண்டுகள்
நீ போயே
நீதிக்காய் வீசிய புயலே;
வீரப்புலியே
நெஞ்சம் முழுதும் ஒளியாய்
நிரம்பிய சுடரே

மீதிக்கனவுகளுனதை ஏற்றோமன்று;
உனைவணங்கி
மிகவிரைவில் அதைமுடிப்போம் வென்று
வீதியுலா வருவாரெங்கள் மக்கள்
வெற்றியுடன்;
அவ்விழியில்
உன்விழி பூத்திருக்கும் களிப்புடன்

தியாக தீபம்
லெப் கேணல் திலீபன்
[இராசையா பார்த்திபன்
ஊரெழு, யாழ்ப்பாணம்]

உன் நெஞ்சுருக்கும் நினைவுடனே
வெஞ்சமர்கள் வென்றோம்
நீயுரைத்த மொழி வழியெம்
கொள்கையெ
னக் கொண்டோம்
பார்த்திரு
பாதயெங்கணும் பூக்கும்
மக்கள் புரட்சியில்
உனது கனவு நனவாகும்.

- வெளிச்சம்

படபடத்து வியர்த்தது. ஒவ்வொரு நரம்பும் துடித்து நடுங்கியது. கிழவர் தன்னைக் கட்டுப்படுத்த கஸ்ரப்பட்டார்.
இந்த மண்ணிலும் கடலோடும் ஓரொன்றிய வாழ்வோடிருந்த மக்கள் மீதான படையெடுப்பு இவனுக்கு மனிதாபிமானது...இந்த சனத்தின்ர வாழ்க்கையைச் சிதைத்து அவர்களைக் கொன்று வீசுவது மனிதாபிமானது. பிணங்களோடு மனிதர்களாய் சக மனிதர் வாழ்ந்து அவதிப்படுவதை பார்த்து இரசிப்பது மனிதாபிமானது. ஒரு திறந்த வெளிச் சிறையில் உறவுகளைப் பிரிந்து தனிமைப்பட்ட இந்த அப்பாவிகளை வைத்து வதைப்பது கூட மனிதாபிமானமாகப்படுகிறது. ஆனால், தன்னுடைய மண்ணில இருக்கிற அழுக்கை அகற்ற எழுந்த ஓர் சிறு எதிர்ப்புணர்வு இவனுக்கு மனிதாபிமானமற்றதாகப்படுகிறது.

உணர்வுகளில் தடுமாறிய கிழவர் நிதானத்துக்கு வந்தார். இவன் சாதாரணமானவனல்ல. இவனுக்கு இதெல்லாம் தெரியாது என்றுமில்லை. எங்களின் மென்மையான பக்கத்தில் அடித்துப்பார்க்கிறான். அவனுடைய வழிமுறையில் தான் அவனுக்கான பதிலும் இருக்கவேண்டும்.

"இதைச் செய்யிறதுக்கு இங்கு யார் இருக்கிறது. ஒருத்தருமில்லை" கிழவர் சாந்தமாகச் சொன்னார்.

"அப்ப நாங்களே செய்தது" அதிகாரத்தின் குரல் உறுமியது.

"இல்லை, நான் சொல்லுறது .....வெளியிலிருந்து ஆரும் வந்து" கிழவர் முடிக்கவில்லை.


அவனது முகம் சட்டென்று மாறியது. கண்களில் சலனம் நிறைந்த மிரட்சி பதட்டம் வெளிப்படையாகியது.

கிழவர் வெளியே வந்து சனத்தை அழைத்து வந்தார். சின்னவர்கள் இருவரும் அருகில் வந்து ஒட்டி, தடவி விலகிப் போனார்கள். அவரின் கண்களில் பரவசம்.

விளையாட்டு விளையாட்டாக எவ்வளவு பெரிய சாதிப்பு. தண்ணியென்ன பெரிய தண்ணி, அவன் நாளைக்கே அந்தக் கிணற்றை இறைத்து விட்டு பாவிப்பான். இல்லாவிடினும் மாற்றுவழிகள் ஆயிரமிருக்கு, ஆனால் முக்கியமானது. ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

'நாங்கள் உன்னை ஏற்றுக் கொள்ள வில்லை.கைகட்டி, தலைகுனிந்து பணிந்து போகும் இந்த மனிதர்களும் உனக்கு எதிரானவர்கள்'.அன்றிலிருந்து இரவுறக்கம் கேணலுக்கும் அவன் பையன்களுக்கும் போயிற்று. இரவிரவாக வெடிச்சத்தம். போகட்டும் அது பழைய கதை. இன்று ஏன் கூப்பிடுகிறான?.

# வீரவணக்கம்



## புலிகளின் இராணுவ அறிவியல் வளர்ச்சிக்காக முழுமையாகத் தன்னை அர்ப்பணித்த கேணல் ராயு

கேணல் ராயு/குயிலன்
(அம்பலவாணன் நேமிநாதன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

விடுதலைப் போரில் சுமைகளைச் சுமந்ததொரு போரியல் ஆற்றலாளனை நாங்கள் இழந்து போனோம்.எங்கள் தலைவனின் இராணுவ நுட்பங்களிற்கு செயல் வடிவம் கொடுத்ததொரு மூத்த தளபதி கேணல் ராயு/குயிலன் 25/08/2002 அன்று சுகவீனம் காரணமாக வித்தாகிப்போனார். வாழ்வில் ஒவ்வொருவருடைய வாழ்பனுபவமும் தனித்துவமானது. இவ்வாழ்பனுபவ நிலையில் எல்லாமனிதர்களும் தனித்ததுவமானவர்கள். ஆனால் இத்தனித்துவத்தை மனித இருப்பு நிலையின் ஆழத்திற்குச் சென்று அதனைச் தரிசித்து வெளிக்கொணர்பவர்கள் மிகச் சிலரே. எமது விடுதலைப் போராட்டப் பாதையில் எத்தனையோ போராளிகள் தன்னலமற்ற ஆழமான தேசப்பற்றும், விடுதலை வேட்கையும் கொண்ட தனித்துவ மனிதர்களாக வாழ்ந்துள்ளனர். மானிடவாழ்வின் மெய்மையைத் தரிசித்த உன்னதமான, தனித்துவமான இயல்புகளைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து தம்மை தேச விடிவிற்காக அர்ப்பணித்துள்ளனர். இவர்களுள் கேணல் ராயு அவர்களின் வாழ்வு எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆழமான ஒரு வரலாற்றுத் தடத்தைப் பதித்து நிற்கின்றது.எமது இனம் பெரும் அடக்கு முறைகளுக் குள்ளான 1983 காலப்பகுதியில் கேணல் ராயு அவர்கள் தன்னை விடுதலைப் போரில் இணைத்துக் கொண்டார். அர்ப்பணிப்பும், ஆழமான விடுதலை வேட்கையும் கொண்ட கேணல் ராயு அவர்கள் போராட்டம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த காலங்களிலெல்லாம் எமது தலைவருடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தவர்.விடுதலைப் போரின் படையியல் வளர்ச்சியின் அம்சமாக, மரபுரீதியான போர்ப்படை அணிகள் உருவாக்கம் பெற்ற போது தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலில் எமது இயக்கத்தின் முதலாவது சிறப்பு கொமாண்டோ படை அணியை உருவாக்கியவர். கேணல் ராயு எமது இயக்கத்தின் இராணுவ அறிவியல் ரீதியிலான வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர். இயல்பாகவே இலத்திரனியல், பொறியியல் துறைகளில் திறமையும் ஆர்வமும் கொண்டவர். விடுதலைப் புலிகளின் பொறியியல் பிரிவின் பொறுப்பாளராகக் கடமையாற்றி, படை ரீதியிலான பல புதிய உருவாக்கங்களின் உந்து சக்தியாக திகழ்ந்தவர்.மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் மாற்றமடைந்த போரியல் நுட்பங்களை ஈடுசெய்து புலிகள் மரபுப் படையாக எழுந்தபோது, விடுதலைப் போரின் முதலாவது கனரக ஆட்டிலெறி பீரங்கிப் படையின் உருவாக்கத்தையும், வெற்றிகரமாக தொடர்ந்த அதன் செயற் திறனையும் சாத்தியமாக்கிய போரியல் ஆற்றலாளன். போர்க் களங்களில் வெளிப்பட்ட இவரது ஆளுமை வீச்சு, ஆட்டிலெறி படைக்கலங்களின் துல்லியமான இயக்கம், ஒருங்கிணைப்பு போன்றவற்றில் இவர் வெளிப்படுத்திய அசாத்திய திறமை நெருக்கடியான பலகளங்களில் எமக்கு பெரும் வெற்றிகளைப் பெற்றுத்தந்தன. மனித இனத்தின் கொடிய எதிரியான புற்றுநோய் தனது வேர்களை இவருள் பரப்பிய நேரத்திலும் சோர்வின்றி மனம் தளராது எமதியக்கத்தின் இராணுவ அறிவியல் துறையின் வளர்ச்சிக்காகத் தன்னை வருத்தி உழைத்துக்கொண்டிருந்தார். இறுதிவரை எமது இனத்தின் விடிவையும், தேசத்தையுமே சிந்தித்தார். அதற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.ஒரு தந்தைக்கேயுரிய உரிமையுடனும், பாசத்துடனும் போராளிகளை வழி நடத்திய ஒரு போரியல் அறிவாளன். ராயு அண்ணா! எனப் போராளிகளால் அன்பு செய்யப்பட்டதொரு பொறுப்பாளன். தலைவனுடன் அருகிருந்து பல போரியல் வெற்றிகளைத் தேசம் அடைய உழைத்த எங்கள் மூத்த தளபதி 25-08-2002 அன்று சுகவீனம் காரணமாக சாவைத் தழுவிக் கொண்டார். விடுதலையை உச்சரித்தபடி விதையாகிப்போன எங்கள் தளபதிக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# நேற்றுத்தான் நாமங்கே...

நேற்றுத்தான் நாமங்கே நெஞ்சுநிறை ஆசையோடு
போற்றிப் பாதுகாத்த பொன்மண்ணைப் பார்க்கவென்று
வேற்று முகங்கடந்து வெறிச்சோடும் தெருக்கடந்து
காற்றின் முகங்கூட கருகி மறைந்திருக்கும்
மாற்றம் பலகொண்டு மகிழ்விழந்து குலைந்திருக்கும்
ஏற்றங் கொண்டிருந்த எம்மண்ணுக் கேகியதில்
சீற்றம் பொங்கிச் சிதைந்து மனமழியச்
தோற்றம் இழிந்த சொந்த மண் கண்டு சொல் -
தொலைந்தோம்.

அன்றொருநாள் அழகாகத் தார்வீதி தானோட
தென்னையிளங் கன்றெல்லாம் தலையாட்டி விடைகூற
என்றும் ஒளியிழக்கா இயற்கை அழகுகளைத்
தென்றல் தழுவித் திசையெங்கும் குளிர்த்திவிட
முன்றில் முழுதாக மண்விளைவு கண்ணிறைக்க
கன்றுக் கூட்டங்களும் காமதேனுப் பசுக்களுமாய்
வென்று கொடி நாட்டும் விளைச்சல் வயல் காட்டியதே
இன்றிதெல்லாம் தின்றபோர் சென்றொழிந்து போனதம்மா
சேர்ந்தோம்.


குந்தி இருப்பதும் குறிப்புத் தொலைந்ததென்று
வந்த நடைசுருக்கி வழிகூர்ந்து பார்ப்பதும்
மந்திக் கணங்கள் மரம்விட்டுத் தாவுதல் போல
வெந்த மனம்மாறி வீதிவழி நடப்பதுவும்
இந்த நிலையின்று எமக்கேனென ஏங்குவதும்
நிந்திக்க யாரென்று நிதம் நம்மை நோகுவதும்
சொந்தமாய்த் தென்மராட்சி கொண்டோர் சோகமடா
அந்தரந்தான்; ஆனாலும் அனுபவித்தே ஆகவேணும் -
நடந்தோம்.

தட்டியெழுப்பித் தலைகொஞ்சம் தான்கொண்டு
கொட்டம் அடித்த யுத்தமதில் குலைந்தழுது
பெட்டி ஒன்றிரண்டு பிடித்த உயிர் கையோடு
எட்டி வைத்த காலதிலே எழுந்தோடி மீண்டுவர
மட்டுப் பாடான உழைப்புள்ளும் மனம்வைத்துக்
கட்டி முடித்த மனை குறுங்கல்லாய்க் காலடியில்
தட்டித் தானழிந்த சேதியதைச் சொல்லிவிட
முட்டிப் பெருகி முழுநிலமும் நனையக் கண்ணீர் -
வடித்தோம்.

கூடிச் சிறுகொடியே கொம்பரெங்கும் பூச்சுமந்து
ஆடி அசைந்து மண்ணை அழகாக்கத் துடிக்கையிலே
பாடித் திரிந்த மண்ணும் பாழடைந்து போனதென்று
வாடிப் போய்ச் சோர்ந்து வேறிடத்தில் வாழ்ந்திருக்க
ஓடிப்போவோமா? இல்லை எங்கள் மண்ணை
மூடிச் சூழ்ந்துவந்த இழப்பெல்லாம் மீட்பமென்று
நாடி வந்து நாமெல்லாம் நன்றே சேர்ந்துழைத்து
தேடியொரு பொற்காலம் திசை புகழச் செய்யோமோ
செய்வோம்.



ச. சாரங்கா



# அட்டைகள்
# +
# உண்ணிகள்
# +
# நுளம்புகள்
# =
# சுரண்டலும் நோய்ப் பெருக்கங்களும்

மக்களின் தேவைகள் சேவைகள் மூலமாக பூர்த்தி செய்யப்படும் நிலை எங்கும் தவிர்க்க முடியாததாகும். பல நூறு துறைகளாக செயற்படும் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கை சேவை என்ற பதத்தினால் சுட்டப்படுகின்றது. இந்தச் சேவை என்பது இலவசமானது மட்டும் அல்ல. இலவசமான சேவைகளும் இருக்கின்ற போதிலும் அவ்வாறல்லாதனவே அதிகமானவையாக உள்ளன. அதிக நடைமுறைச் சாத்தியத்தைக் கொண்டிருப்பது இதற்குக் காரணமாகும்.

ஆயினும் சேவை என்ற பெயரில் இடம் பெறும் பகற் கொள்ளையினை பட்டியல்படுத்துவதற்கு அதைத் திட்டவட்டமான எண்ணிக்கைக்குள் அடக்கக் கூடியதாயில்லை. அந்தளவுக்கு மக்களுக்கான சேவை என்று நடத்தப்படுபவைகள் மூலம் இலாபம் என்பதற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் சுரண்டல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கூர்ந்து நோக்கும் எவருக்கும் அளவற்ற விசனம் ஏற்படுவது நிச்சயமானது.

பணத்தைக் அலகாகக் கொண்டு பொருள் பெறுமதி கணிக்கப்படும் அதேவேளை எல்லோரது பணவருவாயும் ஒருசம விகிதத்தில் இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஏற்றத் தாழ்வான முறையில் வருவாய் இருக்கின்றது. இந்த வருவாய் ஒவ்வொருவருக்கும் அடிப்படையில் ஒரு வகையான விற்பனை மூலம் கிடைப்பதாகும் என்று பொருளியல் கூறும். விற்பனை என்பது இங்கு நேரடியாக பொருட்களின் விற்பனையை மட்டும் குறிப்பதில்லை; அது மனித உழைப்பு எல்லாவற்றையும் குறியீடு செய்யும் ஒன்றாகும்.

இந்த ஏற்றத்தாழ்வான வருவாய்தான் சேவைகளில் சுரண்டல் அல்லது பகற்கொள்ளைக்கு ஏதுவாக அமைகின்றது என்று கூறிக் கொள்ளலாம். எல்லாம் எல்லோரும் சமம் என்ற ஒரு நிலை (அது வெறும் கற்பனை நிலைப்பட்டது) இருப்பின் போட்டிக்கு இடமற்றுப் போகும். ஆனால் எப்போதும் (அவ்வாறில்லாத) காரணத்தால் போட்டிகள் அதிகமாகி விட்டன. இங்கே நாம் குறிப்பிடும் வருவாய்க்கான போட்டி என்பது அதிக இலாபத்தைக் கருத்தில் கொண்டு இன்னோர் கொள்வனவாளனையோ விற்பனையாளனையோ தொடர்ந்தும் எப்போதுமே மிதிப்பதாக அமைந்து விடுவதுதான் விசனத்துக்குரியதாக அமைகிறது.

இந்த நிலை எங்கும் நிலவுகின்ற போதிலும் இலங்கையில் தமிழர்களிடையே நிலவுகின்ற இவ்வவலமே குறிப்பாக நோக்கப்படுகிறது. வடக்கு கிழக்கு பிரதேசம் முழுவதும் இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்த போரினால் குறிப்பாக சாதாரண வாழ்வுடைய மக்களின் பொருளாதார அடித்தளம் சிதைக்கப்பட்டு விட்டது. நாளாந்த வாழ்வைக் கொண்டு நகர்த்துவதில் எதிர் கொள்ளும் இடர்பாடுகளாக, 'பகற்கொள்ளைகள்' அதிகரித்து விடுகின்றன.

போக்குவரத்து, பொருட்கொள்வனவு, மருத்துவம் என அனைத்து வழிகளிலும் பகற்கொள்ளை நடக்கின்றது. இதில் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக அன்றாடம் காய்ச்சிகளே இருக்கின்றனர். அரசு சாராத ஊழியர்களாக பணிபுரிபவர்களில் கணிசமானோரும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

இந்த வகையினரை அநேகமாக பாதிப்பவர்களாக வியாபாரிகளே இருக்கின்றனர். நாளாந்த வாழ்வில் வியாபாரிகளை இவர்கள் சிம்மசொப்பனமாகவே கருதத் தலைப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. ஏற்கனவே வியாபாரிகள் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் தரகுத் தொழிலில் நோகாமல் சுருட்டிக் கொள்ளும் நிலை இருக்கின்றது. குறிப்பாக விவசாயிகள் ஆண்டில் மூன்றில் ஒருபங்கு காலம் வருந்தி உழைத்து அறுவடை செய்வதை இருந்தபடியே சுலபமாக வாங்கி விற்பதால் பெறும் இலாபம் விவசாயிகளுக்குக் கிடைப்பதை விட அதிகமானது. அவர்களிடம் இருக்கும் கொள்வனவுச் சக்தி இதனை சாத்தியப்படுத்துகின்றது.

இதனோடு மட்டும் வியாபாரத்தின் சுரண்டல் முடிவதில்லை. வடக்கு கிழக்கில் கடந்த இருபது ஆண்டு காலமும் மாறி மாறி பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டே வந்துள்ளது. இது சாதாரண மக்களை பாடாய்ப்படுத்த வியாபாரிகளுக்கு கிடைத்த வழிமுறையாகவும் அமைந்தது. சிறிலங்கா அரசு கடந்த காலங்களில் அமுல்படுத்திய தமிழர் மீதான பொருள் தடைகள் வியாபாரிகளுக்கே வாய்ப்பாக அமைந்தமை கண்கூடு.

ஞாபகன்

குறித்த பொருள் தமிழ்ப் பகுதிக்கு தடுக்கப்பட்டால் உடனடியாகவே அதன் விலை அதிகரிப்பது நிகழ்ந்தது. தடுக்கப்படும்போது வியாபாரிகளிடம் கைவசம் உள்ள பொருள் அதன் உண்மை விலையாலும் பல மடங்குகள் அதிகரிப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது என்பது புரிவதில்லை. பொருள் வருவது தடுக்கப்பட்டால் உடனடியாக மக்கள் அதனைக் கொள்வனவு செய்து சேமிக்க முயல்வது இயல்பானது. ஆனால் அதற்காக அதன் விலை ஏன் அதிகரிக்க வேண்டும்? என்று கேட்பது சிறுபிள்ளைத்தனமானது அல்ல. ஏனெனில் தடை செய்யப்பட்ட அதே வேகத்தில் விலை குறைந்து விடுவதில்லை என்பது நடைமுறை உண்மையாகும். இவ்வாறே அரசினால் பொருட்களின் விலை கூட்டப்படும் போது அதன் உடனடி விளைவை சந்தையில் காணலாம். மாறாக குறைக்கப்படும் உணவுப் பொருட்களில் மட்டுமின்றி அத்தியாவசியமான மருந்து, பால்மா, வகைகளின் சந்தை நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது. இவை மிகக் கொடூரமான சுயநலத்தின் வெளிப்பாடாகும். அரச மருத்துவமனைகளில் இல்லாத மருந்து வகைகள் வெளியில் வாங்குமாறே கூறப்படுகின்றது. அத்தகைய மருந்துகள் அநேகமானவை நாளாந்தம் பாமசிகளில் விலை மாற்றமடையாதவையாகவே இருக்கின்றன. பரவலாக பாவனைக்குட்படாத மருந்து வகையொன்றை ஒருமுறை வாங்கி உபயோகித்து விட்டு திரும்பவும் அதனை வாங்கும்போது உண்மை விலையின் மடங்குகளாகவே அது அதிகரிப்பதன் காரணம் எவராலும் விளக்கப்படுவதில்லை.

தடைகாரணமாகவோ என்னவோ அரச மருத்துவமனைகளில் இல்லாத மருந்துகள் எப்படித் தனியார் மருந்தகங்களுக்குக் கிடைக்கின்றன என்பது அவசியமில்லாத கேள்வி என்பதால் அது பற்றிச் சிலாகிக்க வேண்டிதில்லை. எந்தத் தடைகளுக்கு மத்தியிலும்பொருட்கள் சில வந்து சேர்வது என்பது வழிமுறை சார்ந்தது. இந்த வழிமுறைக்கும் விலை உயர்வுகளுக்கும் நியாயமான தொடர்புகள் இருக்க முடியும். ஆனால் நாம் இப்போது குறிப்பிடுவது ஏற்கனவே கையிருப்பில் இருந்த பொருள் சடுதியாக விலை உயர்வது வியாபாரிகளது எத்தகைய மனப்பாங்கின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றது என்பது பற்றியே.

மனித வாழ்விற்கு இன்றியமையாததாக உழைப்பு இருக்கின்றது. உழைப்பு - அதன் அடிநாதம் சமூக உறவுகளிலேயே தங்கியிருக்கின்றது. அந்த உழைப்பினை நிர்ணயிக்கும் சமூக உறவு நேர்மையானதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் அது சுரண்டலற்றதாகவும் சுதந்திரத்தைப் பேணுவதாகவும் இருக்க வேண்டும் என்பதற்கும் அப்பால் அது மனதாபிமானத்தையும் இழந்ததாயிருப்பது தான் கொடுமையானது. இதனைப் போக்குவரத்து சேவைகளில் நாளாந்தம் அவதானிக்கவும் அனுபவிக்கவும் முடிகின்றது.

பேருந்துகளில் உள்ள ஆசனங்களின் எண்ணிக்கை அதன் நோக்கம் என்பன தனிமனித உரிமையை சுதந்திரத்தைப் பேணுவதற்கே என்று எவரும் இப்போது எண்ணத்தலைப்படுவதில்லை. அவை பேருந்தின் உருவத்தை முழுமையாகப் பிரதிபலிப்பதற்காகவே என்று நடத்துனர்களால் உணர்த்தப்படுவது புதிதல்ல. பயணிகளை மேய்க்கும் எஜமானர்களாக பேருந்து நடத்துனர்களும் சாரதிகளும் மாறிப் போயிருப்பது தேவையான வழிக்கு போதிய போக்குவரத்துச் சேவை இல்லாததை மட்டும் உணர்த்துகின்றதா?

அரச பேருந்துக்கும் தனியார் பேருந்துக்கும் இடையிலான போட்டி நிலவுகின்ற வீதிகளிலும்கூட இது நிகழ்வது போக்குவரத்துச் சேவைகளின் போதாமையை மட்டும் உணர்த்தவில்லை. பேருந்துப்படியில் கால் வைக்கும் வரைக்கும் பயணிக்கு உள்ள மரியாதை அது புறப்படத்தொடங்கிய பின் இல்லாமல் போவதும் தன்மானத்தைக் கேள்விக்குள்ளாக்குவதும் பயணத்துக்காக வழங்கப்படும் கட்டணம் போதாது என்பதையும் நாம் புண்ணியத்தில் ஏற்றிச் செல்கிறோம் என்றும் காட்டுவது போல் உள்ளதை உணர முடிகின்றது.

நடத்துநர்கள் வயது வேறுபாடின்றி பயணிகளை மேய்க்கத் தலைப்படுவதும் அதற்கு எதிர்ப்பு காட்ட முற்படுபவர்களை - வேறு போக்குவரத்து சேவையே இல்லாத நேரத்தில் நடுத்தெருவில் இறக்கி விட்டுப் போவதுமான சர்வாதிகார தன்மை எல்லாப்பகுதியிலும் ஏற்பட்டிருப்பது குறித்துக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. புதிதாக பயணம் சென்று திரும்புவோரை அச்சுறுத்தும் பாணியிலான இந்த நடவடிக்கை தனிமனித நடத்தைகளின் வெளிப்பாடு. ஆயினும் இது கண்டுகொள்ளப்படாதிருப்பது வருத்தத்திற்குரியது.


போக்குவரத்து வசதிகள் அதிகரித்த பகுதிகளில் பேருந்துகளுக்கிடையே ஏற்படும் போட்டி பயணிகளின் பாதுகாப்பை மதிப்பதாக இல்லை.தனியார் பேருந்துகள் தரிப்பிடங்களில் பயணிகள் இறங்கியதும் இறங்காததுமாக வாகனத்தைத் செலுத்தத் தொடங்கும் சட்ட மீறல்கள் அச்சுறுத்துவனவாக உள்ளன.


இவையாவும் பணத்தைப் பெறுவதற்காக மட்டுமே நோக்கமாகக் கொள்வதற்கு அப்பால் வேறெதனையும் கருத்திற் கொள்ளாததன் வெளிப்பாடாகின்றன; செலவழிக்கப்பட்டதன் பயனை ஒருவர் பெறுகின்றாரா என்பது பற்றிய கரிசனையே அற்றுப் போனமையை கொள்ளை, மனிதாபிமானமின்மை என்றே கூறமுடியும்.

இப்போது இதன் வடிவங்கள் வடபகுதிக்குள் இலத்திரனியல், அச்சுஊடகங்கள் மூலமும் தோன்றத் தொடங்கிவிட்டன. அதிகளவில் கவர்ச்சி மூலமாக மக்களை ஈர்த்து அவர்களின் பணத்தைப் பிடுங்கும் இவை மக்களுக்கு ஆரோக்கியமான விளைவை கொடுக்கின்றனவா என்றால் இல்லை. மூன்றாம் தர ரசனை ஊடாக பணத்தைச் சுருட்ட வல்ல ஒரு களமாக இப்போது இவற்றுக்கு வடபகுதி மாறத் தொடங்கி விட்டது.

இலத்திரனியல் ஊடகங்கள் தொலைபேசி வழியான உரையாடலை மையப்படுத்திய நிகழ்ச்சிகள் மூலம் வெறும் பொழுது போக்காக வடபகுதி மக்களின் பணத்தை தென்னிலங்கை நோக்கிக் கொண்டு செல்கின்ற கைங்கரியத்தைத் தொடங்கி விட்டுள்ளன. சமாதானத்திற்கான இன்றைய காலம் இவற்றுக்கும் கூட சாதகமாகிப் போயிருக்கின்றது.

இனி வரப்போகும் சமாதான காலம் இத்தகைய ஏற்க முடியாதவற்றுக்கும் பயன்படப் போவது பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது





ஆதிலட்சுமி சிவகுமார்

சில பதிவேடுகளும் குறிப்புப் புத்தகங்களும் அவருக்கு முன்னால் இருந்தன. அவர் தூரத்தே தெரிந்த தென்னந்தோப்பைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருப்பவர் போல் தெரிந்தார். சில நாட்களாய் எதிலும் ஒட்டிக்கொள்ள விரும்பாத மாதிரி அவர் மனம் அழுத்தமுற்றிருந்தது.

கிளிகளும் குருவிகளும் தென்னோலையில் இருப்பதும் பறப்பதுமாய் அமளிப்பட்டுக் கொண்டிருந்தன. வானத்தின் மென்நீலப் பின்னணியில் தென்னை மரங்களின் தலைகளைத் தடவும் சூரியனின் கதிர்கள் பளபளத்தன.

வாசலில் மோட்டார் சைபிக்கிள் ஒன்று வந்துநிற்கும் சத்தம். அவர் யோசனைகளிலிருந்து விடுபட்டவராய் நிமிர்ந்தார். யன்னலூடாக அவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் வழக்கமாக வருகிற பழக்கமானவன்.

எழும்பி சேட்டை எடுத்துக் கொளுவியபடியே,

" வாரும் தம்பி " என்றார். அவனோடு இன்னொருவனும் வந்திருந்தான்.

' வணக்கம் சேர்..'

' வணக்கம் ' பரபரத்தார்.

அவரதுமேசைக்கு முன்னாலிருந்த வாங்கில் இருவரும் அமர்ந்தார்கள். புதிதாக வந்திருந்தவன் அறையின் நான்கு பக்கங்களையும் கண்களால் துருவிப் பார்ப்பதை அவர் உணர்ந்தார்.

' உடம்பு ஏதும் சரியில்லையோ சேர்...'

' ஓமோம்.... இல்லத்தம்பி.... சாடையான அலுப்பு...... '

சிறு புன்னகையோடு, கொண்டுவந்த புத்தகங்களையும் பைல்களையும் அவன் அவர் முன்னே மெதுவாக வைத்தான்.

' இந்த முறை புத்தகங்கள் கிடைக்கப் பிந்திப்போச்சு சேர்.... குறை நினைக்காமல் கொஞ்சம் நேரத்தோடை அலுவலை முடிச்சுத்தரவேணும்...'

அவர் தலையாட்டினார்.

' அப்ப வரப்போறம் சேர்...'

' இருங்கோ தம்பி... ரீ குடிச்சிட்டு..'

' இல்ல சேர்... வேற அலுவலும் கிடக்கு... ஆறுதலா வாறம்...'

அவர்களுடன் அவரும் கேற்வரை வந்தார்.

புதிதாக வந்தவன் மோட்டார் சயிக்கிளை ஸ்ராட் செய்தான். அது அனுங்கிவிட்டு மௌனமானது. திரும்பவும் இரண்டு முறை முயற்சித்தான். ஸ்ராட் வரவில்லை.

அவனின் சேட் முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டது. நெற்றியிலும் கன்னங்களிலும் வியர்வை உருண்டது.

'சூப்பியைக் காட்டு மச்சான்...'

அவன் சூப்பி என்று சொல்லப்படுகின்ற பெற்றோல் நிரப்பிய சிறிய குப்பியை எடுத்து சிறிய குழாயினூடு பிதுக்கினான். மற்றவன் ஸ்ராட் செய்தான்.

புகையைக் கக்கிக் கொண்டு மோட்டார் சைபிக்கிள் உறுமியது.

' வாறம் சேர்...'

தலையசைத்தார். தெருப்புழுதியை வாரிக்கொண்டு போனார்கள். அவர் உள்ளே வந்து மேசையின் முன்னால் அமர்ந்தார். பைல்களைப் புரட்டிப் பார்த்தார். அவசரமாய்ச் செய்து கொடுக்க வேண்டிய வேலை.

நெற்றிப் பொட்டில் கையை வைத்துக் கொண்டு பார்வையை வெளிச் செலுத்தினார். ஜன்னலுக்கு நேரே வீதிக்கு எதிர்ப்புறமாய் கதிரின் தேநீர்க் கடையில் இரண்டு மூன்று இளைஞர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

கதிர் நிலத்தில் வைத்து பெற்றோல் மாக்ஸ் கொளுத்திக் கொண்டிருந்தான்.

அவர் மனைவி அறைக்குள் வந்து அரிக்கன் லாம்பை துடைத்துக் கொளுத்துவதற்காக எடுத்துக் கொண்டு போனாள். அவர் இன்னமும் வெளியே பார்த்தபடி இருந்தார்.

' அப்பா ... அப்பா...'

அவரது ஏழு வயது மகன் கார்த்திக் ஓடிவந்தான்.

'இவரால தானேயப்பா ஆக்களுக்கு காய்ச்சல் வாறது?...'

அவனுடைய கையில் செத்த நுளம்பு ஒன்றிருந்தது.


' நுளம்பால எப்படியப்பா மலேரியா வாறது?..'

அவருடைய மனநிலைக்கு சிறிதும் சம்பந்தமில்லாத கேள்வி அது. ஆனால் சின்னவயதின் ஆர்வம். தேடலை அலட்சியம் செய்துவிடக்கூடாது என்கின்ற உணர்வும் எழுந்தது. மகனுக்கு நுளம்பிலிருந்து மலேரியாக் கிருமிகள் பரவும் விதத்தை விளங்கப்படுத்தினார்.

அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏனைய நுளம்புகளையும் துரத்தி அடிப்பதற்காக ஓடினான்.

மனைவி அவர்முன்னால் அரிக்கன் லாம்பையும் தேனீரையும் வைத்து விட்டுப்போனாள்.

பைல்களையும் பதிவேடுகளையும் தூக்கிவைத்துவிட்டு



இளைஞர்கள் தந்த புத்தகங்களைப் புரட்டினார். சில வரலாறுகள் அதில் இருந்தன. ஆங்கில மொழி மூலமான அந்த வரலாறுகளை இளஞ்சந்ததியினருக்காக தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் 'பணி அவருக்குத் தரப்பட்டிருந்தது.

மூலத்தைச் சிதைக்காமலும், றையிலும் மொழிபெயர்க்கும் திறமை அவருக்கிருந்தது. நீண்டகாலமாய் அவர்களுக்கு இப்பணியைச் செய்தபோதும் விளம்பரங்களேதுமின்றி அவர் இருந்தார்.

புத்தகமொன்றின் ஓரிரு பக்கங்களைப் புரட்டி மேலோட்டமாய் படித்துக்கொண்டிருந்தபோது -

கதிரின் தேனீர்க்கடையில் இருந்து ரேப்றெக்கோடர் பாடத்துவங்கியது. நிமிர்ந்து பார்த்தார்.

பெற்றோல் மாக்ஸ் வெளிச்சம் வீதியில் பரவிக்கிடந்தது. நாலைந்து இளைஞர்கள வாங்கில் அமர்ந்திருந்தார்கள். பழுத்த வாழைக்குலைகள் இரண்டு கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தன.

தெருவைத் தாண்டி பாடல ஒலியும், இளைஞர்களின் சிரிப்பு ஒலியும் அவரைக் குழப்பின. தாய்மொழியைக் கொல்லும் அந்தச் சினிமாப்பாடலை அவரால் சகித்துக் கொள்ள முடியாமலிருந்தது. அண்மைக் காலமாய் இது ஓர் அவஸ்தையாக அவருக்குப்பட்டது.

காலை ஏழு முப்பதுக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு அலுவலகத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வீடு திரும்புகையில் தினமும் கதிரின் தேனீர்க்கடை அவருக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தது.

திரும்பத்திரும்ப ஒரே பாடல்கள. அதுவும் அளவுக்கு அதிகமான ஒலி அதிர்வுடன்.

கதிருக்கு நாலுவார்த்தை சூடாகப் பேசவேண்டும் என்று சில நேரங்களில் முயன்று பார்த்திருந்தார்.

பாடசாலை ஆசிரியையான அவரது மனைவி காலையில் அவசரமாக குசினிக்குள் வேலையாயிருக்கும்போது கதிரின் கடையடிக்கு அவர் போவார்.

காலையில் அவனுக்கு பிஸ்னஸ் அமளியாயிருக்கும். தேனீர் கலக்குவதும் சிற்றுண்டிகளைப் பரிமாறுவதுமாய் அவன் ஆரவாரப்படுவான்.

அவரைக் கண்டதும் தன் வேலை களை நிறுத்தி வணக்கம் சொல்லி ஸ்டூல் எடுத்துப்போடுவான். அதே அவசரத்துடன் தேநீர் கொடுப்பான். காலைப்பத்திரிகையைக் கூட அவனது கடையிலேயே அவர்படித்துக் கொள்வார்.

சில்லறைகளை எடுத்து நீட்டினால் 'இருக்கட்டும்' என்று வாங்க மறுத்து விடுவான். அவருடைய அறிவுக்கும், வயதுக்கும் அவன் கொடுக்கும் மரியாதையாக இது இருக்கலாம் என எண்ணிக்கொள்வார் . தேனீர் குடித்து பத்திரிகை படித்த பின்பும் சிறிது நேரம் ஸ்டூலில் அமர்ந்திருப்பார்.

'பாடலைப் பற்றிச் சொல்லவா?' என்று மனம்போராடிக்களைக்கும். எதுவுமே சொல்லாமல் வீட்டுக்கு வருவார்.

அவர் இப்போதும் கடையையே பார்த்துக்கொண்டிருந்தார். பாடல் அதிக மான ஒலியுடன் நகர்ந்து கொண்டிருந்தது. தேனீர்பரிமாறும் மேசையில் தட்டித் தாளமிட்டு மகிழ்ந்து கொண்டி ருந்தார்கள் இரு இளைஞர்கள்.

அவர் தவிர்க்கமுடியாமல் இளமைப்பராயத்து மாலைப் பொழுதுகளை எண்ணிப் பார்த்தார். அவரது இளமைப் பராயத்து மாலைப் பொழுதுகள் திருமுறை வகுப்புக்'களிலும் ,புராண இதிகாச சொற் பொழிவுகளிலுமே கரைந்திருந்தன.

திருமுறைப் பாடல்களை பண்ணிசையில் சொல்லித்தரும் தன் குருவை மனக்கண்ணில் நிறுத்திப் பார்த்தார்.

கைப்பிடியளவு குடுமியும், காதுகளில் கடுக்கன்களும் ,இடுப்பில் நான்கு முழ வேட்டியும் அணிந்திருக்கும் குருநாதர் அவர் முன் பிரசன்னமானார்.

அவருக்கு கல்வியூட்டிய தற்குப் பரிகாரமாக குருநாதர் அவரிடம் ஒரு போதும் பணம் பெற்றுக் கொண்டதில்லை.

'கல்வியையும் கலையையும் வைத்துக் காசு பண்ணக்கூடாது' என்று அவர் அறிவுரை கூறுவார். அலுவலக வேலைகள் தவிர்ந்து, பிரத்தியேகமாக செய்யும் கடமைகளுக்கு அவர் ஒருபோதும் காசு வாங்கியது கிடையாது.

தன்னுடைய தொண்ணூற்று மூன்றாவது வயதில், குருநாதர் உயிர் நீத்தபோது - அவருடைய பூதவுடலை அடக்கம் செய்யும் நிகழ்வில் கூட அவரால் கலந்து கொள்ளமுடியாமற் போய்விட்டது.

அவர் ஊரிலிருந்த போது அவர் வீட்டுக்கு வரியுடை தரித்தவர்கள் வந்து செல்வதும், அவர்களின் வாகனங்கள் தேவைகருதி வீட்டுக்கு வந்து போவதும்,அவர் வரியுடை தரித்தவர்களூடாக அரிய பணி செய்வதை யாவரும் அறிவர் என்பதாலும் ஊருக்குப் போய்வர அவர் அச்ச முற்றிருந்தார்.

இப்பொழுது அவின் காது களுக்கு மிக அருகே சில நுளம்புகள் பாடத் தொடங்கின. அவர் மேசை லாச்சிக்குள் இருந்து உடனடியாக நுளம்புத்திரி ஒன்றை எடுத்துக் கொளுத்தினார்.

அவசரமாகச்செய்து கொடுக்க வேண்டிய வேலைகள் உறுத்தின. மூக்குக்கண்ணாடியை எடுத்துத் துடைத்துவிட்டு கண்களில் பொருத்திக் கொண்டார்.

ஆங்கிலப்புத்தகம் ஒன்றை எடுத்துப்புரட்டினார். புத்தகத்துக்கான முன்னுரையைப் பார்த்தார். எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் முதலில் முன்னுரையைப் படிக்கும் பழக்கம் அவரிடமிருந்தது.

முன்னுரையை அவர் படித்துக் கொண்டிருக்கும் போது கதிரின் தேனீர்க் கடையிலிருந்து ஒலிக்கும் பாடல் அவர் செவிகளில் நுழைந்தது.

அவருக்குள் இப்போது சினம் மூளத் தொடங்கியது. வேண்டுமென்றே கதிர் தன்னைக் குழப்புவதாக எண்ணும் குரூரம் அவருள் உருக் கொள்ளத் தொடங்கியது.

'கோவம் பாவத்தைத் தேடும்' என்று குருநாதர் கற்பித்ததை நினைவூட்டி - மனதைக் கட்டுப்படுத்த முயன்றார். கண்களை மூடிக்கொண்டு தியானித்தார்.

'அவன்' கல்வியறிவு நிரம பாதவன்..... தன் அறியாமையால் இந்தத் தவறைச் செய்கிறான். அவனுக்கு இதைப்புரிய வைக்க வேண்டும்....' தன்னை ஒருமுகமாக்கினார்.

இப்போதே கடைக்குப்போய்-கதிரை அழைத்து நிதானமான முறையில் அவனுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

புத்தகத்தை மூடி, அரிக்கன் லாம்பைத் தணித்து வைத்தார். ரோச்லைற்றைக கையில் எடுத்துக் கொண்டு -கதவைப் பூட்டினார்.

'மகனும் மனைவியும்' தூங்கி யிருக்க வேண்டும். எதுவித சிலமனையும் காணாததால் எண்ணிக் கொண்டார்.


முன்கதவை நீக்கி வாசலில் இறங்கினார். படியில் ஒரு உருவம் அமர்ந்திருப்பதாகத் தெரிந்தது. ரோச்லைற்றை அடித்துப் பார்த்தார். அவர் மனைவி கால்களை நீட்டியபடி அமர்ந்திருக்க அவள் மடியில் அவர்களின் மகன் உறங்கியிருந்தான்.

'ஏன உதிலை இருக்கிறீர்?. .இருட்டில பாம்பு பூச்சி ஏதும் வந்தால்.....' ரோச்லைற்றை நிறுத்தி விட்டுக் கேட்டார்.

'கதிர் நல்ல பாட்டுக்கள் போடுறான்...அதுதான் இதில இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறன்.......'

மனைவியின் பதில் அவருக்கு வியப்பாக இருந்ததா? வேதனையாக இருந்ததா? என்று அவருக்கே புரியாத நிலையில்-அவர் படியிறங்காமல் அப்படியே

நின்று கொண்டிருந்தா.



# புதிய மாற்றம்

பெ(b)லா ஆக்மடுலீனா (Bella Akhmadulina) மொஸ்கோவில் 1937ல் பிறந்தார். ஸ்ரிங் என்ற அவரது முதல் தொகுப்பு 1962இல் வெளிவந்தது. அது கொம்யூனிஸ்டுகளால் மிகவும் உள்மனப்பதிவு எனவும் சமுகவியலை சித்தரிக்கவில்லை எனவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பெண்கவிஞரே அன்னா அக்கமத்தேவாவின் அடுத்த காலத்தவர் எனக்கொள்ளப்படுகிறார். இரண்டாவது தொகுப்பு (1967) இல் 'மியூசிக் லெசன்' என்ற பெயரில் வெளிவந்தது. அவரது நீண்ட கவிதையாகிய 'தி பெ(f) யாரி ரேல்' அதிலே உள்ளது.

ரஷ்ய மூலம் பெ(b)லா ஆக் மடுலீனா
ஆங்கிலம் வழியாக தமிழில்:- சு.மகேந்திரன்

எனக்காக அழவேண்டாம் - நான் பிழைத்துக்கொள்வேன்
கலகலப்பான பிச்சைக்காரியைப் போல்
ஒரு வகையான குற்றவாளியைப் போல்,
தென் பகுதி பெண் ஒருத்தி வடக்கின் குளிரில்
விறைத்து நிற்பது போல்,
மேசையில் முட்டுக்கொடுத்து நிற்கும் அந்த குடிகாரனைப்போல்,
ஒரு சயரோகக் காரியைப் போல்,
பகமை உணர்வுகொண்ட பீற்றர் யேகியன்போல்,
மலேரியா நோய் கொண்ட தெற்கிலும்,
நான் உயிர் வாழ்வேன்
எனக்காக அழவேண்டாம்
நான் பிழைத்துக்கொள்வேன்
சேர்ச்சின் தாழ்வாரம் ஒன்றில்,
ஒதுங்கும் நொண்டிப்பெண்போல்,
ஆண்டவரின் அன்னையின் படத்தை வரையும்,
ஒரு இரண்டாம்தர ஓவியன் போல்,
நான் உயிர்வாழ்வேன்.
எனக்காக அழவேண்டாம்,
நான் பிழைத்துக்கொள்வேன்.
தனது எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மையிலும்
எனது சிவப்பு கைவளையல்களை அணிந்துகொண்டு
கோபத்துடன் கூடிய எனது அறைகளை வாங்கிக்கொண்டு
மடைச்சிபோல் எனது கவிதைகளை ஒப்புக்கொள்ளும்,
இந்தப் புத்தகம் படிக்கும் சிறுமிபோல்,
நான் உயிர்வாழ்வேன்.
சாவினையே தரும் முறைகளற்ற கொடிய யுத்தத்திலும்,
கருணைச்சகோதரியைவிட அன்புடையவளாக,
ஒளிரும் எனது நட்சத்திரத்திற்கு கீழாக
எப்படியோ நான் பிழைத்துக் கொள்வேன்.





# பூதாக்கலம்

என் வீட்டில் குமரனும், குமரியும்
அவன் வீட்டிலும் குமரனும், குமரியும்
வேலி எட்டிப்பார்த்ததினால்
காண்டம் தொடங்கியது
யுத்தகாண்டம் தொடங்கியது.
வேலிக்கதியால் மாறி மாறி
அரக்கிப் போடல்தான்.
கைகலப்புத்தான்.
ஐந்திழை. ஆறிழை, பத்திழை
மாறிமாறிப் போட்டம்
இடையிடை
காயம் ஆற அமைதிகாத்தோம்
இடையில்
அயல் வீட்டுத் தரகர் குசலம்.
சலார் கொடுத்து ஏறி இறங்கினம்.
நல்ல கத்தியள் வேண்டினம்
சூரிக்கத்தி, சூச்சுக்கத்தி.
எட்டி நிண்டு வெட்ட
காட்டுக்கத்தி
எட்டி வெட்ட கொக்கச்சத்தகம்.
இவையாவும் அவனும் வேண்டினான்.
தருணம் பார்த்துத் தூக்கியும் பார்த்தம்.
குமரனும், குமரியும்
மூலைக்கே பெருமூச்சு விடுகுதுகள்
நீக்கப்புறப்பட்டினம்
சக்கர வியூகம் வகுத்து
எங்களை
சக்கையாக்கிப் போட்டினம்.
குமரனும், குமரியும்
கடும் பேதி கூழ்காச்சிக் குடுத்தினம்
அடி,அடி எண்டு
அடிச்சதாலை
குனிஞ்ச தலை நிமிராமல் ஒதுங்கிச்சினம்.


சிறுஅமைதி

பின் கதியால் அரக்கல் தான்.
என்ர குமரனும், குமரியும்
சுழிச்சடிச்சதாலை
அயல் ஊர்க்காரர் வந்தினம்
வள்ளுவ அறத்துப்பால்
நிறையப் பேசிச்சினம்.

சம்மந்தப் பேச்சுக்கால்
நடக்குது, நடக்குது.
பலகாரப் பெட்டி மாத்திறது எப்ப?
நாள் வைக்கிறது எப்ப?
பூதாக்கல உலை வைக்கிறது எப்ப?
சோறு குடுக்கிறது எப்ப?
நடந்தால் நல்லது
யாருக்கு விருப்பமில்லை.

நடக்காட்டி என்ன
குமரனும், குமரியும்
பூதாக்கல உலையை
உயரப் போக்காட்டுங்கள்.

**வளநாடன்**






# போராட்டம்

எனக்கு என்னவோ
அவன் வயிற்றுக்கு
ஒரு சுவர் இருப்பதாவே
தெரிகிறது
அவன் தோலில் எலும்புகளால்
மனித ஓவியம் வரையப்பட்டுள்ளது
எவ்வளவு முயன்றும்
அவனில் முப்பரிமாணத்தை
காண முடியவில்லை.
விழிகளை திறந்து ஆழமாய்
பார்த்தால்
அவன் உடலில் கொஞ்சத்தோலும்
மிகுதியாய்
சிங்கப்பற்கீறல்களும் காணமுடியும்
அவனில்
சுவாசப்பையின் தொழிலை
இரைப்பை செய்கிறது
இப்பொழுதெல்லாம் இவன் வயிறு
ஒரு இடியப்பத்துடன்
நிரம்பிவிடுகிறது
ஆனால் உடற்பசி பற்றி அதிகம்
அலட்டிக்கொள்வதில்லை
இவன் நெஞ்சில்இருப்பது
இதயத்தணல்
இவனிற்கு ஒரு பெருமை உண்டு
அவமானத்தை என்றும்
சுவாசித்தில்லை.
இவனை ஊடுருவியதில்
இவன் உயிர் வற்றும் வரைக்கும்
ஏதோ ஒன்றிற்காய்
போராடுகிறான் என்பதை
விளங்கிக் கொண்டேன்.

**தீ.றமணன்**



# சாம்பலும் குருதியுமாகிய நிலம் இன்னும்...

சிதையுண்ட காலத்தின்
ரணங்களை
மௌனத்துள் அரைத்து
புன்னகைக்கிறது நிலம் (அநாமிகன்)

மின்னும் கருமையில் நீண்டு நெடுத்து நிலங்களை இணைக்கிறது. ஏ-9 நெடுஞ்சாலை. மெல்லென நகரும் இப்போதைய பேச்சுவார்த்தையின் இமாலயச் சாதனைகளில் ஒன்றென இச்சாலை இணைப்பும் ஊடகங்களினூடே பேசப்பட்டது. இனிவரும் மழைகாலத்தில் இவ்வீதியின் மினுமினுப்பு எப்படியாகுமோ என்பது ஒருபுறமிருக்க இவ் வீதிக்கு இருமருங்குமுள்ள வன்னிப் பெருநிலப் பரப்பில் எப்பக்க வீதிகளில் திரும்பினாலும் உள் வீதிகளில் எழுகின்ற தூசுப்படலம் ஒருவேளை கார்காலத்தில் இல்லாமல் போகலாம். ஆனால் வீதிகளில் உருவாகி இருக்கின்ற பள்ளங்கள் இன்னும் ஆழமாகிப்போய் விடும் என்பதே உண்மையாகும். இப்போதே இவ்வீதிப் பள்ளங்களில் விபத்துக்குள்ளானவர்களின் பட்டியல் நீளமானது.விபத்தினால் காயமடைந்தவர்களுக்கான சிகிச்சைகள் இப்போதும் தொடர்கிறது. வீதிகளுக்கான சிகிச்சை எப்போது என்பது தான் தெரியவில்லை.

இந்த ஊர்களுக்குப் பெயர் வைத்தவர்கள் தீர்க்கதரிசிகள் என்றார் ஒரு அன்பர். ஏனென்று கேட்டதற்கு மழை காலத்தில் இந்த வீதிகள் எல்லாம் வாய்க்கால்கள் ஆகி விடும் என்பதை முன்னுணர்ந்துதானே இவற்றுக்கு எட்டாம் வாய்க்கால், பத்தாம் வாய்க்கால் என முன்னரே பெயரிட்டனர் என்றார். குளங்களின் பெயர்களால் குறிக்கப்படும் ஊர்களுக்கு என்ன பஞ்சமா? நல்ல வேளை இடங்களின் பெயர்களில் ஊர்கள் இல்லாமல் போனது. வீதிகளே திருத்தப்படாத நிலையில் ஊடகங்களில் அபிவிருத்தி சூறாவளியாய் சுழன்றடிக்கிறது.

வீதிகளே திருத்தப்படா நிலையில் ஏனைய விடயங்களான வைத்திய வசதிகள், கல்வித் தேவைகள் அடிப்படைப் போக்குவரத்து வசதிகள் பற்றிப் பேசி என்ன பயன். தொலைத்தொடர்பும், மின்சாரமும் இன்னும் இந்த மக்களுக்கு ஆடம்பரப்பொருட்களே கட்டிட நிர்மாணப்பொருட்கள்,தொலைத்தொடர்புச்சாதனப்பொருட்கள், மின்சாரக்கருவிகள் தாங்கிய பாரிய கொள்கலனைத்தாங்கிச்செல்லும் பாரஊர்திகளை வேடிக்கைபார்ப்பதுமட்டுமே இவர்களுக்கு இப்போ பொழுதுபோக்கு. வேறு என்னசெய்யமுடியும்?

சமாதானப் பயணத்தின் பதாகையுடன் அபிவிருத்தி அரசகட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கே இப்போதும் போய்கொண்டிருக்கின்றது. இங்கு மட்டுமேன் இடைக்கால நிர்வாக வரவைக் காட்டுகிறார்கள் என்பதுமட்டும் இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

கிளிநொச்சி இப்போது சர்வதேச அரங்கில் கொழும்புக்கு இணையான இடத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு குவிமையம். உலங்கு வானூர்தித் தரையிறக்கத்துக்கான காற்றுத் திசைகாட்டி நிரந்தரமாகவே பொருத்தப்பட்ட ஒருமைதானத்தைக் கொண்ட ஒரு நகரமாகும். முன்பு வடநாட்டின் நெற்களஞ்சியம் எனச் சொல்லப்பட்ட ஒரு சிறுபட்டினம். "போஸ்காட் கமக்காரர்களின்" வங்கி நிலுவைகளை சரிந்து விடாது பேணிய ஒரு அட்சய பாத்திரம். பல சுவாரசியமான கதைகளைக் கொண்ட இந்தப் போஸ்காட் கமக்காரர்களிடம் வயல் கொட்டில்களில் கூலிகளாக இருந்தவர்களுக்கும் இப்போது பிரச்சினை. இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு மேலாக வயற்காட்டில் நிலைத்தொரு தமது உழைப்பைப் பிணைத்திருந்த இவர்களுக்கு மீள்குடியேற்ற உதவி கிடைக்குமா எனக் கேள்வியொன்றும் உண்டு.

ஒரு காலத்தில் வடக்கின் உற்பத்திகளான செத்தல் மிளகாய், சின்ன வெங்காயம், கருவாடு, வாழைக்குலை என்பவற்றை இங்கே வைத்துத்தான் தெற்கின் வியாபாரிகள் மலையகத்து மரக்கறிக்கும், குருநாகல் தேங்காய்க்கும் பரிமாறிக்கொண்டனர். வடபகுதியின் மிகப்பெரிய இரவு, பகல் வாராந்த சந்தையும் இங்கேதான் கூடியது.

86,90,91 இல் இராணுவ சப்பாத்துக்களால் சீரழிந்து போன இந்த நகரம் 1996 இல் 'சத்ஜய' வால் முற்றாகவே அழிந்து போனது. அப்போ அழிவின் எல்லைப் பரப்பு அகன்று விரிந்தது. அந்தக் காலங்களில்

சிலுவை யேசுவை
சிலந்தி மூடிற்று
பிள்ளையார் பலி பீடத்தில்
களிம்பு படர்ந்தது
மாமர ஊஞ்சல்கள்
இற்று வீழ்ந்தன
சருகடர்ந்த முற்றத்தில்
பாம்புகள் அரைந்தன. (ஹம்சத்வனி)

இழப்புக்கள், உடமைகளையும் கடந்து உயிர்களையும் காவு கொண்டது. உயிர்வாழுவதற்கு வேறு வழியறியாது அயற்கிராமங்களை அண்டி வந்தவர்களில் 100 க்கு மேற்பட்டோரின் எலும்புக் கூடுகள் ஓயாத அலைகள் இரண்டின் பின் பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டது. 184 பேர் இரண்டு வருடங்களில் காணாமல் போயிருக்கின்றனர். எலும்புக் கூடுகளின் நகரம் என அழைக்கப்பட இது காரணமாயிற்று. இவர்கள் ஒவ்வொருவரிலும் உலகின் தலை சிறந்த பிரஞ்சுச் சிறுகதையாளன் மாப்பசானளின் "நல்ல நண்பர்கள்" சிறுகதையின் உணர்வலைகள் பட்டுத்தெறித்தன. இந்த உணர்வலைகளைத் தாங்கி தன் கவிதைகள் ஊடே வெளிவந்தான் கவிஞன் ஒருவன்.

மனம் எகிறி, எகிறி
காற்றை விசாரித்தது.
ஊருக்குள் வந்து
உடல் சிதைந்து
கூடான உறவுகளின்
கதை கூறமுடியாது
காற்று விம்மிற்று. (அநாமிகன்)

துயரத்தை சுமந்த மனிதர்கள் தலை நிமிர்ந்தனர். அவர்கள் தோள்நிமிர்த்தி தலை உயர்த்த வழிசமைத்தது ஓயாத அலைகள் இரண்டு. இதுவே பின்னாளின் வெற்றிக் கெல்லாம் வழிசமைக்கும் சமர்களின் அத்திவாரத்தின் மூலைக்கல்லாயிற்று. இந்த வெற்றியின் உணர்வுகளும் உளியாகி காதறியச் செதுக்கியது.

நம்பிக்கை துளிர்த்துவிட்ட மகிழ்வழிக்கும் வாழ்வை பலரும் பாடினர். எனினும் நிலமெங்கும் முளைத்திருந்த மிதிவெடிகள் மக்களின் வரவையும் வாழ்வையும் தாமதிக்க வைத்தது.

முற்றத்தில் படர்திருந்த
நெருஞ்சிகளின் சாம்பலை
அள்ளிச் சென்றது - காற்று
அச்சம் துறந்த ஆட்காட்டிகளின்
பாடலில் நிரம்பி வழிந்தன- வெளிகள்

**(அன்ரன் அன்பழகன்)**

உற்பத்தி மையமாய்,வணிக மையமாய், போரின் மையமாய் திகழ்ந்த இந்தப் பட்டணம் இப்போது சமாதானத்தின் மையமாகவும் திகழ்கிறது. நகரமையத்தினூடே நெடுஞ்சாலை வழியே நகர்கின்ற பார ஊர்திகளைப் பாத்தும், தன் புன்னகையை மௌனத்துள் கரைத்துக் கொள்கிறது. இந்நிலம் -

இந்த நிலைமை வன்னிப் பெருநிலப்பரப்புக்கு மட்டுமல்ல, மட்டக்களப்பின் படுவான் கரைக் கிராமங்களுக்கும் திருக்கோணமலையினவிடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் பொதுமையாக அமைகிறது.

**அன்ரன் அன்பழகன்**

## நெஞ்சில் சுடரும் மாலதியின் 15ம் ஆண்டு நினைவுகள்



2ம் லெப் மாலதி
[ பேதுறு சகாயசீலி
மன்னார் ]

நாற் சுவரே உலகமென
நம்பி நின்ற பெண்களைப்
பார் உலகை எனப்
பார்ப்பிக்கச் செய்தவளே.

பாரம் சுமக்கவல்ல
படைத்தது;பெண்களை
வீரத்தரசிகளாய்
வீதியுலா வருவதற்கே யென
உரக்கச் சொன்னவளே,
மாலதி,
நீயே வரலாற்றின் முதல்வரி,

'ஈழம்' தவிர்ந்தெந்த
இன்பமும் யாம் வேண்டோமென
களத்தில் வீழ்கையில்
கடைசியாய் நீ சொன்னாய்.
பூட்டுடைத்து விடுதலைக்காய்
புறப்பட்ட மகளே-நீ
காட்டிச் சென்ற தெவ்வழி,
கடைசி வரை நாமும் அவ்வழி!

- வெளிச்சம்

# உயிர்ப்பினை நோக்கி........

உயிர்ப்பினை நோக்கி........

## அரங்காற்றுகை பற்றிய மனப்பதிவு


மலர்மதனன்

**நாம்** பழையவற்றை எல்லாம் மறந்துவிட்டோமா? இல்லை. எல்லாவற்றையும் நாம் எப்படி மறக்க முடியம்? பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாம் எப்படி மறக்கமுடியும்? சமாதானப் புறாக்கள் நம்பிக்கையோடு சிறகடிக்கும் இந்தமண்ணின் கடந்தகால நாட்களில் கைகள் கட்டப்பட்டு கூட்டிச்செல்லப்பட்டு, இன்றும் சிறிலங்காவின் சிறைகளில் ஏக்கப்பெருமூச்சுடன் காத்திருக்கும் எமது சகோதரர்களை நாம் எப்படி மறக்கமுடியும்? சுயநலவாத உலகிற்குள் நாம் சிக்கண்டு போனோமா? என்கின்ற சந்தேகக் கீறல் எம்மனதிற்குள்ளாகவே எழும்படியான தொனிப்பைத் தொட்டுக்கொண்டு தமிழ் அரசியற் கைதிகள் பற்றிய பல செய்திகளையும் பல்வேறு கோணங்களில் பேசியவாறு தென்னிலங்கையின் வெவ்வேறு அரங்ககளிலும் எண்ண அதிர்வு மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டிருக்கிறது வன்னி ஆசிரியர்களின் **"உயிர்ப்பினை நோக்கி..."** என்கிற திரு.க. விஜயசேகரனின் அரங்காற்றுகை.

நெறியாளர் விஜயசேகரனின் ஒரு கவிதை அடியுடன் திரை கரைகளை நோக்கி விரியத் தொடங்குகின்றது. திரை முற்றாக விரிய கவிதை முடிகிறது. இப்போது அரங்கில் முழுமையான காட்சி புலப்படுகிறது. ஐந்து நடிகர்கள் ஒரு புத்தகத்தை புரட்டும்படியான காட்சி அது. இரத்தக்கறை படிந்த அந்தப்புத்தகத்தை, அதன் பக்கங்களை மிகுந்த உழைப்பாளிகளான அவர்கள் மிகவும் ஓர்மத்துடன் வியர்வை சிந்தச்சிந்த புரட்டுகிறார்கள்.....

அரங்கில் காட்சி ஓடிக்கொண்டிருக்க எமக்குள் ஆயுதப்போராட்டம் வலுப்பெறுவதற்கு முன்னான காலம் ஓடுகிறது. சந்தோசத்தால் நிரம்பியிருந்த இலங்கைத்தீவு நினைவுக்கு வருகிறது. அன்றைய இலங்கையின் சமூக வாழ்வை காட்சி அமைப்புக்குள் சிறைப்பிடித்து நெறியாளர் காட்டியிருப்பது ரசிக்கமுடிகிறது.திடீரென்று அரங்கில் இசைமாறுகிறது. காட்சி மாறுகிறது. ஆக்கிரமிப்பு நோக்கங்கொண்ட மூன்ற மனிதர்கள் இசையுடன் அசைந்து அரங்கில் தோன்றுகின்றனர். அந்தோ பரிதாபம் தமிழர்களின் சந்தோசமெல்லாம் காணாமல் போகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வருவதாக ஆக்கரமிப்பாளரின் தலைவன் அறிவிப்பதுடன் நில்லாது கண்கட்டப்பட்ட நீதிதேவதையின் தராசில் அச்சட்டத்தை இடுவதாக புலக்காட்சி நிகழ்கிறது. சமநிலை குழம்புகிறது. அரங்கு தலைகீழாக மாறுகிறது. துயர அலறல்கள், அவலங்கள், கூக்குரல்கள் ஆனாலும் எதுவும் செய்யமுடியாத கையாலாகாத்தனம் அரங்கில் , தமிழரில் தென்படுகிறது. தமிழர்களின் காலவெளியில் நிகழ்ந்த மிகப்பெரும் மாற்றம் அழகாக சித்தரிக்கப்படுகிறது.

எமது நினைவுகள் 1970களுக்கு தாவுகிறது. 1978இல் இலங்கைப் பாராளுமன்றில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமும் அதன் விளைவுகளும் ஞாபகத்திற்கு வருகின்றன. தமிழர் பிரதேசமெங்கணும் எந்தவேளையிலும் அப்பாவித்தமிழர் இச்சட்டத்தின் உதவியுடன் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொரு பார்வையாளனுக்கும் புலப்படத் தொடங்குகின்றது. பார்வையாளர் அரங்கு ஒருவித மௌனத்துள் ஆழ்ந்து போகிறது. காட்சிகள் தொடர்கின்றன. அன்றிலிருந்து இன்றுவரை கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பட்ட சித்திரவதைகளைஅரங்கு தத்ரூபமாக நடத்திச்செல்கிறது. வெலிக்கடை பிந்துனுவெவ சிறைகளில் நடந்த கொடூரங்கள் படம்பிடிக்கப்படுகின்றன. கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் கைதிகள் மீது நிகழ்த்தப்பட்ட வெறித்தனம் நெஞ்சைப் பாரமாக்குகிறது. கைதிகளின் உடல் வதைகளுக்கு அப்பால் அவர்களின் மனவதைகள், அவர்களைச்சார்ந்த உறவுகளின்



மனவதைகள், தனிமை, என்று அரங்கு பிரச்சினைகளை முன்வைக்கிறது. கடைசியாக இன்று தோன்றியுள்ள சமாதான காலம் வருகிறது. அப்போதும் கைதிகள் அதேநிலையுடன் மாற்றமின்றி வைக்கப்பட்டிருப்பதுடன் அவர்களைப்பற்றிய எந்தமுடிவும் எடுக்காத நிலையும் இருப்பதை பின்னணியில் சிறைக்காட்சி தெரியும்படியாக நடத்திச் செல்வது சித்தரிக்கின்றது.

சமாதானத்தை நோக்கி அரசம் புலிகளும் நகர்கிற வேளையில் பயங்கரவாத தடைச்சட்டம் இடையில் வந்து தடுப்பதாக காட்சி வருகிறது. நிரந்தர சமாதானத்துக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் நிரந்தர எதிரி என்கிற முடிவு முன்வைக்கப்படுகிறது. நிரந்தர சமாதானம் என்பது கேள்விக்குறியா என்கிற கேள்வியுடன் அரங்கு ஓய்வுக்கு வருகிறது. பார்வையாளர் மத்தியில் விம்மல் ஒலிகள் மாத்திரமே கேட்டவண்ணம் இருக்கின்றன.

பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கும்வரை உண்மையான சமாதானம் உசிதமில்லை என்பதுடன் தமிழர்கள் எங்கும் எப்போதும் எந்தநிலையிலும் கைது செய்யப்படலாம் என்கிற பெரிய உண்மை தெளிவாக சொல்லப்படுகிறது. பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இருதரப்பாரும் தமிழ் அரசியற் கைதிகள் பற்றியும் எல்லாப்பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாய் இருக்கம் இச்சட்டத்தை பற்றிய ஒரு முடிவுக்கு வராமலும் ஏனைய முயற்சிகளை முன்னெடுப்பது சிரமம் என்கிற தொனிப்பை தென்னிலங்கை சமூக அரங்குகளில் இவ்வரங்காற்றுகை பதிவு செய்துள்ளது எனலாம்.

நீங்கள் பார்த்தது ஒரு நாடகமல்ல
எங்கள் கடந்த காலம்
நீங்கள் பார்த்தது வெறும் கற்பனைச் சம்பவங்கள் அல்ல
தமிழர் வாழ்வின் நிதர்சனங்கள்

என்று தொடங்குகிறார் சத்தியானந்தன்.
கொதிப்பும் துயரவெளிப்பாடும் நிறைந்த தனது உரைக்குப்பின் அவர் பார்வையாளர்களின் எண்ணவோட்டங்களை பகிர்ந்து கொள்ளுமாறு அழைக்கின்றார்.

வவுனியாவில் இவ்வரங்காற்றுகை ஆசிரியர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.மூன்று தரப்பினரையும் சேர்ந்த பலவேறு பார்வையாளர்களும் தமது கருத்தை சுதந்திரமாக வெளியிட்டார்கள். அவர்களது பேச்சு இதுவரை காலமும் தாம் தமிழ் அரசியல் கைதிகளைப்பற்றி யோசிக்காமல் இருந்ததைப்பற்றி துயரப்படுவதாவே இருந்தது. இதேபோல மட்டக்களப்பு திருகோணமலையிலும் இப்படைப்பு பெரும் வரவேற்பை பெற்றதுடன் கைதிகளுக்காக இன்றே போராடவேண்டும் எனும் மனநிலைக்கு பார்வையாளரை கொண்டுவந்தது. கொழும்பில் மேடையேற்றப்பட்டபோது இப்படைப்பை மூன்றினத்தோரும் பார்த்து மனிதாபிமான அடிப்படையில் கைதிகளின் விடுதலை பற்றி குரல் எழுப்ப வேண்டும் எனக்கூறியது இந்நாடகத்தின் வெற்றி எனலாம் .

இவ்வாறு தென்னிலங்கையில் பல இடங்களில் பல்லினச்சமூகச்சூழலில் இப்படைப்பு அது காவிச்சென்ற செய்தியும் ஏற்றுக்கொள்ளப்படவிருப்பது ஒரு நல்ல சகுனமாகத் தெரிகிறது.அனைத்து சிறைகளிலும் உள்ள கைதிகளையும் பார்வையிடும் நோக்குடன் இக்குழு சென்றாலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் மாத்திரமே கைதிகளைக் கண்டு அவர்களுடன் பேச முடிந்தது.

# உங்கள் தேவைகள் என்ன?



வாழ்த்துமடல்கள் வடிவமைப்பா,
அழைப்பிதழ்கள் வடிவமைப்பா,
புத்தகங்கள் வடிவமைப்பா,
எந்தத் தேவையாயினும் நாடுங்கள்.

# நிலாபதிப்பகம்

**பிரதான சாலை** **கிளிநொச்சி**

அதி நவீன
கணனி
அச்சமைப்பில்
விரைவாகவும்,
நேர்த்தியாகவும்,
அழகாகவும்
செய்து
பெற்றுக்கொள்ள

நிலா பதிப்பகம்




## நிலாபதிப்பகம்

கிளை நிறுவனங்கள்


வ.வ.ப.நோ.கூ.ச.பதிப்பகம்
பரந்தன் சாலை
புதுக்குடியிருப்பு.

நிலா
பதிப்பகம்

மாறன் பதிப்பகம்
முல்லைச்சாலை
தருமபுரம்.

# வெளிச்சம்

**கலை, இலக்கிய சமூக இதழ்**






திருமதி. அடேல் பாலசிங்கம் எழுதிய

## 'சுதந்திர வேட்கை'

விலை ரூபா: 1500



திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற இந்தப் புதுமையான நூல் விடுதலைப் புலிகளின் போராட்டவாழ்வை, உள்ளிருந்த பார்வையாக, ஆழமாகத் தரிசிக்கின்றது. சுயசரித விவரணமாகவும், வரலாற்று நோக்குடனும் எழுதப்பட்ட இந்நூலில், விடுதலைப்புலிகள் பற்றி இதுவரை வெளியாகாத பல்வேறு சுவையான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. கடந்த இருபது ஆண்டு காலமாக தமிழீழ சுதந்திரப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும், திருப்பங்களையும் இந்நூல் துல்லியமாக எடுத்துக் கூறுகின்றது.

கிடைக்குமிடம்:
**விடுதலைப்புலிகள்**
**கலை, பண்பாட்டுக் கழகம்**
யாழ் மாவட்டச் செயலகம்
கோண்டாவில்.